Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 வெள்ளி - 15 11 - 17 - யூன் - 2004




## பலாலி விமானத்தளம் தமிழீழ நெஞ்சில் ஓர் முள்

## தாயகத்தின் தாயும்.. தாயகத்தின் தலைவனும்..



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 11 . 06 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# மாற்றம் அவசியம்....!

கசாப்புக்கடை ஒன்றை ஞாபகப்படுத்தியவாறு இலங்கையின் நாடாளுமன்ற அமர்வு நடந்து முடிந்துள்ளது.

அரசை தக்கவைத்துக்கொள்ள தேவையான அறுதிப்பெருன்பான்மை இல்லாத அரசு, அதிகாரத்தை இழக்கவும் விரும்பாது நிருபிக்கவும் முடியாது திணறுகின்றது.

மத்தியில் ஒரு நிலையான அரசை நிறுவ முடியாத அளவுக்கு இலங்கையின் அரசியலமைப்பு சிங்களதேசத்தை பரிதாப பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது.

இந்தநிலையில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை தொடரும் என எதிர்பார்க்கமுடியாது.

இதற்குத் தேவையான அடிப்படை தகுநிலையைக்கூட இந்த அரசு கொண்டிருக்காத நிலையில் புலிகளுடனான சமாதான பேச்சுக்கள் தொடர்வது தொடர்பாக சனாதிபதி சந்திரிக்காவும் அவரது பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யும் அறிக்கைகளை விடுப்பதும், பேசுவதும் வேடிக்கையாகும்.

இப்போது இவர்கள் விடுக்கும் அறிக்கைகள் அல்ல பிரச்சனை, சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்த காலத்திலிருந்து காத்திருக்கும் போரில் துன்புற்ற மக்களுககான, இதுவரை குறிப்பிடும்படியான உதவிகளோ, ஒழுங்கான பரிகாரமோ கிட்டாது இயல்பு நிலையை இழந்து வாழும் மக்களுக்கான தீர்வு என்ன என்பதே முக்கியத்துவம் பெறுகிறது.

சமாதானத்துக்கான வாசலில் முற்களை விதைத்து விட்டு சிங்கள தேசம் தெருச்சண்டியர்கள் போல செயற்படும் நிலையில் சர்வதேச சமூகம் இன்னமும் மேம்போக்காக நடந்துகொள்வது காலத்துக்குப் பொருந்தாத ஒன்றாகவே இருக்கிறது.

இதேவேளை தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்றைப்பற்றி சிங்கள அரசுகளிடம் பேசவோ அல்லது அது தொடர்பான எந்த முயற்சியிலும் ஈடுபடமுடியாத நிலையில்தான் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நிலைப்பாட்டிற்கு புலிகள் வந்தார்கள் என்பதால் புலிகளின் இந்த நிலைப்பாட்டை நிச்சயம் சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டுள்ளது.

ஆனால் இதற்கு அப்பால் தமிழ் மக்கள் தமது சொந்த மக்களின் உதவியோடு சர்வதேசத்தின் முன்னிலையில் சுதந்திரமாக காரிய மாற்ற தடையாக புலிகள் மீது இன்னமும் தடைகளை தொடரும் அரசுகள் இதனை நீக்குவது தொடர்பாக பரிசீலிக்க முற்படுதல் வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் சமாதானத்துக்கான காத்திருப்பு காலத்தைப் பயனுள்ளதாக மாற்றுவதோடு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டும்.

ஏனென்றால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சமாதானத்துக்காக அதிகமாகவே அற்பணிப்புடன் பங்காற்றி வருகின்றார்கள்.

அத்தோடு இலங்கையில் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும் போது யுத்த நிறுத்தம் செம்மையாக நடைமுறையிலிருக்கிறது.

இவையெல்லாம் சமாதானத்தின் மீதும், சர்வதேசத்தின் விருப்பங்களை மதித்தும் புலிகள் இயக்கம் செயற்படுவதையே காட்டுகிறது.

ஆகவே சர்வதேச சமூகம் சமாதானத்துக்கான அற்பணிப்பாக புலிகள் மீதான தடையை நீக்குவதுடன் தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு அதிகமாகவே அழுத்தம் கொடுக்கவேண்டும். இது இலங்கையில் நிரந்தர சமாதானம் நோக்கிய பயணத்திற்கு வழிவகுக்கும்.

# தூரனின் பார்வை...

## சனநாயகத்திற்கு பக்கவாதம்

தரம் கெட்ட அரசியல்நடவடிக்கைகளின் அரங்கேற்றுமையமாக சிறிலங்காப் நாடாளுமன்றம் விளங்குகின்றது என்றால் அதில் மிகையில்லை.

ஒரு நாட்டின் மக்கள் தங்களை - தங்களின் மண்ணை நல்லமுறையில் நெறிப்படுத்தி ஓர் உன்னதமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றப் பாதையில் வழிப்படுத்தி ஆள்வதற்கென தேர்ந்தெடுத்து தமது நம்பிக்கைக்கும் கௌரவத்திற்குமுரிய பிரதிநிதிகளாக அவர்களை இனங்காட்டி நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியை தேர்தல் காலங்களின்போது வெளிப்படையாகவே உணரமுடியும்.

சனநாயகத்தின் காவலர்களாக, மனித உரிமைகளைப்பாதுகாக்கும்மான் புடையோராக, உயர்ந்த கொள்கைப் பற்றுக்கொண்ட இலட்சியவாதிகளாக தம்மால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் விளங்க வேண்டும் என்ற மக்களின் அபிலாசைகளை அவர்கள் எந்தளவிற்குக் கௌரவித்து, மதிப்பளித்து அந்தமக்களின் நம்பிக்கைகளுக்கு ஏமாற்றம்தராமல் செயற்படுகிறார்கள் என்ற கேள்விக்குரிய பதிலைத்தேடும்போது, கிடைக்கும் விடையின் தன்மை ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது. இதற்கு வேறொரு நாட்டையும் உதாரணம்காட்டத்தேவையில்லை சிறிலங்காவே இதற்குப்பொருத்தமான சிறந்த எடுத்துக்காட்டாகும். சிறிலங்காவின் சனநாயகத்தின் தன்மை குறித்து வரைவிலக்கணத்தை இரண்டேவார்த்தைகளில் கூறிவிடலாம்.

பேரினவாத சனநாயகம் என்பதுதான் அதுவாகும்: இந்த அடிப்படையில் பார்த்தால் சிறிலங்காவின் ஆட்சித்தளமும், அரசியல் தளமும் எந்தவகையில் தமது நகர்வுகளை மேற்கொள்கின்றன என்பதை சுலபமாகப் புரிந்துகொள்ளமுடியும்.

உலகின் பண்வித்திரமான விடயமாகக்கருதப்படும் நாடாளுமன்ற சனநாயகத்தின் செயற்பாட்டுத்தன்மை சிறிலங்காவில் எவ்வாறு கடைப்பிடிக்கப் படுகின்றது என்று எவரும் கேட்கநேர்ந்தால் அதற்கு விடையாக, நிறைவேற்று அதிகாரவலுக்கொண்ட - சர்வவல்லமைபொருந்திய சக்தியான - சனாதிபதியின் சர்வாதிகாரக் கட்டுப்பாட்டின்கீழ் அது விலாசமற்று ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கின்றது என்று கூறிவிடலாம்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறை எப்போது அமுளுக்கு வந்ததோ அன்றைக்கே இங்கு சனநாயகத்துக்குப் பக்கவாதம் ஏற்பட்டு அதனை ஒரு மூலையில் தூக்கிப்போட்டாயிற்று. பக்கவாதம் பிடித்த இலங்கையின் சனநாயகம் கிட்டத்தட்ட இரண்டரை தசாப்தகாலத்துக்கும் மேலாக நலிந்து நலிந்து இப்போது சேடமிளுக்கும் நிலைக்கு வந்துவிட்டதென்றே கூறவேண்டும்.

அதுவும் சனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்குவந்த நிறைவேற்று அதிகார சர்வாதிகாரியான சந்திரிகாவின் அதிகாரம் மேலோங்கி 1995ற்குப் பின் இன்றுவரையான காலத்தில்... சமாதானத்திற்கான யுத்தம் என்ற புதிய கோட்பாட்டை [illegible] அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தத்தொடங்கியது முதல் இன்றுவரையான காலத்தில் சனநாயகத்தின் இயக்கம் மெல்ல மெல்ல ஓங்கி ஒருவகையான சமாதி நிலையை அடைந்துவிட்டது என்றே கூறமுடியும்.

அண்மையில் - அதாவது சரியாக 70 நாட்களின் முன்னர் சிறிலங்காவின் நாடாளுமன்றத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டு ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியாளர்கள், இந்த 70 நாட்களுக்குள் தமது பெரும்பான்மைப்பலத்தை நிரூபிக்கமுடியாதவர்களாக நித்திய கண்டம் பூரணஆயுசு என்ற நிலையில் அல்லாடிக் கொண்டும் அடிபட்டுக்கொண்டும் இருப்பதாகப் பார்க்கும்போது, ஸ்திரமற்ற அரசின் சனநாயகவலுக் குறித்த சந்தேகம் மேலும் அதிகரிக்கவே செய்துள்ளது.

அதுவும் இந்த 70நாள் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றம் கூடியமூன்றுநாட்களிலும் - அங்குகூடிய சனநாய கத்தின் காவலரண்களாக மக்களின் பிரதி நிதிகள், அங்கு நடந்துகொண்டவிதம் அல்லது நாடாளுமன்றத்தை மதித்து அவர்கள் செயற் பட்டவிதம் சிறிலங்காவில் சனநாயக தர்மம் மற்றும். சனநாயக உரிமைகள்போன்றவை எந்தளவிற்குக் கொச்சைப்படுத்தப்பட்டு - அவமதிக்கப் பட்டுவருகிறது என்பதற்கு மிகச் சிறந்த நிகழ்வுக்காட்சியாகப் பதிவுசெய்துகொண்டுள்ளன.

1977ல் தார்மீக அரசு என்ற பெயரில் - ஒரு தர்மிஸ்டர்(ஜே.ஆர்,ஜெயவர்த்தனா) அசோகச்சக்கரத்தை அடையாளக்குறியீடாக்கிக் கொண்டு ஆட்சியை ஆக்கிரமிக்கத் தொடங்கியது முதல் சிறிலங்காவின் அரசியல் முற்றுமுழுதாகவே 'சோக'ச்சக்கரமாக சுழலத் தொடங்கிவிட்டது.

சிறுபான்மைகளின் தார்மீக உரிமைகள் அனைத்தையும் முற்றுமுழுதாகப் பறித்த அரசும் - தமிழ் மக்களை நோக்கி யுத்தமா? சமாதானமா? எனக்கேட்ட அரசும் அதுவேயாகும்.

அதன்பின் அந்த தர்மிஸ்டரின் தார்மீக அரசால் சிறிலங்காவின், அரசியலின் சனநாயகத்தன்மை என்பது புலனியக்கமற்ற ஒன்றாக முடக்கம் பெற்று, நாடாளுமன்ற வளாகத்தில் அதற்கான விலாசத்தை இழந்துபோயிற்று அதாவது நிறைவேற்று அதிகாரசனாதிபதி, சனநாயகமுறையில் தேர்தலில் வென்ற ஒருவராக தன்னைப் பதிவுசெய்துகொண்டாலும், அவர் ஒரு கடுமையான - ஈவிரக்கமற்ற சர்வாதிகாரியாக நடந்துகொண்டதுடன் நாடாளு மன்றத்தை தன் சுண்டுவிரலசைவால் ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டவராக விளங்கினார்.

அவர் வழிவந்த அனைத்து சனாதிபதிகளும் அந்த நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழிப்போம் என்று வாக்குறு தியளித்து ஆட்சிக்குவந்தாலும் கூட, அந்த சர்வ வல்லமை பொருந்திய பதவியைக் கைவிடும் சனநாயகச் சிந்தை அவர்களுக்கு வரவேயில்லை.


இதுவே சிறிலங்காவில் சனநாயகம் என்பது பாரிசவாத நிலை அல்லது கோமா நிலை யை அடைவதற்குக் காரணமாயிற்று.

சனநாயகம் 'கோமா' நிலைக்குச் சென்றுவிட்ட அரசியல் சூழலில் நாடாளுமன்றக் கட்டடம் மனித உரிமைகளை மதிக்காத கும்பல்களின் மோதல்கூடாரமாக மாறிவிட்டதானது. வியப்புக்குரிய ஒன்றே கிடையாது.

அதுவும் இன்றைய சிறிலங்காவின் தென்பகுதிப் பெரும்பான்மை சிங்கள மக்களும், ஏனையபெரும் பான்மைக்கட்சியினரை வால் பிடிக்கும் சிறுபான்மை மக்களும் பௌத்ததர்மம் பேசும் 'தம்மபத' தாசர்களும் தம்மால் தேர்ந்தடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நாடாளுமன்றத்தினுள் அடிக்கும் கூத்துக்கள், குத்துக்கரணங்கள், பேசும்பேச் சுக்கள், மோதல்கள் என்ற இன்னபுற அனைத் தின் மூலமும் அந்தமக்கள் மன்றத்தை அரசியல் காடைத்தனங்களின் அரங்கேற்று மையமாக மாற்றி விட்ட அவலத்திற்குக் காரணமாகி விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு வெட்கப்பட வேண்டியவர்களா கிவிட் டார்கள்.

அடுத்தவர்களின் சுதந்திரத்தை மதிக்கத்தெரியாதவர்கள் மானிட ஐக்கியத்தை அங்கீகரிக்காதவர்கள், சிறுபான்மை இனமக்களின் உரிமைகளை உதாசினம் செய்ப வர்கள் இவை அனைத்தின்மூலமும் நாட்டை முன்னணிக்கு வரமுடியாமல் தடுப்பவர்களும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என தம்மை பிரகடணம் செய்து கொண்டு ஆட்சிபீடம் ஏறியுற்ற நிலையில் தான் நாடாளு மன் றத்தை சன நாயகத் தின் சமாதிக்கூடமாக மாற்றிவருகின்றார்கள்.

அத்தோடு மதபீடத்தை அலங்கரிக்க வேண்டிய ஆன்மீகவாதப் பிக்குகள் இப்போது அரசபீடத்திற்கு ஆசைப்பட்டதால் ஏற்படும் அசிங்கங்கள்வேறு... எப்படியோ... இவர்கள் எல்லோரும் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண்பார்களோ இல்லையோ, சனநாயகத்திற்கு ஒரு முடிவு கட்டிவிட்டுள்ளார்கள் என்பது மட்டும் சர்வநிட்சயமான விடையம்.



# சமாதானத்தின் அநாதைகள்

**நிலாந்தன்**

"தற்போதைய சமாதானச் சூழலில் போரால்பாதிப்படைந்த பகுதிகளைப் புனரமைக்க வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்கள் நிதிஉதவிகளை வழங்கி வருகின்றன. அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு புனரமைப்புப்பணிகள் நடந்து முடிந்துள்ளன. இப்பணிகளில் தொழிலாளர்களாகப் பணியாற்றிய பெரும்பாலானவர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். எமது பகுதியில் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளகக்கூடிய தொழிலாளர்கள் இல்லாத காரணத்தால் எமது மண்ணுக்கு வந்த முழுப் பணமும் மீண்டும் கூலியாட்களின் சம்பளம் என்ற வடிவில் தென்னிலங்கையையே சென்றடைந்துள்ளது..."

இப்படிச் சொல்லியிருப்பவர் கிளிநொச்சி அரசஅதிபர். சிலகிழமைகளுக்கு முன்பு கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்லூரியில் பயிற்சி முடித்துவெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதல் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டுபேசியபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இது முதலாவது.

இரண்டாவது, சிலமாதங்களுக்குமுன்பு கிளிநொச்சியிலுள்ள ஒரு மூத்த அச்சக நிர்வாகியுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்.... இங்கு தற்பொழுது ஆண்களுக்கு வேலைபெறுவது மிகச்சுலபம் என்று ஏன் என்று கேட்டேன். அவர் சொன்னார்.... இங்கே இப்பொழுது வேலைக்கு ஆண்களே கிடையாது. குறிப்பாக அச்சகவேலைபோன்ற சில வேலைகளுக்கு ஆட்களே கிடையாது என்று.

மூன்றாவது, கிளிநொச்சியில் உள்ள ஒரு உணவக உரிமையாளர் சொன்னார்.... ஒரு சமையல்காரருக்கு நாளொன்றுக்கு சுமாராக 400ரூபாய் கொடுக்கப்படுகிறதாம். அதோடு அவர் சமையல் செய்தபின் அடுப்பில் மிஞ்சும் கரியை விற்பதால் அவர் நாளொன்றுக்கு சுமாராக 80ரூபாய் சம்பாதிக்கிறாராம். இதுதவிர மூன்று வேளைச்சாப்பாடும் கொடுக்கப்படுகிறதாம். ஆனாலும் சமையல்வேலைக்கு ஆட்களைக் கண்டுபிடிப்பது மகாகஸ்டமாம். ஏன் என்று கேட்டேன். அவர்சொன்னார்.... யாழ்ப்பாணத்துச் சாப்பாட்டுக்கடைகளில் சமையல்காரருக்கு நாளொன்றுக்கு சுமாராக 700ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று. இதனால் சமையல்காரர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள்.

சமையல்காரர்கள் மட்டுமல்ல பொதுவாக உடல் உழைப்பாளிகள் வன்னியிலிருந்து வெளியேறும் ஒருபோக்கு கடந்தசுமார் இரு ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. வன்னியில் அருவிவெட்டுக் காலங்களில் வேலைக்கு ஆட்களைப்பிடிப்பது மிகக் கஸ்ரம். இப்பொழுதெல்லாம் நாள் வேலைக்கு வருவதைவிடவும் பொருத்தம் பேசி வேலைக்கு வரவே உடல் உழைப்பாளிகள் விரும்புகிறார்கள். வேலை கொள்வோருக்கும் இது வசதியான ஓர் ஏற்பாடாயிருப்பதாகக் கூறப்படுகிறது.

சமாதானம் என்று ஒன்றுவரப்போய் இங்கிருந்து குறிப்பாக ஆண்தொழிலாளர்களை ராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளைநோக்கி அள்ளிக்கொண்டுபோய்விட்டது. 'அங்கே தொழில்வாய்ப்புக்கள் அதிகம். ஊதியமும் அதிகம். இதுதவிர ஏனைய வசதிவாய்ப்புக்களும் அங்குண்டு.

தற்சமயம் ஒரு கூலித்தொழிலாளிக்கு நாளொன்றுக்கு சுமாராக 300ரூபாய் தரப்படுகிறது. இது மத்திய கிழக்கு நாடான கட்டாரில் ஒரு கூலித்தொழிலாளிக்கு வழங்கப்படும் நாட்சம்பளத்தைவிட சில பத்து ரூபாய்களே குறைவானது என்று அங்கிருந்துவந்த ஒருவர் சொன்னர். பிரதேசம் ஒன்றில் கூலித்தொழில் செய்து அதில்பாதியை சாப்பாட்டுக்குக் கொடுத்துவிட்டு கையில் எதுவுமே மிஞ்சாத ஒரு நிலையோடு ஒப்பிடுகையில் இங்கே ஊரோடு நாள்வேலை செய்வது மிகவும் லாபகரமானதுதான். ஆனால் பிரச்சினையாயிருப்பது கௌரவமே என்றுமவர்சொன்னார்.

உடல்உழைப்பாளிகளுக்கு மவுசு கூடக்கூட அவர்களுடைய சம்பளமும் அதிகரிக்கிறது. எனவே மதிப்பும் அதிகரிக்கிறது. இது ஒருபுறம் கூலித்தொழிலை முன்னைய குடிமைத்தொழிலின் எச்சசொச்சங்களிலிருந்து விடுவித்து, அதை அதற்குரிய நவீன வடிவம் ஒன்றைநோக்கிக் கொண்டுபோகிறது. இன்னொருபுறம், எந்திரமயமாதல் பெருமளவுக்கு நிகழ்ந்திராத ஒரு சமூகச்சூழலில் உடல் உழைப்பாளிகளுக்குத் தட்டுப்பாடு உண்டாகும்போது அது குறிப்பாக விவசாயஉற்பத்தியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தப்போகிறது?

அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலத்தின் பொருளாதாரம் எனப்படுவது பிரதானமாக விவசாயப்பொருளாதாரமே.



எந்திரமயமாதல் அதிகம் நிகழாதவிடத்து விவசாயப்பொருளாதாரத்தில் உடல் உழைப்பாளிகள் தவிர்க்கப்படவியலாத ஒருபாத்திரத்தைவகிக்கிறார்கள். அவர்கள் இப்படி அருகிச் செல்வது என்பது, காலப்போக்கில் வன்னிப் பொருளாதாரத்தின் அடித்தளத்தையே ஆட்டங் காணச்செய்யக்கூடியது.



எனவே, வன்னிப்பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதுபற்றி சிந்திக்குமெவரும் இந்தஇடத்தில் ஒருபாரதூரமான கேள்விக்கு பதில்சொல்லிவிட்டே அப்பால் செல்லமுடியம்.

அதாவது, வன்னியில் ஏன் நாள் வேலை தொழிலாளர் அருகிச்செல்கிறார்கள்?

இதற்கு மூன்று பிரதான காரணங்களைக்கூறமுடியும். முதலாவது யுத்தம், இரண்டாவது வெளிநாட்டுக்காசு, மூன்றாவது சமாதானம்.

முதலாவதான, யுத்தம். யுத்தம் முதலில்தாக்கியது ஏழைத் தொழிலாளர்களையே. முன்பு எல்லாவன்னிக்கிராமங்களிலும் தொழிலாளர்கள் உதிரிகளாக அல்லது சிறுசிறு குடியிருப்புகளாகக் காணப்பட்டார்கள். யுத்தம் வன்னிக்கிராமங்களின் கட்டமைப்பையே சிதைத்துவிட்டது. அது உடல்உழைப்பாளிகளை இடம்பெயரவைத்தது குறிப்பாக ஆண்களைக்கொன்றது. அல்லது காணாமல்போகச் செய்தது, அல்லது கைது செய்தது. இன்னொருபுறம் அவர்களைப் போராட்டத்தில் சேர வைத்தது. இதனால் நாள் வேலையில் ஈடுபடும் ஆண்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதுதவிர யுத்தம்கொண்டுவந்த இடப்பெயர்வுகள் ஏழைத்தொழிலாளர்களை அவர்கள் தங்கிவாழ்ந்த நிலத்திலிருந்து அகற்றியது. இதனால் அவர்களுடைய தொழில் தெரிவுகள் மாறத்தொடங்கின. மாறியசூழலில் புதிய இடத்தில் அவர்கள்புதிய தொழில்களை நாடிப் போயினர். இப்படிப்போனவர்களின் ஒரு பகுதியினர் படையினரால் கட்டுப்படுத்திய பொருட்க்களை கொண்டு வரும் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் இறுக்கமான பொருளாதாரத்தடையின்போது, உயிராபத்தான காட்டெல்லை களைக்கடந்து அல்லது ராணுவத்தின் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு பொருட்களைக் கடத்திவந்த இவர்கள் சிலசமயம் படையினரிடம் பிடிபடுவதுண்டு.

இத்தகைய கரணம்தப்பினால் மரணம் என்றிருந்ததொழிலில் ஒரு சிலதடவைகள் மட்டும் பொருட்களைக் கடத்தினால்போதும், குறிப்பிடத்தக்க அளவு உழைத்துவிடலாம். எனவே துணிச்சலான உடல்உழைப்பாளிகளின் ஒருபகுதியினர் இந்த வியாபாரத்தில் ஈடுபடலாயினர். இது ஒருகட்டத்தில் அவர்களை மதிப்புக்குறைந்த தொழிலில் நாட்ட மிளக்கச் செய்துவிட்டது. இதெல்லாம் முத லாவது காரணம்.

இரண்டாவது, வெளிநாட்டுக்காசு. வெளிநாட்டுக்காசு வந்து ஒருபகுதி வறிய, மற்றும் கீழ் மத்தியதரவர்க்கத்தின் வாழ்க்கைத்தரத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தி விட்டிருக்கிறது. இதனால் ஒருபுறம் கூலித் தொழிலுக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகிக் கொண்டுபோக இன்னொருபுறம் அதிகரித்த கூலியைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு மத்தியதரவர்க்கத்தின் நிதிநிலையையும் உயர்த்திவிட்டிருக்கிறது.

மூன்றாவதுகாரணம், யுத்தநிறுத்தம். முதலிருகாரணங்களான, யுத்தம், வெளிநாட்டுக்காசு என்பவை கொண்டுவந்த மாற்றங்களின் திரண்டவிளைவை சமூகம் பெருமெடுப்பில் அனுபவிக்கும் ஒருநிலையை யுத்த நிறுத்தமே கொண்டுவந்தது. பாதைகள் திறக்கப்பட்டன. இதனால் உண்டாகிய சமூக ஊடாட்டம் சனங்கள் தமது வாழ்க்கைத்தரத்தை நாட்டின் பிறபகுதியினருடன் ஒப்பிட்டு நிராசைப்படும் ஒரு நிலையைத் தோற்றுவித்தது. இது சமாதான கால இடப்பெயர்வுகளை ஊக்குவித்தது.

இப்பொழுது ஒருவிடுதலைப் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பும் வேலைகளுக்கு ஆட்களில்லாது போய்விட்டது.

சமாதானம் என்று ஒன்றுவரப்போய், வன்னியிலிருந்து தொழிலாளர்களைக் கவர்ந்து சென்றுவிட்டது. அது வன்னிக்கு எதையாவது கொண்டுவந்ததோ இல்லையோ இங்கிருந்து மனிதவளத்தைமட்டும் அரித்தரித்துக் கொண்டு போகிறது.

இதிலுள்ள பயங்கரம் என்னவென்றால் - யுத்தகாலங்களில் இப்பிரதேசங்களில் இருந்து மூளைஉழைப்பாளிகள் வெளியேறினார்கள். இப்பொழுது யுத்தநிறுத்த காலத்தில் உடல் உழைப்பாளிகள் வெளியேறுகிறார்கள்.

யுத்தமும் இங்கிருந்து ஆட்களை அகற்றியது. சமாதானமும் இங்கிருந்து ஆட்களை அகற்றுகிறது. யுத்தமோ, சமாதானமோ இழப்பு, இந்த நிலத்துக்குத்தானா?

சிலமாதங்களுக்குமுன்பு கிளிநொச்சியில் புலிகளின் திட்டச்செயலகத்தில் உதவி வழங்கும் நிறுவனங்களின் மினி மாநாடு ஒன்று நடந்தது. அதில் கலந்துகொண்ட ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி சொன்னாராம்... தன்னுடைய இதுவரைகால அனுபவத்துக்கெட்டியவரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் இங்கே சனங்கள் உயிர்த்துடிப்போடும் ஜீவகளையோடும் காணப்படுவதாக.

உண்மைதான் வெளியிலிருந்துவரும் பார்வையாளரைப் பொறுத்தவரை கிளிநொச்சி ராஜதந்திரக் கவர்ச்சிமிக்க ஒரு புதிராயிருக்கிறது. ஆனால், அதை மீளக்கட்டியெழுப்பும் வேலைகளைச் செய்ய வெளியிலிருந்து ஆட்களைத் தருவிக்கவேண்டியிருக்கிறது.

சமாதானம் என்ற ஒன்று கொண்டு வந்திருக்கும் சமனற்றவளர்ச்சிகள் மற்றும் வீக்கங்களின் விளைவுகளே இதெல்லாம்.

தொழிலாளர்கள் அருகிச் செல்வது என்பது வெளித்தோற்றத்திற்கு சமூகத்தின் நிதிநிலை உயர்ந்துவருவதுபோல ஒரு மாயத் தோற்றத்தைத் தரக்கூடும். ஆனால் உண்மை நிலை என்னவெனில் - சமாதானத்தை விஞ்ஞான பூர்வமாக நகர்த்திச்செல்லவல்ல ஒரு நிர்வா கப் பொறிமுறை இல்லாத ஒரு வெற்றிடத்தில் நிகழும் சமாதான கால இடப்பெயர்வுகள், மற்றும் வீக்கங்களின் விளைவுகளே இதெல்லாம்.

மீளக்கட்டியெழுப்புதல் மீளக்குடியமர்த்துதல் போன்றவேலைகளை ஒட்டுமொத்தமாகத் திட்டமிடவும் செயற்படுத்தவும், உரிய அதிகாரமுடைய முழு அளவிலான ஒரு நிர்வாகப் பொறிமுறை இல்லாதவரை இந்த நிலையை மாற்றமுடியாது. அதாவது மீளக் கட்டியெழுப்புவது என்பது மீளக் குடியமர்த்தலோடு பிரிக்கப்படவியலாதபடி இணைக்கப்பட்டு சமாதானத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்துவதற்குரிய ஒரு நிர்வாகக்கட்டமைப்புக்கூடாகவே, மேற்கொள்ளப்படவேண்டும்.

இதற்கெல்லாம் ஒரு இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு வேண்டும்.

இப்பொழுதுள்ள நிலைமைகளின்படி சந்திரிகா அப்படியொரு ஏற்பாட்டுக்குப்போக தயங்குவதுபோலத் தோன்றுகின்றது. எனவே, தமிழர்கள் ஜீவகளை இழந்துவிடாதிருப்பது குறித்து வியந்துபேசும் பன்நாட்டு நிறுவனங்களும் உதவிவழங்கும் நாடுகளும் அண்மையில் செய்யத்தொடங்கியிருப்பதுபோல சந்திரிகாவின்மீது நிதி கொடா அழுத்தங்களை இன்னுமின்னும் பிரயோகிக்க வேண்டும்.

அதாவது, சமாதான முயற்சிகளையும் நிதி உதவிகளையும் பிரிக்கப்படவியலாதபடி பிணைத்துவிடவேண்டும். அது ஒன்றுதான் சந்திரிகாவை சமாதானத்தின் வழிக்குக் கொண்டுவரும்.

அது ஒன்றுதான் தமிழர்கள் சமாதானத்தின் அனாதைகளாகி விரக்தியுற்று விபரீதமான முடிவுகளை எடுக்கும் ஒருபோக்கைத் தடுத்து நிறுத்தும். ●

ஓசையெனும் உன் மூச்சால், அணைக்கின்ற விளக்கில், அணைத்து விடும் தீபத்தை. - யாரோ

# நறுக்கென...



## அம்மணியின் தந்திரம் அவருக்கே அந்தரம்

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம் பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்றிவிட முடியாது. இதுயாரோ ஒருவர் கூறிய பொன்மொழி அல்லது கருத்து. ஆனால் இன்றைய சனநாயக அரசியலில் இது சிறிலங்கா அரசியல் தலைமைகள் மற்றும் அரசியல் வாதிகளுக்கு மிகப் பொருத்தமான கருத்தேயாகும்.

அதுவும் இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைச் சேர்ந்த அனைத்து கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் (சனாதிபதி உட்பட ) இது மிகவும் கச்சிதமாகப் பொருந்தும்.

சிலரைப் பல காலம் ஏமாற்றி பலரைச் சிலகாலம் ஏமாற்றி இப்போது எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற நினைத்து இப்போது இறுதியில் தங்களுக்குள் ஒருவரையொருவர் ஏமாற்ற முனையும் நரித்தந்திரோபாய நரகத்துள் வீழ்ந்து நாறி வருகிறார்கள்.

இந்த நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதிகளை மரபுவழித் தாயகமாகக் கொண்ட தனித்துவ கலாச்சாரப் பாரம்பரியங்களைக் கொண்ட இனமான தமிழினம், சிறு பான்மை இனம் என்பதற்காக அவர்களின் அரசியல் மற்றும் வாழ்வுரிமைச் சுதந்திரம் அனைத்தையும் முற்றாக அடக்கி ஒடுக்கி அழிக்கும் பேரினவாத சர்வாதிகார அணுகுமுறைகளை சனநாயகப் போர்வையைப் போர்த்தபடியே, கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாகக் கடைப்பிடித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு, சமஷ்டி ஆட்சி முறைமை, அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டம், வட்டமேசை மாநாடுகள்... என வார்த்தைகளை மட்டும் மயக்கும் பாணியில் கூறிக் கொண்டு தமிழினத்தை ஏமாற்றிய வரலாறு இன்னமும் தொடர்கதையாகவே உள்ளது.

அதேவேளை தங்களின் சொந்த இனத்தவரையே மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும், எவ்வாறு சனநாயகத்தின் பேராலும் பௌத்ததர்மத்தின் பேராலும் ஏமாற்றியதையும்,இடது சாரிகள் பொதுவுடமைகள் மற்றும் சமதர்மத்தின் பேராலும் ஏனைய பௌத்த அடிப்படைவாத பேரினவாத சக்திகள் இனவாதத்தின் பேராலும், 'பேய்க்காட்டிய' வரலாறும் ஒரு நீண்ட முற்றுப்புள்ளியற்ற தொடர்கதையாக இன்னமும் நீழ்கிறது.

எல்லா வகையிலும் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்ட மக்கள். இப்போது வடக்குக் கிழக்கில் விழிப்படையத் தொடங்கிய பின்னர், ஏனைய பிரதேசங்களில் சலிப்பும் விரக்தியும் அடையத் தொடங்கிய பின்னர்,இப்போது அந்த தொன்னிலங்கையில் சனநாயக ஏமாற்று அரசியல் வியாபாரிகள் தங்களுக்குள் தாங்களே ஒரு வரை யொருவர் அரசியலின் சகல பரிமாணங்களிலும் ஏமாற்றத் தொடங்கியுள்ள தையடுத்து தென்னிலங்கை அரசியலில் சாக்கடை நாற்றம் எழ ஆரம்பித்துள்ளது.

சந்திரிகா தமிழரை ஒடுக்கி, சிங்களவரை ஏமாற்றி, முஸ்லிம்களை பேய்க்காட்டி, மலையகத்தவரை இளிச்சவாயர்களாக்கி தனது அரசியல் அதிகாரத்தை காப்பாற்ற மேற்கொள்ளும் தந்திரோபாயத்தின் இறுதிக்கட்டமாக ஜே.வி.பியினருக்கு 'கண்ணாமூச்சி' காட்டத் தொடங்கியுள்ளார்.

ஆனால் உடனிருந்தே கொல்லும் வியாதியான ஜே.வி.பி. சந்திரிகாவினுள் மிக ஆழமாக செறிந்து பரந்துவிட்டநிலையில்.. நோய்க்கு மருந்து சாப்பிடவிரும்பாது, நோயிலிருந்து விடுபடவும் வழிதெரியாது, ஆந்தை முழி முழிக்கத் தொடங்கியுள்ளார்.

அவதந்தரம் தனக்கந்தரம் அம்மணியாரே....!

## ரத்வத்தையின் புலம்பலும் பறிபோன பதவியும்



முன்னொரு காலத்தில் சிறிலங்கா அரசியலில் கொடிகட்டிப்பறந்து, இப்போது அரசியலில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் ஓரங்கட்டப்பட்ட நிலையில் தலைக்குக் கருஞ்சாயம் பூசிக் கம்பீரம் காட்டக்கூட மனமின்றி- தனது விரக்தி நிலையை வெளிப்படுத்திக் கொண்டு வாய்ப்பு ஏதும் கிடைக்காதா? வரலாறு கொஞ்சமும் மாறாதா? என்று புலம்பியபடி "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும்" கொக்கினைப் போன்று காலங்கழித்துக்கொண்டிருக்கும் அந்த ஜெனரல் மாமா ரத்வத்தையை ஞாபகமிருக்கிறதா?

யாரை மறந்தாலும், மாங்குளம் இராணுவப்பிடிக்குள் மீண்டும் வீழ்ந்தபோது மழை பெய்யப் பெய்ய அதில் நனைந்தபடி 'பைலா' ஆடி குதூகலித்த அவரையும் அவரது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்த வெறித்திமிர்கொண்ட பேச்சுக்களையும் தமிழ் மக்களால் மறக்க முடியுமா?

அந்தக் காலத்தில்... அதாவது பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில்... அக்கட்சியின் தேசிய மட்ட அமைப்பாளராக மிளிர்ந்த அவருக்கு கடைசியில் தேசியப் பட்டியல் உறுப்பினர் அந்தஸ்தைக்கூட அவரது அன்பு மருமகள் சந்திரிகா வழங்காதது துயரமே... (நமக்கல்ல..அவருக்குத்தான்..)

அட..அந்த ஒற்றையாள் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கொடுத்த கழிசல் மரியாதையைக் கூட சந்திரிகா அவருக்குக் கொடுக்கவில்லையே....!

அண்மையில் அந்த ரத்னசிறி விக்கிரமநாயக்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்த போது ரத்வத்தையின் மனம் எவ்வாறிருந்திருக்கும் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த சோகரகசியம்...

ஆனாலும்... அவர் முயற்சியில் சற்றும் சளைக்காத விக்கிரமாதித்தன் போன்றவர். இப்போது சிறிலங்காவின் பாதுகாப்பு செயலாளர் பதவியை எப்படியாவது அடையத்துடித்து அலைவதாக சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் கூறியுள்ளார்.

தானும் ஒரு ரம்ஸ்பீல்ட் போல் இனம் காட்டிக் கொள்ள விரும்புகிறாரோ தெரியவில்லை...

அதனால் தனது இருப்பை ஏதோவொரு வகையில் அடையாளப்படுத்த அன்னார் ஏதோவொருவகையில் முயன்றுகொண்டுதான் இருக்கிறார்.

கடைசியாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது. ஆபத்தான நடவடிக்கை எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அதாவது அவ்வாறு வழங்கினால் அவர்கள் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று தாம் செலவழித்துவிட்டு கடனை அரசின் தலையில் போட்டுவிடுவார்களாம்.

இவ்வாறு கூறும் ரத்வத்தை செய்த மோசடிகள் நாட்டையே நாறடித்த கதையை ஐயா மறந்தே போய்விட்டார் போலுள்ளது.

இன்று அரசுக்குக் கிடைக்க உள்ளதாகக் கூறப்படும்- அதாவது சர்வதேச சமூகம் வழங்க உறுதியளித்துள்ள கடன் கூட விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தேயுள்ளது என்பது தெரிந்திருந்தும் ரத்வத்தை இப்படிப் புலம்பலாமா?

அது சரி இன்னமும் இனப்பிரச்சினை- பேச்சுவார்த்தை எல்லாம் உள்நாட்டு விவகாரங்கள் என்று அலம்பிக் கொண்டிருக்கும் நீங்கள் உடத்தலவின்ன கொலைக்குற்றச்சாட்டு, சிறைவாழ்க்கை , வேறுசில சொந்த அவமானங்களின் தாக்கங்களில் இருந்து விடுபடவில்லைப் போலும் ...!

பேசாமல், போனால் போகட்டும் போடா... இந்த பதவியில் நிலையாய் இருந்தவர் யாரடா என அந்த ஊன்று கோலைச் சுழற்றி பாடியபடி ஒதுங்கிவிடவேண்டியது தானே!

## முன்னாள் இந்தியத் தூதுவர் இன்னுமா புரிந்து கொள்ளவில்லை



இந்தியாவின் புதிய காங்கிரஸ் கூட்டணி அரசு பதவியேற்றதும், அதன் புதிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றுள்ள ஜே.என்.டிக்ஸிற் என்ற அந்த முன்னாள் ராஜதந்திரியை நினைத்தால் இந்தியஇலங்கை ஒப்பந்தமும், அது தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய அவலங்களும் மட்டுமல்ல, இந்தியப் படையின் அமைதிப் பணி என்ற பேரிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கையும்தான் நினைவுக்கு வரும்.

சுங்கான் புகைத்தபடி ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த மனிதர் 1987 இன் மத்தியில் இலங்கையில் எல்லோராலும் பேசப்படும் மனிதராக இனங்காட்டி, பின்னர் தமிழர்களின் திட்டலுக்குரிய வராக இனங்காட்டப்பட்டவர்.

தான் ஒரு தடவை சுங்கானை முழுமையாகப் புகைத்து முடிப்பதற்குள் இந்தியப்படை விடுதலைப் புலிகளை முற்றாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடும் என வீரம் பேசிய இந்த முன்னாள் இந்தியத்தூதரான இந்த ராஜதந்திரியின் தவறான கணிப்பீடும்-மதிப்பீடும் ஆலோசணையும், வழிநடத்தலுமே இந்தியப்படை இங்கு எதிர் கொள்ள நேர்ந்த அவலங்களுக்கும், அதனால் இந்தியாவுக்கு ஏற்பட்ட வரலாற்று அவமானங்களுக்கும் காரணமாகும்.

பின்னர், தன்னையும், தனது இந்திய இலங்கை உடன்பாட்டுக்கால நடவடிக்கைகளையும், மீளாய்வு செய்ததாலோ அல்லது வேறு ஏதோ காரணத்தாலோ... 1997களில் அது தொடர்பாக அவர் வழங்கிய நேர்காணலிலும் அவர் எழுதிய Assignment In Colombo என்ற ஆங்கில நூலிலும் இந்திய அரசின் தவறுகளை ஒப்புக் கொண்டிருந்தார்.

அதற்கு அந்த ஒப்பந்தம் தோல்விகண்டதற்கு டிக்ஸிற் அவர்களின் தவறான வழிகாட்டல் அனுகுமுறைதான் காரணம். எனப்பரவலாக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதில் அவர் டில்லி அரசின் செயற்பாடுகளின் அடிப்படையிலான உத்தரவுகளைத் தான் நடைமுறைப்படுத்தியதாகக் கூறி தன்னை அக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க முயன்றிருந்தார். அவ்வளவுதான். அதன் பின்னர் இலங்கை விவகாரம் மற்றும் விடுதலைப்புலிகள் தொடர்பான கருத்து நிலைப்பாட்டில் அடக்கி வாசிப்பவராக நிதானம் காட்டிய டிக்ஸிற் இப்போது மீண்டும் தனது சுயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

'இந்தியாவின் உதவியுடன் அரசியல் ரீதியில் பலம் பெற்ற பின்னரே விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும்' என்று ஆலோசணை கூறியுள்ளதன் மூலம். சமாதான முயற்சிகளில் மீண்டும் நெருக்கடிகளை உருவாக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார், டிக்ஸிற் அவர்கள்..

சர்வதேச சமூகம் இராணுவ சமநிலையை வலியுறுத்தி பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடக்க அது அவசியம் என்பதை புரிந்து கொண்டுள்ள நிலையில் டிக்ஸிற் அரசியல் மேலாதிக்க நிலையை விலியுறுத்திக் குளப்பத்தை உருவாக்க முன்வந்துள்ளார்.

இதனை சிறிலங்கா அரசு ஏற்க முன்வந்தாலும், சர்வதேச சமூகம் ஏற்குமா என்பதே கேள்வி..

அரசியல் மேலாதிக்க நிலை என்பது அதிகாரத்தை பிரயோகித்து சமாதான முயற்சிகளைக் குளப்பவே உதவும் என்பதை டிக்ஸிற் புரியாதவரல்லவே!

## ஆடும், ஓநாயும் போல சந்திரிகாவும், சமாதானமும்



'நிரந்தர சமாதானத்தை நோக்கிய பாதையில் பல சிக்கல்களைச்சந்திக்க வேண்டியுள்ளது. இது சந்திரிகா அம்மையாரின் மிக அண்மைக்கால சமாதான முயற்சிகள் குறித்த கருத்தாகும்.

தற்காலிக சமாதானத்தையே கடந்த இருவருடங்களுக்கும், மேலான காலப்பகுதிக்கும், எத்தனையோ தடவை குழப்ப முயன்று அதனை தற்போதைய இடியப்பச்சிக்கல் நிலைக்கு கொண்டு வந்தவரே அம்மணிதான்.

இப்போது தற்காலிக சமாதான நிலையைத் தக்கவைக்கவே 'ததிங்கிணத்தோம்' போடும் நிலையில் நிரந்தர சமாதானம் குறித்து அம்மையார் கவலைப்படுவது தான் வேடிக்கையாக உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையை அதன் ஆரம்ப கட்டத்திலேயே நேர்மையான முறையில், மிகவும் இலகுவாகவும், புரிந்துணர்வுடனும் பேசித்தீர்க்கும் வாய்ப்புக்களையெல்லாம் அற்பத்தனமான அர்த்தமற்ற அரசியல் சுயநல ஆதாயங்களுக்காக நழுவவிட்டுவிட்டு, அந்தப்பிரச்சினையை வைத்தே தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க முனைந்த சிங்களப்பேரினவாதத் தலைவர்களின் வரலாற்றுத்தவறுகளே இன்றைய சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணம்.

சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்காவின் தனிச் சிங்களச் சட்டம் என்ற முட்டாள் தனமான கருத்து நிலைப்பாட்டின் தீவிரம் மூட்டிய இனவெறித் தீயினை அவரைத் தொடர்ந்து அரசியல் 'பண்ணிய அனைத்து சிங்களத்தலைவர்களும் காலத்திற்கு காலம் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு பிரச்சினைகளைக் காரணமாக்கி கொழுந்துவிட்டெரியச் செய்தமையின் விளைவையே இன்றும' சிறிலங்கா அனுபவித்து அழிந்து கொண்டிருக்கிறது என்றால் அதில் மிகையில்லை.

ஆகச் சிக்கலை உருவாக்கிய தலைமையின் வாரிசுகளாகவே இன்றைய சிங்களத் தலைவர்களும், அவர்களின் பக்கத்துணைகளும், தம்மை இம்மியும் பிசகாமல், இன்னமும் தமது அரசியல் இலக்குகளை வரித்துக்கொண்டிருக்கும் போது சிக்கல்கள் மேலும் அதிகரிக்குமேயன்றி குறையும் என எவரும் நினைத்தால் அது கோமாளித்தனமேயாகும்.

இந்த சிக்கலைத்தீர்க்க சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ள சந்திரிகா இதே அழைப்பினை ரணில் விடுத்தபோது அதனை ஏற்கமறுத்து ரணிலின் சமாதான நகர்வுகளைப் புறக்கணித்ததுடன் அந்த சமாதான முன்னெடுப்புகளை குழப்பித் தடுக்க பகீரத முயற்சி செய்தார் என்பதும் வெளிப்படையான விடயமே.

ஐதே.முன்னணி ஆட்சியை` சந்திரிகா கலைத்தமை சமாதானமுயற்சிகளை குழப்பும் அல்லது மேலும் சிக்கலாக்கும் சதியின் அங்கமேயாகும்.

ஆட்சியை தம்வசமாக்க சமாதான முயற்சிகளை கடுமையாக விமர்சித்து, சமாதான ஏற்பாட்டாளர்களைக்கண்டித்து, அதன் வளர்ச்சிப்போக்கு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது, என்று பீதியூட்டி, மக்களை அதாவது பௌத்த சிங்கள மக்களை சமாதானத்திற்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை எடுக்கவைத்து தேர்தலில் வென்ற பின்னர் மீண்டும் சமாதானசங்கீதம் பாட வெளிக்கிட்டமைக்கு காரணம் வெளிப்படையான விடயமேயாகும்.

சமாதானம் பேசினால் நிதிவளத்தை பெறலாம் என்ற நிலையில் தற்காலிக சமாதானத்தையே குழப்பிக்கூத்தடித்தவர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முனைகிறாராம்..!

ஆனால் அதற்கு பலசிக்கல்களை சந்திக்க வேண்டி இருக்குமாம்...!

ஒன்று மட்டும் சந்திரிகாவின் நடவடிக்கைகளில் இருந்து தெளிவாகின்றது.

சமாதானத்தை மேலும் சிக்கலாக்க என்ன செய்யலாம் என்று யோசித்தே பழக்கப்பட்ட அவரால் தற்போதைய சமாதானத்தையே பாதுகாக்கமுடியாது என்பதே அதுவாகும்...

சமாதானத்திற்கான யுத்தத்தை செய்தவர் இனியும் யுத்தத்திற்காக சமாதானத்தை சிக்கலாக்குவார் என்பதையே அம்மணியின் நடவடிக்கைகள் உணர்த்தி நிற்கின்றன.....

— செங்குட்டுவன்

விவஸ்தை இல்லாத படிப்பு, மனத்தை நீங்கவே செய்கின்றது. - டி. ஸ்ட்டன்

# அராஜக வலைப்பின்னலுக்குள் சிங்கள அரசபீடம்...



**சிறி.இந்திரகுமார்**

அலுவலகத்திற்கு வந்த நண்பர்ஒருவர் ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார்....

அதாவது, சண்டை தொடங்கிவிட்டது. உங்களுக்குத் தெரியாதா... என்றார்.

எத்தனைசீண்டல்கள், எத்தனை இழப்புக்கள், எத்தனை அவமானங்கள், எத்தனை துயரங்கள் என்று நிகழ்ந்தபோதும் சமாதானம் என்ற ஒன்றுக்காய், அமைதி வழித்தீர்வு என்னும் ஒன்றுக்காய் இம்மக்கள் காத்திருக்கும் நிலையில் சண் டைதொடங்கிவிட்டதா என வியந் தபோது நண்பர்கூறினார்.

சண்டை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இல்லை. சண்டை தமிழர்களின் தாயகத்தில் இல்லை. சண்டையின் பங்குதாரிகள் தமிழர்கள் இல்லை. இப்போது சண்டை சிங்களவர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் நடக்கிறது. சண்டை சிங்களவர்களின் இதய மையத்துள் நடக்கிறது என்றார்.

ஆம்... நண்பர்கூறியது ஒப்பிரேசன் 113 என வர்ணிக்கப்படும் சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் விடுதலைமுன்னணி அரசு நாடாளுமன்றத்தில் தனக்கான அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்குமா எனக் காத்திருந்த நாடாளுமன்ற அமர்வில் நடந்த அசம்பாவிதத்தையே நண்பர் இப்படி விழித்தார்.

இது சிங்களதேசத்தின் நாடாளுமன்ற அமர்வுகளில் இது வரைகாலமும் நடந்திராத ஒன்று அல்ல.

இது சிங்களதேசத்துக்குப் புதுமையானதொன்றுமல்ல. ஆனால், வரலாற்றில் புதிய வடிவம் ஒன்றுக்குள் அராஜகக் கலாச்சார வலைப் பின்னலுக்குள் சிங்கள அரசபீடம் சிக்கிவிட்டது என்பதே இப்போது புதியசெய்தி.

இந்த அராஜகவலைப் பின்னலுக்குள் சிங்களதேசத்தின் நிர்மானிகளாகக்கொள்ளக்கூடிய அல்லது சிங்களதேசத்தை இதுவரை நிர்மானித்துவருபவர்களான அதியுயர்மத பீடத்தின் பிக்குகளும் சிங்கள தேசத்தின் சக்திகளுமான அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிக்கிவிட்டதே இந்தப்புதுமை.

இந்தவகையில் இத்தனை கால எம் மக்களின் காத்திருப்பின் பெறுமதிமிக்க முக்கிய சில அறுவடைகள் வெளித்தெரியத் தொடங்குவதற்கான முகிழ்களை வெளிப்படுத்தும் காலமாக சிங்களதேசமே இந்தக்காலத்தை மாற்றியிருக்கும் அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இப்போதுதான் வரலாற்றில் என்றுமில்லாதவாறும், வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கும் சிங்கள தேசம் பலவீனப்பட்டும் தன் இயல்பு நிலையை இழந்தும் பரிதாபத்திற்குரியவர்களாக மாறிநிற்கிறது. சிங்கள தேசம் வரலாற்றில் என்று மில்லா தவாறு அவமானப்பட்டுநிற்கிறது.

இதில் முக்கியமாக எம்மக்கள் கவனத்தில் எடுக்க வேண்டியது. தமிழ்மக்கள் மீது வன்முறையைத் தூண்டியவர்களும் அந்த வன்முறையாளர்களுக்கு ஆலோசனையும், ஆசீர்வாதமும் வழங்கியவர்களுமான மதபீடமும் அரசியல்பீடமும் அவமானப்படுவதுதான்.

சில புராணங்களிலும் இதிகாசங்களிலும் விழிக்கப்பட்ட பலகாட்சிகள் நாட்டின் அதியுயர் அரசியல் மன்றத்தில் மக்களின் பார்வைக்காக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மகாபாரதக்கதையிலே ஒரு திரௌபதிக்கு கௌரவர்களால் துகில் உரியப்பட்டது. அப்போது பாண்டவர்கள் வாய்பொத்திமௌனிகளாகப் பார்த்து நின்றார்கள்.

ஆனால் இன்று சிங்கள தேசத்தில் அவர்களின் உயரிய மரியாதைக்குரியவர்களாக வணங்கப்படும் பிக்குகளின் அங்கிகளை அவர்களின் தூயகாவி அங்கிகளைத்துயிலுரியும் நவீன கௌரவர்களாக சிங்கள தேசத்தின் புதல்வர்கள் புதிய வரலாற்றை அரங்கேற்றத் தொடங்கி விட்டார்கள். ஆனால் இந்த நவீன காட்சியில் பாண்டவர்கள் என்ற பாத்திரம் இல்லாதுபோய்விட்டது. அத்தோடு சிங்கள மக்கள் வாய் பொத்தி மௌனிகளாக நிற்கிறார்கள்

இங்கு இன்னுமொரு வேடிக்கை வரலாற்றில் என்றோ செங்கோல்தவறிய ஆட்சி இலங்கையில் அரங்கேறத்தொடங்கி விட்ட தன்விளைவாக. தமிழ்மக்கள் தமது உரிமைகளை உரத்தும் உயிர் கொடுத்தும் போராடத் தொடங்கி விட்டபின்னர் சிங்களதேசம் இப்போதுதான்செங்கோலை தவற விட்டுத்தேடி அலைந்தது.

இப்போது எம்மக்களின் விடுதலைபற்றியும், எம் மக்களின் அபிலாசைகள் பற்றியும் உலகம் உணரவேண்டிய காலமிதுவாக மாற்றப்பட்டிருக்கிறது.

விடுதலை ஒன்றே எமக்கான சொர்க்கவாசல் என்பதை உணர்ந்து நாம் போராடி உலகிற்கு உணர்த்தியபின்னும் இன்னும் எமக்கான விடுதலையின்வாசல் திறக்க வில்லை.

அந்த விடுதலையின் கதவின் திறவுகோலை சர்வ தேசசமூகம் தன்கரங்களில் வைத்திருக்கும் நிலையில் அந்தக்கதவுகள் அப்படியே இருக்க கட்டடத்தை தகர்க்கும் செயலில் சிங்களதேசம் ஈடுபடத் தொடங்கிவிட்டது.

இனிவரும் காலங்கள் எல்லாமே துக்குறிகளுக்கான காலமாகவே இருக்கப்போகிறது. இனி வரும் காலங்களில் சிங்கள தேசத்தின் ஆற்றாமைகள், பலவீனங்கள் வெளிப்படும் காலமாக இருக்கப் போகிறது. ஏனெனில் என்றுமில்லாதவாறு சிங்க ளதேசம் பிளவுண்டு கூழாம்பாணியாகி வடிவம்மாறி நிற்கிறது.

இதனால் இந்தக்காலத்தை சிங்களதேசம் தனக்கான மீட்சிக்குரிய காலமாக மாற்ற எம் மக்களைச் சீண்டச் செய்யும்.

இந்தநிலையில் விடுதலை ஒன்றே எம் இலக்காகக்கொண்டு காத்திருக்கும் எம்மக்கள் இன்னும் பொறுமைகாக்கவேண்டியவர்களாக இருப்பர்.

உண்மையில் இன்று சிங்களதேசம் ஏறவும்முடியாது, இறங்கவும் முடியாது. உலகின்முன் கூனிக்குறுகி நிற்கிறது.

இதற்குப் பிரதான காரணமாக நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். சிங்களதேசம் பிளவுண்டபோது தமிழர்தேசம் சனநாயகரீதியாக ஒன்றுபட்டுப்போனது. இதுவே சிங்களதேசத்துக்கான ஆபத்தாகவும் அமைந்துவிட்டது.

இப்போது சிங்களதேசம் தமிழர்களின் பலத்தின்முன்னால் எதுவும் செய்யமுடியாது தோற்றுப் போய் நிற்கிறது.

இதனை புதிய 13ஆவது நாடாளுமன்றத்துக்கான சபாநாயகர் தெரிவின்போது உணர்த்தப்பட்டது. பின்னர் சந்திரிகா சமாதான வழிக்குத் திரும்பவேண்டியவராக ஒரு மாயத்தோற்றத்தையாவது காட்ட வேண்டிய நிற்பந்தத்திற்குள் தள்ளியது.

இந்த நிலையில் புதிய அரசு எப்படித் தமிழர்களிடம் இறங்கி வராமலும் சிங்களவர்கள் ஒன்று படாமலும் தனக்கான அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்கப் போகிறது.

இதில் தமிழர்களிடம் இறங்கி வந்து தனக்கான அறுதிப் பெரும் பான்மையை நிரூபிக்க முயன்றாலும் தமிழர்களுக்கு இலாபம்.

அல்லது தங்களுக்கிடையில் ஏதாவதொரு வகையில் ஒன்று பட்டாவது அறுதிப்பெரும்பான்மையை நிரூபித்தாலும் தமிழர்களுக்கு இலாபம்.

அல்லது அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்காதுபோனாலும் தமிழர்களுக்கு இலாபமே. ஏனென்றால் சிங்களதேசம் எமக்கான தீர்வை இது ஒன்றில் தருவதற்கு நிற்பந்திக்கும் அல்லது நிராகரிக்கச் செய்யும் இதுவே எமக்குத் தேவையானதும்கூட.

இந்த நிலையில் இந்த அரசு தனக்கான அறுதிப் பெரும்பான்மையை நிரூபிப்பதென்பது மாயமானாகவே இருந்துவிடக்கூடும்.

அத்தகைய அரசோடு தமிழ்மக்களுக்கான எத்தகைய தீர்வைப்பற்றிப் பேசவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்பப்போகிறது.

எனவே எம்மக்களின் விடுதலையின்வாசலின் திறவுகோலை இனியும் சர்வதேச சமூகம் தன்கரங்களில் இறுகப் பற்றுவது அவர்களுக்கு எந்தப்பயனையும் வழங்கப்போவதில்லை.

எனவே எமக்கான விடுதலையின் வாசல் கதவு விரைவாக திறக்கும் என்பது மட்டும் திண்ணம். ●

## மதவடி மயிலர்



*''வரவர.... சிறிலங்காவின்ரை நாடாளுமன்றம் சந்திச்சண்டியர்கள் கூடும் மடமாகவெல்லே மாறிவருகிறது பாருங்கோ... அரசியல்வாதிகளும் ஆன்மீகவாதிகளும் மட்டுமல்ல... தங்களை அறிவாளிகள் என அடையாளப் படுத்திக் கொண்டவர்களும்கூட அந்த மன்றத்துக்குள்ளை நுழைஞ்ச உடனேயே தேசியச் சண்டியர்களாக எல்லே மாறி விடுகினம்...''*

*'எட நாடாளுமன்றச் செங்கோலைக் கூட எடுத்துக் கொண்டுபோய் ஒளித்துவைக்கவேண்டிய அளவுக்கு கொடுங்கோலாட்சி அங்கு நிலவுகின்றதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.'*

*'அட இந்த நாடாளுமன்றத்துக்குள்ளை சண்டையை நிறுத்தவே நாலுநோர்வேயும், நாப்பது உடன்பாடுகளும் செய்ய வேண்டும்போலை கிடக்கு... அப்படியும் சரிவருமா என்றால் சந்தேகம்தான்..'*

*'சனாதிபதி இதுக்குஓர் வழிசெய்வா என்று யாரும் நம்பினா அது முட்டாள்த்தனம் பாருங்கோ... அவ இதனையும் சமாதானத்திற்கான சண்டை என்று கூறிவிட்டு கதிர்காமரை அனுப்பி உலகெங்கும் பிரசாரம்செய்வா... அல்லது எதிர்க்கட்சிகளின் பயங்கரவாதத்தை ஒடுக்கவென நிதிசேர்க்கத்தொடங்கி விடவோ...! என்ன நான் சொல்கிறது ஏதும் பிழையோ...'*

*'கடைசியிலை அம்மையார் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்ய ஜே.வி.பி. கும்பல்தான் வழிகாட்டப்போகுதுபாருங்க... இப்பவே தன்னைப் பிடிச்ச... இந்த பேய்களை எப்படிக் தொலைக்கிறது என்பதே அம்மணியின் பிரச்சினையாக இருக்கெண்டு அவவின்ர ஆட்களே புலம்புகினம் பாருங்கோ....'*

*'அரும்பொட்டிலை குந்தியிருந்து ஆட்சிநடத்த வெளிக்கிட்டாஆர் எப்ப தள்ளிவிடுவார்கள் என்ற அச்சத்தோடை தான் அல்லும் பகலும் அல்லாடவேண்டும்...'*

*'அது சரி. சமாதானமுயற்சிகள் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்திவிட்டது என்று காரணம்கூறி ரணில் ஆட்சியைக்கலைத்த அம்மையார், நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்ட இந்த நிலையில் இந்த ஆட்சியைக் கலைத்தால் என்ன?*

*'கலைக்கமாட்டார்...இது அவரது தன்னாட்சி அதிகார சபையெல்லே...!'*

☞ தவறான வழியில் பெற்ற பணத்தை கொண்டு உண்பதை விட பிறக்காமலே இருந்திருக்கலாம். - சர்.பில்யூ ராலே

நேர் நோக்கு

# தடைகளை ஏற்படுத்தியவர் யார்?

"போர் தற்காலிகமாக ஓய்ந்துள்ளது. போர் நிறுத்தத்தில் இரு தரப்பினரும் அர்ப்பணிப் புடன் இருந்தாலும் நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்லும் பாதையில் பல சிக்கல்களையும் தடைகளையும் கடக்க வேண்டியுள்ளது." என்கிறார் சனாதிபதி சந்திரிகா குமார துங்க.

யுத்தத்தில் பலியான இராணுவத்தினரின் ஞாபகார்த்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

போர் ஓய்ந்திருப்பதும் யுத்த நிறுத்தம் ஒன்று நடைமுறையில் இருப்பதும் உண்மைதான் புலிகள் பல இழப்புக்கள் சீண்டல்கள் மத்தியில் அதனை அர்ப்பணிப்புடன் கடைப்பிடிக் கின்றனர் என்பதும் சரியே. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கத்திற்கு முன்பிருந்து இன்றுவரை அது விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவ்வாறு நடந்து கொண்டார் என்பது உலகம் அறிந்த விடயம். இப்பொழுதும் கூட கிழக்கில் அரச ஆதரவுடன் இடம்பெறும் படுகொலைகள் யுத்தநிறுத்தத்திற்கு எவ்வளவு தூரம் நெருக்கடியை ஏற்படுத்த வல்லது; எவ்வளவு தூரம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக அமைகின்றது என்பதெல்லாம் கவனத்துக்குரிய விடயங்களாகும்.

இது ஒரு புறமிருக்க சமாதானத்தை நோக்கிச் செல்லும் பாதையில் உள்ள சிக்கல்கள் தடைகள் பற்றி அவர் கூறுவது அதனைவிட மிகவும் மோசமான விடயமாகும்.

2001ன் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது சிங்கள மக்கள் ஒரு தெளிவான ஆணையை வழங்கியிருந்தனர். அதாவது பேச்சு வார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்படி அவர்கள் தமது வாக்குகள் மூலம் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் அதற்கான முயற்சிகளுக்கு சனாதிபதி சந்திரிகா குமார துங்க எவ்வளவு தூரம் உதவினார்? உதவாவிட்டாலும் தனது அதிகாரம் மூலம் சமாதான முயற்சிகளை சீர்குலைக்க எவ்வாறான வகையில் எல்லாம் முயன்றார் என்பதை அவர் இப்பொழுது சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது. ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு ஒரே ஒரு காரணமாக இருந்த இந்த சமாதான முயற்சிகளை படிப்படியாகச் சீர்குலைத்து அரசாங்கத்தை நிலை குலையச் செய்து அதனை செயலிழக்க வைத்து இறுதியில் அதனை கலைக்க எடுத்த நடவடிக்கைகளே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்த இரண்டு வருடங்களும் செய்த சாதனையாக இருந்தது. நாட்டின் நன்மைக்காக எனக் கூறி அரசியலமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக அதற்கே அவர் பயன்படுத்தினார்.

ஆனால் அவர் ஐ.தே.மு. அரசாங்கத்தை கலைக்க போட்ட தடைக்கற்கள் இன்று அவருக்கு குறுக்கே நிற்கின்றன. பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு நகர்வையும் விமர்சித்துக் கொண்டிருந்த அவர் இப்பொழுது அதே நகர்வுகளையே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முற்றாகப் புறம் தள்ளி கருத்துக்களை வெளியிட்ட அவர் இன்று அதன் அடிப்படையில் பேசவேண்டிய நிலையில் உள்ளார்.



இதேவேளை சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி சிஹல உறுமய என்பவற்றுடன் இணைந்து தேசப்பற்றாளர் முன்னணி என்னும் பெயரில் நடத்தப்பட்ட போராட்டங்களில் இவரது கட்சி தீவிரமாக ஈடுபட்டது. ஜே.வி.பி தனித்து நடத்திய போராட்டங்கள் ஆரம்ப காலங்களில் பிசுபிசுத்துப் போய்க் கொண்டிருக்கையில்; அதற்கு புத்துணர்வு ஊட்டிய பெருமையும் சனாதிபதி சந்திரிகா அம்மையாருடைய கட்சியையே சாரும்.

இதேபோல் பௌத்த பிக்குகளை தெருவுக்கு இழுத்து வந்து ஊர்வலம் நடத்தி அவர்களை அரசியலுக்கு முழுமையாக இழுத்துவிடும் கைங்கரியத்தை ஜே.வி.பியும் சு.க.வும் இணைந்தே நடத்திமுடித்தனர். கடந்த தேர்தலில் ஓர் இடத்தைக் கூட பெறமுடியாத சிஹல உறுமயக் காரரை முன் நிறுத்தி இவர்கள் நடத்திய இனவாதப் போராட்டம் இன்று இவர்களுக்கு எதிராக சிஹல உறுமயவை வளர்த்து விட்டுள்ளது. இது இன்று புலிகளுக்கு எதிராக மட்டும் அல்ல, ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளுக்கு எதிராகவும் கூட வியூகம் வகுக்கவேண்டிய நிலையை சனாதிபதி சந்திரிகாவுக்கு மட்டுமல்ல ஜே.வி.பிக்கும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியை முறியடிப்பதற்காக ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தமானது நாட்டைப் பற்றி சிந்திக்காவிட்டாலும் கூட அவரது கட்சியையும் அவரையும் கூட எவ்வளவு தூரம் பாதிக்கப் போகிறது என்பதை அவர் அண்மையில் அனுபவிக்கத்தான் போகிறார்.

11வது நாடாளுமன்றத்தில் 10 உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஆட்சியை ஆட்டிப்படைத்த ஜே.வி.பி யை 39 நா. உ. க்களுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து விட்டமைக்கான பரிசு அவருக்கு விரைவில் கிட்டப் போகிறது என்பதற்கு ஜே.வி.பி தற்போது விடும் அறிக்கைகளே சாட்சி.

உதாரணமாக ஜே.வி.பி. சு.க ஒப்பந்தம் கைச்சாத்தான போது இன்று உள்ளது போன்ற ஒரு சிறுபான்மை அரசாங்கத்தை சந்திரிகா குமாரதுங்க எதிர்பார்த்திருக்க மாட்டார். எனவே 35 அமைச்சர்களுடன் அமைச்சரவையை மட்டுப்படுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இப்பொழுது அரசாங்கத்தை நிலைப் படுத்திக்கொள்ள மேலும் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க சந்திரிகா விரும்புகின்ற போதிலும் அது முடியாத காரியமாக உள்ளது.

அது போலவே சமாதானப் பேச்சு வார்த்தை விடயத்திலும் சில நெகிழ்வுகளைச் செய்ய வேண்டிய தேவை இருந்தாலும் ஜே.வி.பி.யின் அழுத்தம் அதனை அவர் நடைமுறைப் படுத்த முடியாத நிலையை தோற்று வித்துள்ளது.

ஆகமொத்தத்தில் சமாதானத்துக்கான பாதையை 1994 லேயே மக்கள் சந்திரிகா அம்மையாருக்கு திறந்துவிட்டார்கள். அதனை மேலும் மோசமான சிக்கல்கள் தடைகள் நிறைந்ததாக கடந்த 10 ஆண்டு காலத்தில் சந்திரிகா மாற்றியிருக்கிறார். புதிய புதிய தடைக்கற்களை அவரே உருவாக்கியிருக்கிறார். அவற்றை இன்று அவரே நீக்குவது என்பது கூட மிகச்சிரமமான காரியமே.

**வேலவன்**

# யாழ். கண்டனப் பேரணி காலத்தின் தேவையாகவுள்ளது.

யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இன்று முக்கிய சில விடயங்களை முன்வைத்தும், அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும், மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த கண்டனப்பேரணியின் போது மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதில் ஏற்படுத்தப்படும் தடைகள், கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள். படுகொலை செய்யப்படுகின்றமை, மீளக் குடியமர்வு என்பவற்றுடன் மலையக மக்கள்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்தும், இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய அரசான ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும், கண்டனப் பேரணியாக இது தோன்றினாலும் ஒட்டு மொத்தவடிவில் தமிழ்மக்கள் மீது திட்டமிட்டு. மேற்கொள்ளப்படும் புறக்கணிப்பு, அசமந்தப்போக்கு, மறுதலிக்கப்படும் உரிமைகள் தொடர்பான ஒ்ரு கவன ஈர்ப்பை பரந்தளவில் ஏற்படுத்தப்படுவதே இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

ஏனெனில் இன்று நாடாளுமன்றில் அரசு தனக்கிருக்கும் அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் துவழ்ந்த யுத்தம் செய்து கொண்டிருக்கும் போது இத்தகைய பேரணிகள் என்னவிளைவை ஏற்படுத்தி விடப்போகிறது என்று சிந்திக்கலாம்.

ஆனால் இந்த அரசியல் ஆரவாரங்களின்பின்னால் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை தவறிப்போகின்ற அல்லது மறந்து போகின்ற அவலநிலையை உணர்த்துவது இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.



அந்த வகையில் புதியஅரசும் வழமையான செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ள வேண்டிய காரியங்களான மக்களின் வாழ்க்கைச் செயற்பாடுகளில் அக்கறை கொள்ளாது அரசியல் ரீதியான படுகொலைகளிலும், ஊடகவியலாளர்களை கொலை செய்வதிலும், ஈடுபட்டு மக்களை தொடர்ந்தும் ஒரு பதட்டமான சூழ்நிலையில் வைத்திருக்கவே முயல்கிறது.

அரசின் இத்தகைய செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படுவதோடு, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சௌகரியங்கள் சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

அந்த வகையில் யாழ்மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஒழுங்கு செய்திருக்கும் இந்த கண்டனப பேரணியானது, முக்கியத்துவம் பெறுகிறது.

மேலும் மலையகத்தில் திட்டமிட்ட ரீதியில் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளை நிறுத்துமாறு யாழ்மாவட்டத்திலிருந்து குரல் கொடுப்பது நிச்சயம் அரசுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே அமையும்.

ஏனெனில் நாட்டில் எந்தப் பாகத்தில் என்றாலும் தமிழ் மக்கள் தாக்கப்படுவதையோ, அவர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிடுவதையோ, தமிழ்மக்கள் பார்த்து நிற்கப்போவதில்லை என்பதை உணர்த்தும் ஒரு பேரணியாகவும் இது அமைகிறது.

இந்த நிலையில் இத்தகைய பேரணிகள் நடத்தப்படவேண்டிய அளவுக்கு அரசு மக்கள் மீதான திட்டமிட்ட சுமைகளை சுமத்தி நிற்கிறது என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் யாழ் குடாநாட்டில் இன்று மேற்கொள்ளப்படும் இந்த கண்டனப்பேரணிமூலம் அரசு எவற்றை உணர்ந்து கொள்ளப்போகிறது என்பதற்கு அப்பால் மக்கள் இவற்றை பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை என்பதே இங்கு பெரிதாகக் கவனிக்கப்படுகிறது.

அரசின் எல்லாக் கூத்துகளையும் பார்த்து ரசிக்கும் கூட்டம் அல்ல மக்கள் அரசின் மீது கல்லெறியவும் தயங்கமாட்டார்கள் என்பதே இங்கு உணர்த்தப்படுகிறது.

**நக்கீரர்**

நானிலம் அனைத்தும், என் நாடு; நல்லது செய்வதே என் சமயம். - தாமஸ் பெய்ன்.

# சிங்களத் தடைமுகாம்களில் புலனாய்வாளர்களால் போடப்படும் தூண்டில்கள் மீதான விழிப்பு நிலை

**“சிறிலங்காப் புலனாய்வாளர்கள் தமக்குத்தெரியாத தகவல்கள் இல்லை என்கிற வகையிலும், தகவல்களை சொல்லாமல் போகமுடியாது என்கிற உளவியல் அழுத்தங்களைக் கொடுக்கும் வகையிலும், போலியான நட்புறவை ஏற்படுத்தும் வகையிலும் தமக்கான தகவல்களை சேகரித்துக்கொள்வார்கள்.**

**இதுபோன்ற பணிசார்ந்த நோக்கங்களை எட்டுவதற்காக சலுகைகள் வழங்குதல், ஆசைவார்த்தைகள் கூறுதல், உதவிசெய்தல், அனுதாபப்படுதல், இனிக்க இனிக்க பேசும் உரையாடல், தமிழரின் நலன்களை பேணுபவர்களாக வெளிப்படுத்தல் ஆகியவைகள் தூண்டில்களாக போடப்படுகின்றன.”**

தமிழ்த்தேசியத்தின் கீழ் ஒன்றிணைந்து வாழ்வதைக்கொள்கையாகக்கொண்ட விடுதலைப்போர் இன்று அர்த்தமுள்ள, சக்திமிக்கதான தமிழ்த்தேசியமாக வீறுகொண்டு எழுந்து நிற்கின்றது.

இத்தேசிய எழுச்சியால் பேரினவாதசக்திகளை எதிர்த்து நிற்கக்கூடிய பலத்தை தமிழினம் பெற்றுள்ளது.

இப்பலத்தை சீர்குலைத்து தமிழர்களை வீழ்த்துவதற்கு சிறிலங்காப்புலனாய்வாளர்கள் தமது புலனாய்வுச் செயற்பாடுகளுடன் ஒட்டிய வகையில் பல கருமங்களை தடைமுகாம்களில் ஆற்றிவருகின்றார்கள்.

அக்கருமங்கள் தமிழரின் இலட்சியப்போருக்கு ஓர் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றது.

இம்முட்டுக்கட்டையை ஏற்படுத்த தமிழர்களின் சக்தியே தேவைப்படுவதனால், தமிழர்களை இலக்குவைத்தே புலனாய்வாளர்களால் தூண்டில்கள் போடப்படுகின்றன.

அதாவது தடைமுகாம்களில் எட்வேட், ராஜபக்ஷ, ராஜா, நசீர்,திலக்,சமன், மனதுங்கா, நௌபர், பாஸ்கரன், பெரேரா,பண்டிதரட்ணா ஆகிய பல்தரப்பட்ட புனைப்பெயர்களில் புலனாய்வாளர்களாக பணியாற்றுகின்றார்கள்.

இவர்களது பணிசார்ந்த நோக்கங்களாக புலிகள் தொடர்பாக அனைத்துத் தகவல்களையும் சேகரித்தல், தமது புலனாய்வுப் பணிக்கான ஆட்திரட்டல், புலிகளின் மறைமுகச் செயற்பாட்டாளர்களை இனம்காணுதல், விடுதலைப்போருக்கு எதிரான கருத்தூட்டல்களைச் செய்தல், பொய்யான தகவல்களைப் பரப்புதல் போன்றவைகள் இருக்கின்றன.

இவற்றை இன்னும் சற்று கண்ணோக்கில் பார்ப்பது நன்மை பயக்கும்.

அதாவது தமக்குத்தேவையான தகவல்களை சேகரிக்கும் மையத்தை நோக்கியே சிறிலங்காப் புலனாய்வாளர்களின் இலக்குஇருக்கும்.

சிறிலங்கா புலனாய்வாளர்கள் தமக்குத்தெரியாத தகவல்கள இல்லை என்கிறவகையிலும், தகவலகளை சொல்லாமல் போகமுடியாது என்கிற உளவியல் அழுத்தங்களைக் கொடுக்கும்வகையிலும், போலியான நட்புறவை ஏற்படுத்தும் வகையிலும் தமக்கான தகவல்களைச்சேகரித்துக்கொள்வார்கள்.

இதுபோன்ற பணிசார்ந்த நோக்கங்களை எட்டுவதற்காக சலுகைகள் வழங்குதல், ஆசைவார்த்தைகள் கூறுதல், உதவிசெய்தல், அனுதாபப்படுதல், இனிக்க இனிக்க பேசும் உரையாடல், தமிழரின் நலன்களை பேணுபவர்களாக வெளிப்படுத்தல் ஆகியவைகள் தூண்டில்களாக போடப்படுகின்றன.

இவ்யுக்தி அனைத்தும் தமிழர்களது மகிழ்ச்சியையும் நல்லதொரு ஒளிமயமான வாழ்க்கையையும் சிதைப்பதாகவே இருக்கும்.

இதனைக் கருதிக்கொள்ளாது நல்லவர்கள் என்கின்ற ஒரே அளவு கோலால் அளக்கமுற்படும்போது சிறிலங்காப் புலனாய்வாளர்களின் உண்மை முகத்தை பார்க்கும் சாத்தியம் இல்லாமல் போய்விடும்.

அதாவது “ரகுலா” ஆங்கிலப்படத்தில் இரவில் இரத்தம் குடித்து மனிதர்களைக் கொல்லும் பிசாசு பகலில் அப்பாவியாக நல்லவர் போல் பாசாங்கு செய்து மனிதர்களை ஏமாற்றும் இதனை ஒத்த பாசாங்கு போலவே எதிரிப்புலனாய்வாளர்களின் முகமூடிகளாகும்.

இவர்கள் தமிழர்களுக்கு ஏற்படுத்திய அட்டுழியங்கள், அக்கிரமங்கள் ஏராளம். அதிகம்.

தமிழர்கள் வெள்ளைவான் கடத்திக் காணாமல் போயினர், ரயர் எரியும் நெருப்பில் வெந்துபோயினர், சித்திரவதைகளால் ஊனமுற்று வாழ்க்கையை தொலைத்தனர், பாலியல் வன்முறைகளால் மானமிழந்து போயினர், செம்மணி போன்று பல புதைகுழிகளுக்குள் புதையுண்டு போயினர்.

இப்படியான மனித அவலங்களைத் தந்த இப்பிசாசுகளின் நடிப்பில் மயங்கிவிடாது தம்மை நோக்கிப் போடப்படும் தூண்டில்களின் மீதான விழிப்புநிலைதான் தமிழர்களை அனைத்து வழிகளிலும் பாதுகாக்கும்.

மனிதமனம் ஒரு குரங்கு என்பர். அதனால் மனம் மாற்றம் அடையும் அல்லது தளம்பல் அடையும். ஆனால் தமிழ்ச்சமுதாயத்தின் சுதந்திரமான வாழ்விற்காய் தமிழர்கள் தம் மனதைக் கட்டிக் காத்து பக்குவமாய் வாழ்வதிலேயே தாயகப்பாதுகாப்பு தங்கியுள்ளது.

அதாவது விரைவான பயணம் செய்யவேண்டும் என்பதற்காகவோ, தடையின்றி இலகுவான பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவோ, பொருட்களை தடையின்றி உள்ளே கொண்டு வருவதற்காகவோ மொத்தமாக ஓர் செல்வாக்கை செலுத்தவேண்டுமென்பதற்காகவோ எதிரிப்புலனாய்வாளர்களால் போடப்படும் தூண்டில்களில் சிக்கிக்கொள்வதனால் தமிழர்கள் பேராபத்தையே சந்திப்பர்.

ஆதலால் ஆபத்தில் சிக்க வைக்கப் போடும் தூண்டில்களில் இருந்து தப்பிக்கொள்ளும் சில மீன்களைப்போல எதிரிப்புலனாய்வாளர்களை ஏமாற்ற வேண்டியது தமிழர்களின் தார்மீகக் கடமையாகும்.

அவ்வாறு இல்லாது இரையுடன் தூண்டில்களை விழுங்கும் மீன்களைப்போல ஏமாந்துபோகும் தமிழர்கள் தம் உயிரை, தம் வாழ்வை மட்டும் இழந்திடக் காரணமாக இருக்கவில்லை.

மாறாக தமிழ்ச் சமுதாயத்தை, வருங்கால தமிழ்ச்சிறார்களை, பிறக்கப்போகும் சந்ததியினரை மீளா சகதிக்குள் தள்ளி

**விரைவான பயணம் செய்யவேண்டும் என்பதற்காகவோ, தடையின்றி இலகுவான பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவோ, பொருட்களை தடையின்றி உள்ளே கொண்டுவருவதற்காகவோ மொத்தமாக ஓர் செல்வாக்கை செலுத்தவேண்டுமென்பதற்காகவோ எதிரிப்புலனாய்வாளர்களால் போடப்படும் தூண்டில்களில் சிக்கிக்கொள்வதனால் தமிழர்கள் பேராபத்தையே சந்திப்பர்.**

விடும் நாசகாரத் துரோகிகளாகவே இருப்பர்.

ஒரு மனிதன் தன் வாழ்வை இரண்டு விதமாக அமைத்துக்கொள்கின்றான்.

ஒன்று இப்படித்தான் வாழவேண்டும் என்பதாகும். இது வழிகாட்டல்களைக்கொண்ட வாழ்க்கை.

இரண்டாவது எப்படியும் வாழலாம் என்பதாகும். இவ்வாழ்க்கை நெருக்கடிகளையும். பிரச்சினைகளையும் பெருமளவில் கொண்டுவரக் கூடியது.

ஆகவே தமிழர்களைப் பொறுத்தவரையில் இப்படித்தான் வாழவேண்டும் என்கின்ற வழிகாட்டல்களைக்கொண்ட வாழ்க்கைதான் தூண்டில்களில் சிக்கிக்கொள்ளாமல் தப்பிக்கொள்ள உதவும்.

**நீலன்**

இயேசு பாலைவனத்தில் தங்கி இருக்கும் போது சாத்தானால் கொடுக்கப்பட்ட மூன்று வாழ்க்கை கொள்கைகளை அவர் மறுத்துவிடுகின்றார்.

அதில் ஒரு நிகழ்வை மட்டும் இங்கு பார்ப்போம். அதாவது சாத்தான் ஓர் உயர்ந்த இடத்திற்கு இயேசுவை அழைத்துச்செல்கின்றது. அங்கிருந்து கீழே தெரியும் எல்லா அரசுகளையும் அவருக்குக் காட்டி அவற்றின் மீது அதிகாரம் செலுத்தும் உரிமையை உமக்கு கொடுக்கமுடியும் நீர் தெண்டனிட்டு என்னை வணங்கினால் இவையாவும் உம்முடையவையாகும் என்றது.

இயேசு இவ்வாழ்க்கை கொள்கையை மறுக்கின்றார். அவரின் பொதுவாழ்க்கை கொள்கையை சிதைப்பதற்கான தீய எண்ணத்துடனே சாத்தான் ஆசைகாட்டியது. அதனால் இயேசுவை தன் அடிமையாக்க முயற்சிசெய்தது. ஆனால் இயேசுவின்

**“ரகுலா” ஆங்கிலப்படத்தில் இரவில் இரத்தம் குடித்து மனிதர்களைக் கொல்லும் பிசாசு பகலில் அப்பாவியாக நல்லவர் போல் பாசாங்கு செய்து மனிதர்களை ஏமாற்றும். இதனை ஒத்த பாசாங்கு போலவே எதிரிப் புலனாய்வாளர்களின் முகமூடிகளாகும்.**

மன உறுதியால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டாது.

இச்சம்பவமானது மனித குலத்திற்கு முன்னுதாரணமாக எடுத்துக்காட்டவும், தீய எண்ணங்களுக்கு அடிமையாகப் போகக்கூடாது என்கிற செய்தியை வெளிப்படுத்தவும் சொல்லப்படுவதாகும்.

சிங்கள தேசத்தின் போர்க் கொடூரம் தமிழர்களது வாழ்வியலை நெருக்குதல்களுக்குள்ளாக்கியது. அதனால் உளநெருக்கீடுகளுக்குள் தமிழர்கள் வாழும் நிலை.

இதனால் தமிழர்கள் மனம் தொய்வு நிலைக்குள் இருக்கும் என்கிற அடிப்படையில் சலுகைகளால், வசதிவாய்ப்புக்களால் தமிழர்களை உள்வாங்க முனையும் புலனாய்வாளர்கள்.

எப்படி சித்திரவதைகளுக்குள்ளாகி சிறையில் இருக்கும் கைதி ஒருவனுக்கு சித்திரவதை செய்தவனே தன்கையால் ரொட்டித் துண்டை கொடுப்பதுபோல் இங்கு புலனாய்வாளர்களது செயல்கள் அமைகின்றன.

தமிழர்கள் இதுவரை காலமும் அல்லல் பட்டு துன்பப்படுகின்றார்கள், அவர்களது துன்பியல் வாழ்விற்கு ஒத்தடம் கொடுக்கப்படவேண்டுமென்கின்ற அடிப்படையில்தான் எதிரிப்புலனாய்வாளர்கள் சலுகைகள், உதவிகள், வசதிவாய்ப்புகளை தருகின்றார்கள் என்று தமிழர்கள் எவரும் எண்ணிவிடலாகாது.

தமிழரின் விடுதலைப்போர் வெற்றிபெற்றுவிடக்கூடாது என்பதிலும் பலசாலிகளாக இருக்கும் தமிழினத்தை பலவீனமுள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்பதிலும் புலனாய்வாளர்கள் பிடிவாதமாகவே இயங்குகின்றார்கள்.

அத்தகைய நிலையிலே தமிழரின் தேசிய உரிமைகளை வென்றெடுக்கப் போராடிவரும் புலிகள் இயக்கத்தின் பலத்தை சிதைக்கத்தக்க புலனாய்வுப் பணிகளையே சிங்களத் தடைமுகாம் புலனாய்வாளர்கள் முன்னெடுக்கிறார்கள்.

இப்புலனாய்வாளர்களாலேயே தமிழரின் உயிரும், தமிழரின் மாண்பும் வரலாற்றில் தொடர்ந்தும் அலட்சியப்படுத்தப்படுகின்றது என்பதனை தமிழர்கள் மறக்கலாகாது.

**“தமிழர்கள் இதுவரை காலமும் அல்லல் பட்டு துன்பப்படுகின்றார்கள், அவர்களது துன்பியல் வாழ்விற்கு ஒத்தடம் கொடுக்கப்படவேண்டுமென்கின்ற அடிப்படையில்தான் எதிரிப்புலனாய்வாளர்கள் சலுகைகள், உதவிகள், வசதிவாய்ப்புகளை தருகின்றார்கள் என்று தமிழர்கள் எவரும் எண்ணிவிடலாகாது. தமிழரின் விடுதலைப்போர் வெற்றிபெற்றுவிடக்கூடாது என்பதிலும் பலசாலிகளாக இருக்கும் தமிழினத்தை பலவீனமுள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்பதிலும் புலனாய்வாளர்கள் பிடிவாதமாகவே இயங்குவதோடு அதற்காகவே செயற்படுகிறார்கள்.”**

தமிழரின் தாயகத்தை, தமிழரின் படைபலத்தை பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. தம் தன்னலங்களுக்கு அப்பால் தமிழினத்தை பாதுகாக்க எண்ணும் கடமையுணர்வே மேலானது.

ஆதலால் எதிரி தம் தீய எண்ணங்களுக்குள் வீழ்த்தபோடும் தனிமனித உளவியல் தூண்டில்களில் மாட்டிக்கொள்ளாது தமிழர்களது, உள உரனை பேணி ஆரோக்கியமான தமிழ் சமுதாயத்தை உருவாக்குவோம்.

எதிரியால் போடப்படும் நாசகாரமான தூண்டில்களில் அகப்பட்டுக் கொள்ளாது தமிழ் இனத்தின் நல்வாழ்விற்காக தியாகம்செய்த பதினெட்டாயிரம் மாவீரர்களின் கல்லறைகளை புனிதமாக்குவோம்.

எதிரியால் போடப்படும் சூழ்ச்சிகரமான தூண்டில்களில் சிக்கிக் கொள்ளாது நூறு ஆயிரம் தமிழர்களின் இரத்தம் தோய்ந்த தமிழர் தாயகத்தை பாதுகாத்து பலமாக்குவோம். ○

எவரையும் அடக்கி ஆளாமலும், எவராலும் அடக்கி ஆளப்படாமலும் இருப்பவனே, உண்மையில் சிறந்த மனிதன். - கலீல் கிப்ரான்

'பலாலி' என்னும் சொல் என்ன மொழிச்சொல்லாயினும், என்ன அர்த்தத்தைக்கொண்டிருப்பதாயினும், கருத்தே இல்லாததாயினும் கூட இலங்கைத் தமிழர்களை, குறிப்பாக வடபகுதித் தமிழர்களை பொறுத்தவரை அதற்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. அதாவது தமிழர்களின் பொருளாதார வலுக்கோட்டையாக தொன்று தொட்டு இருந்து வந்த இப்பகுதி இன்று தமிழர்களை நிரந்தரமாக ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரசுகளின் வலுக்கோட்டையாக கர்ச்சித்து நிற்கின்றது. வடபகுதியின் பிரதான படைத்தளமாக~ வான் படைத்தளமாக அண்மைக் காலத்தில் பயன்பட்டு பல்லாயிரம் பேர்களின் உயிர்களைப் பலி கொண்டு ஏப்பம் விட்டு நிற்கின்றது. அவ்வளவுதான் அல்ல. பொருளாதார வளங்களின் அழிவுக்கு காரணமாகவும், விவசாயப் பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டு நிற்பதும், இதனால் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக உள்ளதுமாகும்.

தமிழர்களின் ஞாபகத்தில் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் மக்களின் ஞாபகத்தில் பலாலி ஒரு இயமனாக நிலைத்து நிற்கும் ஒன்று. கடந்த 2தசாப்தங்களில் வடபகுதியில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் அம்மா என்னும் சொல்லை உச்சரித்த தடவைகளிலும் மிக அதிகமான தடவைகள் உச்சரித்த சொல் பலாலி என்பதாகவே இருக்கும்.

இன்று நரகத்துமுள்ளாக~ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயமும் பலாலி விஸ்தரிப்பின் அம்சமே! இதனால் இன்னும் பல தசாப்தங்களுக்கு இச் சொல் வடக்கு மக்களின் உதடுகளில் பல்லாயிரம் தடவைகள் புரளப் போவதுமாகும்.

பலாலி தளமாகியது எப்படியெனும் ஆய்வை இப்பொழுது மத்திய கல்லூரி அதிபராக உள்ள க.இராசதுரை அவர்கள் 14 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகை ஒன்றில் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தார். அதனை நன்றியுடன் மீள் பிரசுரம் செய்கின்றோம்.

# ‘பலாலி விமானத் தளம்’ தமிழீழ நெஞ்சில் ஓர் முள்

வானுயர்ந்து நீண்டு வளர்ந்த பனந்தோப்புக்கள் நிறைந்தது பலாலி. யாழ்ப் பாணத்தின் பயிர்ச் செய்கையில் உச்சப்பயனளிக் கும் செம்மண் அதன் சொத்து வைரித்த நெஞ்சம் கொண்ட தமிழர்களைப் போல் வைரச் சுண்ணக் கற்கள் செம்மண்களுக்கிடையே நிமிர்ந்து - பரந்து நிற்கும் வட திசையில் திரைகடல் ஓடி திரண்டு செம்மண்ணையும் வெண்மண் ணையும் இணைத்து அம்மண்ணுக்கு முத்தம் கொடுக்கும் கடல் வளமும் இங்கு நிறைய உண்டு.

## பாப்பரசர் ஆசி

சைவர்களும் கிருஸ்தவர்களும் இணைந்து வாழும் இப்பிரதேசம் 1960 ஆம் ஆண்டளவில் அப்போதைய பாப்பரசர் 23 அவது அருளப்பராளும் ஆசிர்வதிக்கப்பட்டதை கிறிஸ்தவர்கள் நினைவுகூர்ந்து மகிழ்வர். பலாலியைச் சேர்ந்த யோசேவ் புலேந்திரன் ஆபிரிக்க நாட்டில் புரிந்த சேவையைப்பாராட்டிய பாப்பரசர், “உம்மைப்பெற்ற பலாலி புகழ் பெறுவதாகுக!” என்று ஆசிர்வதித்தார்.

## கேந்திர நிலையம்

இரண்டாவது உலக யுத்தம் நடை பெற்றுக்கொண்டிருந்தவேளை அது. பிரித் தானியரது அதிகாரத்தில் இலங்கை முழுவதும் அடிமைப்பட்டிருந்தகாலம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்ட பிரித்தானிய அரசு தனது சகல வளங்களையும் பயன்படுத்தியது.

இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக இலங்கை விளங்கியது. இத னால் இலங்கையில் குறைந் தது பதினைந்து விமானத் தளங்களை அமைக்க பிரித் தானிய அரசு அமைக்க யுத்தக்காரியலயம் (War of-fice) தீர்மானித்தது. பிரித் தானிய யுத்தக் காரியாலயம் கிழக்கில் நான்கு பிரிவாக பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

01. தென்கிழக்காசிய அணி (South East Asian com-mand)
02. அண்மைக் கிழக்கு நாடுகள் அணி (Near East Command)
03. மத்தியகிழக்கு நாடுகள் அணி(Middle East Command)
04. தூரகிழக்கு நாடுகள் அணி (Far East Command) என வகுக்கப்பட்டு தென்கிழக் காசிய அணி பிரபு லூயிஸ் மவுண் பேற்றன் (Lord Louis Mountbatten) தலைமையில் இயங்கியது.

## வடக்கில் ஒரு தளம்

இலங்கையில் அமையும் பதினைந்து விமான தளங்களில் ஒன்றை வட பகுதியில் நிறுவுவதென தீர்மாணிக்கப்பட்டது. இந்தியாவு டன் தொடர்பு வைக்க இது தேவையாக இருந்தது. அப்போதைய இரண்டாம் உலக யுத்தத்திற்கு இலங்கையின் இறப்பரும் உலகப் புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலைத் துறைமுகமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா, நியூகினி, பொஸ்கா, மாலைதீவு, சிங் கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கான பாதுகாப்புக் காக இந்து சமுத்திரத்தின் முக்கியதளம் இலங்கையில் இருப்பதை பிரித்தானியா விரும்பியது. இதற்கான விமானத்தளத்தேவையும் உணரப்பட்டு வடபகுதியில் அமையும் விமானத்தளத் துக்கு உகந்த இடங்கள் தெரிவுசெய்யும் பணி ஆரம் பமாகியது.




## பலாலி தெரிவாகியது

வடபகுதியில் விமானம் இறங்கு வதற்கு ஏற்ற நிலங்கள் பல பார்வையிடப்பட் டன. விமானம் இறங்கும் போது அதன் அமுக்கத்தைத் தாங்கும் நிலங்கள் பல பரிசோதிக்கப்பட்டன. நீர் வேலி, கல்லுண்டாய் வெளி, வல்லை வெளி, கைதடி, புத்தூர், வள லாய் வெளி போன்ற இடங்களில் ஆரம்பத்தில் சிறிய விமானம் இறங்கும் பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்விடங் கள் அதற்குகந்ததாக உணரப்படாமையினால் கைவிடப்பட்டன.

பலாலியின் தற்போதைய விமான நிலையத்தின் மேற்கில் பரீட்சார்த்த விமானம் இறக்கப்பட்டது. விமான நிலையத்திற்கு மிகப் பொருத்தமான இடமாக அது அமைந்தமை தென் கிழக்காசியா அணியினருக்கு மகிழ்ச்சி யைத்தந்தது. அப்போது இலங்கை இராணு வத்துக்கு பொறுப்பாக இருந்தவர் ஜெனரல் கொப்பிறே லெயிற்றன் (Godfry Layton) இவர் பலாலியை தெரிவுசெய்தார்.

## காணிகள் சுவீகாரம்

பலாலியை விமானத்தளமாக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விமானத் தளத்திற்குத் தேவையான காணி யினை அரசு கட்டாயமாக (Requistion) எடுத் துக்கொண்டது. விளாத்தியடி,அருகு, நொங்க சிட்டி,தேளான் வெளி,குளக்கரை, வாகுபனை, மல்லம்பாதி,வெள்ளுருவை, வன்னியங்கா வெட்டி,சூடுகட்டுவன், காட்டுக்குடியிருப்பு, சகுனியா கிணத்தடி, விளாங்கங்காடு,ஒல்லை என்ற பெயருடைய காணிகளே இவ்வாறு அரசால் எடுக்கப்பட்ட காணிகளாகும். இக்காணி களில் குடியிருந்த மக்கள் அகற்றப்பட்டனர். சாத்திரியார் என்றழைக்கப்பட்ட திரு. வன்னியர் கதிர்பிள்ளை என்பவர் மட்டும் தனது இடத்தை விட்டு அகலமறுத்துவிட்டார்.

அவரைப்பலாத்காரமாக அகற்றஅரசு விரும்பவில்லை. ஏனைய காணிகள் சுத்திகரிக் கப்பட்டன. காலப்போக்கில். திரு.கதிரிப்பிள்ளை தாமாகவே காணியைவிட்டு வெளியேறினார். விமான தளத்திற்கான காணிகள் விரை வாகத்திருத்தப்பட்டன. இதற்காக ஆரம்பத்தில் ஓடு பாதைக்கு (Runway) மட்டும் ஏழு கிணறு களும் அவற்றுக்கான தோட்டங்களும், குடி மனைகளும் நட்டஈட்டு அடிப்படையில் அகற்றப் பட்டன.

## கேரளத்திலிருந்து தொழிலாளர்

தளம் அமைக்க உடனடியாக ஐயா யிரம் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். உள்ளூ ரில் இவ்வளவு பெருந்தொகையான தொழிலா ளர்கள் கிடைக்கவில்லை. இந்திய கேரளமா நிலத்தைச்சேர்ந்த கொச்சி மாவட்டத்தில் இருந்து 800 தொழிலாளர்கள் 1942ஆம் ஆண்டு மாசி மாதம் கப்பல்மூலம் கொண்டுவரப்பட்டனர். அவர்களைக்காங்கேசன் துறைமுகத்தில் கப்பல் கொண்டுவந்து இறக் கியது.

தொழிலாளர்கள் நடைபாதைவழியாக பலாலிக்குக்கொண்டு வரப்பட்டனர். இத் தொழிலாளர்கள் பாறாங்கற்களைப் பெயர்க்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து தொழி லாளர் கொண்டு வரப்பட்டமை சுதேசிய தமிழ் மக்களுக்கு மனக்கிலேசத்தை ஏற் படுத்தியது. எனினும் பிரித்தானிய அரசின் ஆதிக்கத்துக்கு தமது எதிர்ப்பைக்காட்டமுடியாது மக்கள் தமது மனதுக்குள் புழுங்கினர். வெள்ளைக்கார ஆட்சி யையே மனதாரவெறுத்தனர். இவ்வெறுப் புணர்ச்சி கொச்சியார்மீதும் திரும்பியது. கொச்சியாரை எதிர்க்க சுதேசிகள் துணிந் தார்கள்.

## மொண்டிகள்

பலாலி,வசாவிளான் வளலாய், பகுதிகளில் வேலைக்கமர்த்தப்பட்டனர். இவர் கள் கல்லுக்கிளறும் இடங்கள் ‘மொண்டி’ என அழைக்கப்பட்டது. பலாலி தெற்கு தெழுந்தை மொண்டி, வசாவிளானிலுள்ள போயிட்டி மொண்டி (தற்போதைய சுந்தரபுரம்) குப்பிளான் மொண்டி வளலாய் மொண்டி, நிலாவரை மொண்டி என்பவற்றில் பலாலி ஓடுபாதைக் குரிய கற்கள் தோண்டி எடுக்கப்பட்டன.


மாரிகாலத்தில் தெல்லிப்பளைக்குப் பயணம் செய்பவர்கள் குரும்புசிட்டியை சுற்றிச் செல்லநேர்ந்தது. விமான ஓடுபாதைக்கு திட்டமிடப்பட்ட தென்பகுதி மாரியில் இயல் பாகவே குளமாகுவது வழக்கம். சில் வாழைக் குற்றிகளை பிணைத்துக்கட்டியும், ஆமையோடு களையும் தெப்பமாகப்பாவித்து கட்டுவன்கரை சென்றனர். இப்பகுதிகள் பின்பு மொண்டிகளில் எஞ்சும் கல்லும் மண்ணும்கொண்டு நிரப்பப்பட்டன.

## சுதேசிகள் வியாபாரம்

கொச்சியாருக்கு சுதேசிகள் திட்டமிட்டு தமது பொருட்களைக்கூடிய விலைக்கு விற் றார்கள். அக்காலத்தில் ஒரு பணம் என்று கூறப்பட்ட ஆறுசதத்திற்கு பெறப்பட்ட ஒரு றாத்தல் சூடைவகைமீன்கள் பொரித்தெடுக் கப்பட்டு ஒரு மீன் பத்துச்சதமாக அவர்களுக்கு விற்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு அவர்களது வேலைத்தளங்களில் வைத்து தேநீர், மதிய உணவு என்பன எடுத்துச்சென்று வழங்கப்பட் டன. குடிநீர் வளலாய் பிள்ளையார்கோவிலில் இருந்து எடுக்கப்பட்டு பவுசர்கள் மூலம் விநி யோகிக்கப்பட்டது. உள்ளூர்த்தொழிலாளர்கள் இரண்டு மொண்டிகளில் தமது பெயரைப்பதிந்து ஓரிடத்தில் மட்டும் வேலைசெய்து இரண்டுக்கு மேற்பட்ட சம்பளம் பெற்றுக்கொண்ட சம்பவங் களும், வேலைகளில் பரிச்சயமற்றவர்களும் வேலைக்குச்சென்று சமாளித்த சம்பவங்களும் இடம்பெற்றன.

## பலமான ஓடுபாதை

தொழிலாளர்களைக்கொண்டு 3600அடி நீளமான ஓடுபாதை அமைக்கப்பட்டது. இலங்கையில் அமைக்கப்பட்ட பதினைந்து விமான தளங்களில் பலமான ஓடுபாதையாக பலாலி விமான தளமே இன்றும் கருதப்படு கின்றது. கட்டுநாயக்கா விமானதளம் கூட, செயற்கையாக நிலத்துக் கடியில் 8 அடி கொங் கிரீட்போடப்பட்டு பலமான தாக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது. சர்வதேச விமான தளமொன்றிற்கு பதினேழாயிரம் அடி நீள மான ஓடுபாதை தேவை யாகும்.




## கட்டடங்கள் எழுந்தன

பலாலி விமான தளத்தில் கட்டடங்கள் அமைக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப் பட்டது, வைத்தியசாலை தோட்டங்கள், வீடுகள், ஓடு பாதைகளுக்குள்ளிருந்த ஏனைய கிணறுகள் அழிக்கப்பட்டாலும் எல்லைப்பகுதிகளில் இருந்த இந்துக்கோவில்கள் பாதுகாக்கப்பட்டன. அமைய விருக்கும் விமானப்படைக்குரிய வைத்திய சாலையும் சமகாலத்தில் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது. சுமார் ஒன்பது ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கப்பட்டது. இதுவே றோயல் விமானப்படை வைத்தியசாலை (Royal Air Forse Hospital) இது தற்போது பழைய ஆஸ்பத்திரி என அழைக்கப்படுகின்றது.

## சுதேசிகள் கொச்சியார் மோதல்

விமான நிலைய வேலைக்கென கொண்டுவரப்பட்ட கொச்சியாருக்கும், சுதேசி களுக்குமிடையில் வளர்ந்துவந்த பகைமை யுணர்வு பெண் விவகாரமொன்றினால் கலகமாக வெடித்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)

# ஓர வஞ்சகத்தின் சில காட்சிகள்

சு.ஞாலவன்



**1995 ஆம் ஆண்டிலிருந்து சமாதானத்துக்கான போர் என தனது ராணுவ வெறியாட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கிய சந்திரிகா அரசு, புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரித்தெடுத்து ஓரங்கட்டுவதற்கான தனது 'அரசியலமைப்புச் சீர்திருத்தத் திற்கான ஆலோசனைகள்' என்ற அரைகுறையை முன்வைத்தது, உலக்கையாய் இருந்து உளியாய்த் தேய்க் கப்பட்ட அந்தத் தீர்மா னத்தை, நாடாளு மன்றத்திலே சமர்ப்பித்தது.**

இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைபற்றி புலிகள் முன்வைத்த தீர்வுத்திட்டம் குறித்து உருப்படியாக எந்தவிதக் கருத்துகளையும் தெரிவிக்க திராணி யற்ற நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெறுமனே காலத்தை இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றது. அரசின் இந்த கேலிக்குரிய சிறுபிள்ளைத்தனம் இன்னும் சில மாதங்களுக்கு (மகாண சபைத்தேர்தல்கள் முடியும் வரைக்கும்) இதேபோக்கில் சற்று மாறுதல்களுடன் தொடரும் என எதிர்பார்க்கலாம். எங்கள் தேசியத் தலைமையின் கீழ் இராணுவ வியூகங்களுக்குள் மாத்திரமன்றி, அரசியல் ரீதியான நெருக்குவாரங்களுக்குள்ளும் உட்பட்டுத்தவிக்கும் பேரினவாதத்தை "புதினம் பார்ப்பது" என்பது மிகவும் சுவாரஸ்யமான காரியம். தேர்வுகளில் மட்டுமல்லாமல், தேர்தல்களிலும் 'குதிரை ஓட'த் தொடங்கியிருக்கும் தென்னிலங்கை அரசியலைப் புதினம் பார்க்கும் அதேவேளை, இந்தச் சூழ லில் நாமனைவரும் நம்முடைய நிகழ்கால மற்றும் நீண்டகாலத் தேசியக் கடமைகளை உணர்ந்தவர்களாய் உழைக்கவேண்டும்.

அடிக்கடி மாறிக்கொள்ளும் 'தென்னிலங்கையின் சமாதானத்திற்கான முகம்' பற்றியும், அதிகபட்சமாக அது எதைத்தருவதற்குத் தயாராயுள்ளது என்றும் பார்க்க வேண்டும். அரசியல் அதிகாரங்கள். சட்டரீதியாகப்பகிர்ந்தளிக்கப்படுபவையாகவே கருதவேண்டுமே தவிர 'தரப்படுதல்' ஆக அல்ல! இருந்தும் சிங்களஅரசுகள் இன்னும் 'தருவது' 'கொடுப்பது' பற்றியே அதிகம் அலட்டிக்கொள்கிறது. பிரிட்டிஷ் மேலாதிக்கத்திடமிருந்து எதைத்தாம் பெற்றுக்கொண்டுவிடவேண்டும் என்று கண்ணாக இருந்தனரோ, அதைத் தமிழர்கள் ஒருபோதும் பெற்றுவிடக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருந்துவரும், அரசின் போக்கை ஒப்பிட்டுப்பார்த்தல் அவசியம். வீட்டுக்கும், நாட்டுக்கும் உதவாத வீணர்கள் சிலர் விழுந்தபோது, சில மணித்தியாலங்களுக்குள்ளேயே கடல்கள் தாண்டி வந்த கண்டனக்கரிசனைகள், மூத்த பத்திரிகையாளர் ஒருவர் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் 'அந்த' மனித உரிமை பேசும் நாட்டிலிருந்து வரக்காணோம். இதைப் போலவே யாழ்பல்கலைக் கழக மனிதநேய அமைப்பு எனக் கூறிக்கொள்ளும் முகவரி இல்லாததும், யாழ்பல் கலைக்கழகத்துடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற UTHR என்னும் அமைப் பும் பக்கம் பக்கமாய் புலம்பித் தள்ளும் இப்படியான ஒப்பீடுகளினூடாக நம்மை ஒடுக்கவருபவர்களின் ஓர வஞ்சகத்தைப்பற்றித்தெளிந்து கொள்ளுதல் சுலபம்.

1995ஆம் ஆண்டிலிருந்து சமாதானத்துக்கான போர்' என தனது ராணுவ வெறியாட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கிய சந்திரிகா அரசு, புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரித்தெடுத்து ஓரங்கட்டுவதற்கான தனது 'அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள்' என்ற அரைகுறையை முன்வைத்தது, உலக்கையாய் இருந்து உளியாய்த்தேய்க்கப்பட்ட அந்தத் தீர்மானத்தை, நாடாளுமன்றத்திலே சமர்ப்பித்தது. பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பதத்தினால் வழங்கப்பட்ட இந்த 'உளி' (மாஜி உலக்கை) முன்மொழிந்த சில வரைவுகளைப்பாருங்கள் இதன் மூலம் எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும் சட்டவிரோதமாகக் கருதப்படக்கூடியவற்றில் சில இங்கே:

1) பிராந்தியங்களின் இடப்பரப்பினை மாற்றுதல்.

02) எல்லைகளை மாற்றுதல்.

03) பெயர்களை மாற்றுதல்

04) மேற்கூறிய மாற்றங்களினூடாக புதியதோர் பிராந்தியத்தை அமைத்தல்.

1948 ஆம் ஆண்டி லிருந்து குடியேற்றத்திட்டம், திட்டமிட்ட கலவரம், இனச்சுத்திகரிப்பு மூலம் தமிழ்த்தேர்தல் தொகுதிகளில் சிங்களப் பெரும்பான்மையை ஏற்படுத்திவிட, என்னென்ன சிங்களப் பேரினவாதிகளால் செயற்படுத்தப்பட்டனவோ, அவையெல்லா வற்றிலும் குறியாயிருந்து, தமிழரைத் தடுப்பதே முக்கியமாகக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காவல்துறை, கல்விபோன்றவற்றிலே மத்திய அரசே தனது மேலாண்மையைக்கொண்டிருந்தது. கல்வியில் தரப்படுத்தல் சிங்களத் தனிச்சட்டம், பாதுகாப்புத்துறைகளில் உதாசீனம் போன்ற ஒடுக்குமுறைகளாலேயே விடுதலைப் போராட்டம் அவசியமானது என்ற அடிப்படை உண்மையையே. இதை ஆக்கிய புத்திஜீவிகள் மறந்து போயிருந்தனர். சனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநருக்கு உட்பட்ட ஒரு நிர்வாகப்பகிர்வு நடைமுறையை, அரசியல் அதிகாரப்பகிர்வாகக் காட்ட முனைந்தார்கள். தமிழர் தாயகப் பகுதிகள் மட்டுமன்றி சிங்களப்பகுதிகளும் இந்தப்பிராந்திய வரைவுகளுக்குட்பட்டன. வடகிழக்கில் வாழும் சிங்களக்குடியேற்றவாசிகளின் நலன் குறித்து அதிகபட்ச அக்கறை எடுத்துக்கொண்ட அதேவேளை, தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் மறக்கப்பட்டிருந்தனர். இதற்கும் மேலாக தாயகத்தைப்பிரித்து கிழக்கைத் துண்டுதுண்டாக வடக்குடன் இணைப்பதா என்று சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்படும் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழர் தாயகத்தின் எல்லைக்கோடுகள் சிங்களத்தால் தம் நலன்களுக்கேற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கும்போது மேற்குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடாத்த விழையும் அரசு தமிழ்மக்கள் செறிந்து வாழும் கண்டியிலும் இதுபோன்று நடாத்த சம்மதிக்குமா? வரலாற்றில் தொடர்ச்சியாக ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுத்துத்தன்னை ஒரு ஆக்கிரமிப்பரசாக ஆக்கிக்கொண்ட சிறிலங்கா 1972 இல் பிரிட்டிஷ் மேலாண்மையிலிருந்து தன்னை விடுவிக்கத் தலைபட்டதை மறந்துவிட்டதா? சகல விதத்திலும் 1948 இல் பிரிட்டன் ஒரு பெரும்பான்மைசார் அரசமைப்பையே விட்டுச்சென்றபோதிலும், குடியரசு அந்தஸ்து இல்லையே என்ற நிலையில் பிரிட்டனின் மேலாண்மைக்கு உட்பட்ட தமது கௌரவத்தை மீட்பதற்காய் நாடாளு மன்றத்திற்குப் புறம்பாய்கூடியே வழியமைத்தார்கள். இப்படியெல்லாம் வரலாறு இருந்த போதிலும் ஒரு அரைகுறைத் தீர்வையே(?) சிங்களப் பேரினவாதம் ஏற்கத்தயாரின்றி இருந்தது. ஆமாம், உலக்கை தேய்ந்து உளியாகிப்பின்னர் ஊசியாகிக் காணாமல்போனது. இதன் பின்னர் சற்றே கவர்ச்சிகரமான சொற்றாடல்களுடன் கூடிய சட்டமூலம் 2000 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. விமர்சனத்துக்கு என்று இதிலுள்ள பலவிடயங்கள் எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும், ஒருபானை சோற்றிற்கு ஒரு பருக்கை பதம்போல சில அம்சங்களை மட்டுமே பார்த்துக்கொள்வோம்!

வடக்கு-கிழக்கு இடைக்காலச் சபைக்கான உறுப்பினர்களை சனாதிபதியே நியமிப்பார்.

இந்த இடைக்காலசபை பின்வருவன தொடர்பாக எடுக்கும் முடிவுகள் குறித்து வாக்கெடுப்பு நடாத்தி பெரும்பான்மை கிடைத்தால் மட்டும் போதாது. ஏனைய இரண்டு சிறுபான்மை இனங்களின் ஒப்புதல்களையும் பெற்றிருக்கவேண்டும். அவ்விடயங்களாவன இப்பகுதியில்; வாழும் மக்களின் பாதுகாப்பு, அவர்களுக்கான பொருளாதார வாய்ப்புகள் மற்றும் குறிப்பிட்ட ஒரு மதத்துக்கான மறைமுக வெளிப் படையான அங்கீகாரம். பாருங்கள் நகைச்சுவையை! சமத்துவம் குறித்து ஆழமாக மூளையைப்போட்டடித்த அமானுயர்கள் தாங்கள் கண்டுபிடித்த ரகசியத்தை கொஞ்சம் நாடளாவிய ரீதியில் அவர்களே கடைப்பிடித் திருந்தால் இனப பிரச்சினை என்ற ஒன்றே ஏற்பட்டிருக்காதல்லவா!

எல்லாத்தரப்பினருக்கும் பொதுவானதாக இருக்கும் சிவனொளி பாதமலையைத் தேசியக்கொடியாகக் கொள்ளச்சொல்லி தமிழ்த்தரப்பு வேண்டியிருந்தும்,ஒருதரப்பு விருப்பமாக அன்று சிங்கள மரபையொட்டி யாளி மிருகமும், பௌத்தமதத்தினைக்குறித்து அரச இலைகளும் தெரிவுசெய்யப்பட்டன. ஏதோ பின்னர் சாட்டுப்போக்காக தமிழோடு எந்த சம்மபந்தமும் இல்லாத நிறத்தில் ஒரு பட்டை கொடியோரத்தில் தீட்டப்பட்டது. இவர்கள் மதச்சார்பற்ற நாடொன்றையே தாங்கள் வேண்டுவதாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தெரிவித்துவிட்ட தமிழ் மக்களுக்கு, மதமேலாதிக்கம் பற்றிப் போதிக்கிறார்கள்!


உள்நாட்டில் மட்டுமல்ல, உலகளாவியரீதியில் இப்படியான ஓரவஞ்சகங்களை காணலாம். பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை, அதன் ஆயுதம் சார்ந்த தலைமையை பலமாகவே ஆதரித்த, ஆதரிக்கும் நாடுதான் இந்தியா.

மேலும் பாதிப்புக்குள்ளாகும் மக்களைக் காப்பாற்றுவதாக கிழக்குப்பாகிஸ்தான் மீது படையெடுத்து முஜிபுர் ரஃமானிற்கு ஆதரவாக பங்களாதேஷ் உருவாகக்காரணமாயும் இருந்தது. ஆனால் எங்கள் விடயத்திலோ... விறைத்த விடாப்பிடித்தனம்.

சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காகக்குரல் கொடுத்த சோசலிச சோவியத்கூடஎரித்திரியா,(சஹாரா) சகாரா விடயங்களில் ஆக்கிரமிப்பாளர்களுக்கே துணை போயின. இவர்கள் இப்படியென்றால் மேலைத்தேயம் சும்மாவா? தாய்வான் ஹொங்கொங் மாக்காவின் சனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுவிடலாகாது! திபெத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன! சுலோவேனியா, குறோசியா முழு விடுதலை பெறவேண்டும்! என்றெல்லாம் மானுட விடுதலைக்காய்(?) குரல் கொடுத்த கொடுக்கும் மேலைத் தேயம் ஆபிரிக்காவிலும் தென்ன மெரிக்காவிலும் ஆயுத விற்பனைக் காகவே போர்களை முடுக்கி விடுகின்றன. மத்திய கிழக்கு அரேபிய நாடுகளிலேயே ஓரளவு சமத்துவம் நிலவி வந்த ஈராக்கில் தம்கால்களைப் பதித்துவிடபோட்டிபோட்டன. சவுதிக்கு அடுத்ததாக மிகப்பெரிய எண்ணெய்வள நாடான ஈராக்கை ஏப்பம் விடும் ஏக்கம் தான் அதற்குக் காரணம். அரச வம்சத்தின் எதேச்சிகார ஆட்சிக்கெதிராகப் போராடிய சமத்துவவாதிகளை நேபாளத்தில் அடக்க 1960களிலேயே நேரு ஆட்சியில் இந்தியா உதவியது. இன்று அதை உலகின் பெரிய நாடு செய்கிறது. ஈராக்கில் மக்களாட்சியை ஏற்படுத்திவிடப்போர்புரியும் அதே அமெரிக்காதான், நேபாளத்தில் மன்னராட்சிக்கு ஆதரவாக மக்களாட்சி வாதிகளைக்கொன்று குவிக்க உதவுகிறது.

ஒப்பிட்டுப்பார்த்தால் இதன் பின்னணி தெளியும். அல்லவா? ஆனால், ஒன்றுமே புரியாமலும் போய் விடும். இதைத்தான் 'உலகே மாயம்' என்று மூத்தோர் சொன்னார்களோ? அதனால்தான் அந்த மாயையை அடிக்கடி விலக்கிப்பார்க்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகின்றது. உலகம் இருள் மயமானதுதான் கண்களை அகலத்திறக்கும் வரை!

பண்புள்ள நடத்தை என்பது எந்தெந்த இடத்திற்குச் சென்றாலும் நுழைவுச் சீட்டாகப் பயன்படும். - யாரோ




# பிரச்சினை இல்லாதவர்களின் பிரச்சினைகள்...

ஆதிலட்சுமி சிவகுமார்.

பிரதானவீதியிலிருந்து பிரிந்து இடதுபுறமாகச் செல்லும் ஒழுங்கைக்குள்தான் வீடு. அண்ணாந்து பார்க்க முருகன் கோயில்கோபுரம் பளபளத்தது. மனதுக்குள் பழையநினைவுகள் வலியாய் எழுந்தன. பள்ளிக்கூடம் போகும்போது இந்தக் கோபுரத்துச் சிற்பங்களைப் பார்ப்பதற்கு நிறைய நேரம் செலவிடுவோம்... முருகனின் ஆண்டிக்கோலத்தைப் பார்த்து வாய்பொத்திச்சிரிப்போம்....

'அம்மா... அங்கையம்மா... மயில் நிக்குது...'

நீளமான தோகையோடு ஆண்மயில்... அருகருகாக இரண்டு பெண்மயில்கள்... முன்பு கோயில் வீதியில் காவடிகட்டும் வேலைகள் நடக்கும். எல்லா இடங்களில் இருந்தும் திருவிழாக் காலங்களில் காவடிகளை வாடகைக்கு அமர்த்த இங்குதான் வருவார்கள்.

எனக்குக் கூட சின்னவயதில் காவடிநேர்த்திவைத்து நிறைவேற்றியதாக அம்மா சொன்னா. காவடிகள்தான் எங்களூர்ச் சிறப்பு. இப்போது காவடிகட்டும் தொழில் புரிந்தவர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள் என்று கேள்வி, தொழிலும் அருகிவிட்டிருந்தது. ஒழுங்கையில் பூவரசு வேலிகளைக்காணவில்லை. மதில்கள் நிமிர்ந்து நின்றன...

கட்டுக்கிணற்றடி கண்களிற்பட்டது. மனது ஒருமுறை விரிந்தது, 'அந்தா வீடு தெரியுது...' பரவசத்தோடு காட்டினேன்.

கட்டுக்கிணறு பாசிபிடித்துப் போயிருந்தது. ஐம்பது வருசப் பழமைவாய்ந்தகிணறு. ஊரில் கட்டப்பட்ட முதலாவது கிணறும் இதுதான். இருபத்தைந்து குடும்பங்கள் வரையில் இந்தக்கிணற்றுக்கு பங்காளிகள்... கிணற்றின் அருகே வைரவர். வெள்ளிக்கிழமைகளில் பஜனைபடிப்பது இங்குதான். வைரவர் சூலத்திற்கு யாரோ செவ்வரத்தம் பூக்களை செருகிவிட்டிருந்தார்கள். கீழே கொஞ்சம் சில்லறைக் காசுகளும் கிடந்தன.

வீடுவந்துவிட்டது. இதுதான் வீடு என்று நிதானிப்பதற்கிடையில் நீளமான நாக்குத் தொங்க.... நாயொன்று எட்டிப்பார்த்தது.

"அத்தை..."மகன் பெரிதாக கூப்பிட்டான் வாங்கோ... வங்கோ'

சமையலில் ஈடுபட்டிருக்க வேண்டும். கையைச் சேலைத் தலைப்பில் துடைத்தபடியே மச்சாள் ஓடிவந்தா, என்கணவரின் அக்கா. 'இவன் சரியா தேப்பனைப் போலதான் என்ன...?' அவனை அணைத்தபடி உள்ளேபோனா... ஒன்றரைவயதுக்குப்பிறகு இப்போதான் பார்க்கிறா. 'சரியான வெய்யில்... களைச்சுப்போயிருப்பியள்... இருங்கோ... குசினிக்குள்ளிருந்த குளிரூட்டியைத்திறந்து சோடாவை எடுத்து கிளாஸில் ஊற்றினா...

'எடுத்துக்குடி தம்பி...'

மற்றையகிளாசை என்னிடம் நீட்டினா. சில்லிட்டது.

'நல்லா மெலிஞ்சு போனீங்கள் மச்சாள்...'

'வாறவையெல்லாரும் உப்பிடித்தான் சொல்லீனம்... ஆனா எனக்கென்னகுறை..?'

'ராசாத்தி கடிதம் போடுறவளே...'


'இப்ப கடிதம் போடுறது குறைவு... கிழமேலை ஒரு நாளைக்கு ரெலிபோன் எடுப்பாள்...' மேசையில் கையடக்கத்தொலைபேசி இருந்தது.

'தம்பி....உடுப்பை மாத்து... மச்சாள் நீங்களும் கைகாலைக் கழுவினியளெண்டா... சாப்பிடலாம்... சமையல் முடிஞ்சுது....'

'இப்பவோ...'

'ஏன்...ஒரு மணியாச்சுத்தானே... சாப்பிடலாம்.. எழும்புங்கோ...'

வீட்டுடன் இணைத்து புதிதாக



குளியலறை, கழிப்பறை கட்டியிருந்தார்கள்... குளியலறைத் தண்ணீர்நேராக தேசிமரமொன்றுக்குப் போய்க்கொண்டிருந்தது.

வெளியே ஈவிரக்கமற்று எறித்துக்கொண்டிருந்த வெய்யிலுக்கு தொட்டியில் இருந்த குளிர்நீர் இதமாக இருந்தது.

குளித்துவிட்டு வருவதற்கிடையில் மேசையில் உணவு தயாராய் இருந்தது. எல்லாம் மரக்கறிச் சமையல்தான்.

'பார்த்தீபன் மத்தியானச் சாப்பாட்டுக்கு இஞ்சதான்' வாறவன்... கைக்குழந்தையோடை மதிக்குச் சமைக்கிறது கரைச்சல்தானே...' பார்த்தீபன் மச்சாளின் மூத்தவன்,

'குழந்தை எத்தினை மாதம்...?'

'உடும்பு பிடிக்கிறான்...'

'அம்மா.. ஆமிக்காறன்கள் வாறாங்கள்...' கேற்றடியில் நின்றவன் ஓடிவந்தான். அவனுக்கு மூச்சிரைத்தது.

'நீ ஓடாதை... அவங்கள் தங்கடபாட்டிலை போவான்கள்...' நாலைந்து சயிக்கிள்களில் இராணுவத்தினர் போனார்கள்...

'உவங்களாலை ஒரு பிரச்சினையுமில்லையே...'

'ச்சீ... உவங்கள் எங்கட கண்ணாடித் துரையற்றை வீட்டிலை இருக்கிறாங்கள்...'

'சனத்துக்குப் பிரச்சினை இல்லையே...'

'அவங்களுக்கு எங்கட மொழி விளங்காது... எங்களுக்கு அவங்கடை மொழிவிளங்காது... தங்கடைபாட்டிலை திரிவாங்கள்...'

'உவங்கள் உப்பிடி வகைதொகையா ஆயுதங்களோடை நிக்கிறாங்கள்... ஒரு சிக்கல் எண்டால் விட்டுவைப்பாங்களோ...'

'நீங்கள் புதிசா அவங்களப்பாக்கிறதாலை பயப்பிடுறியள்... நீங்கள் நினைக்கிறமாதிரி ஒரு பிரச்சினையுமில்லை...'

மாலையில் குளித்துவிட்டு முருகன் கோயிலுக்குப்போனோம். தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் என்று எல்லோரும் சுகநலம் விசாரித்தார்கள்...

சிலர் மகனைப்பார்த்து வியந்தார்கள். 'ஏன் அவர் வரவில்லை?'

என்று ஆதங்கப்பட்டார்கள். முருகனின் ஒவ்வொருவாசலிலும் பூசை நடந்தது. புதிது புதிதாய் பல முகங்கள் பூசைக்கு வந்தன. விக்கினேஸ்வரக்குருக்கள் முதுமையால் ஒதுங்கிவிட அவரது அக்காள் மகன் இப்போது கோயிற் பொறுப்பை ஏற்றுள்ளதாகச் சொன்னார்கள்.

விக்கினேஸ்வரக் குருக்கள்தான் எனக்கு ஏடுதொடக்கியவர். அவர் அரிசியில் "அ" எழுதச்சொல்ல மறுத்துவிட்டு ஓடிப்போய் வீதிமணலில் "அ" எழுதியதாக அம்மா சொல்லுவா.

பிரசாதம் வாங்கிக்கொண்டு வந்தபோது - வாசலில் மணியாச்சி அமர்ந்திருந்தா. அவவிடமும் சுகம் விசாரித்துக் கொண்டு புறப்பட்டோம். ஊரில் நடக்கையில் மனது ஆகாயத்தில் மிதந்தது. புளியடியில் சில பெடியன்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் சிறுசுகளாயிருந்தபோது புளியடிக்கு யாரும் வருவதில்லை. புளியடியில் ஒருபெண் தூக்குப்போட்டு இறந்ததாகவும் இரவுவேளைகளில் அழுகைச்சத்தம் கேட்பதாகவும் ஊர் ஒதுங்கியது. பின்னர் புளியடியில்... இளைஞர்கள் காவல் போட்டார்கள். காலம் மாறிப்போனது. பேய்க்கதை மறந்துபோனது.

நாங்கள் வந்திருப்பதால் பார்த்தீபன் மனைவி குழந்தையுடன் வந்திருந்தாள். பார்த்தீபனின் மனைவிக்கு எங்களைத்தெரியாது. கண்டவுடன் அறிமுகமாகிக்கொண்டாள். குழந்தையும் அழாமல் எங்களுடன் ஒட்டிக்கொண்டது.

மாமரத்தின் கீழ் கதிரைகளைப் போட்டு அமர்ந்தோம். மாமரம் நிறையக்காய்த்திருந்தது.

'மச்சாள்... முந்தி இந்தமாமரத்திலை மாங்காய் பிடுங்கஏறி... விழுந்து அண்ணைக்கு மண்டைஉடைஞ்சது... கேள்விப்பட்டனீங்களே...'

'ஓ...நெடுகச் சொல்லுறவர்...'

மச்சாளின் குரலில் கொஞ்சம் சோகம் தெரிந்தது.

அண்ணையின் இறப்பு எல்லோருக்கும் சோகம்தான். அண்ணைசரியான பயந்தவர். சூரியக்கதிர் சண்டைநேரம் செல்களின் அதிர்வில் அவருக்கு நெஞ்சுவலி கூடியது.

அப்போது எல்லோரும் வடமராட்சியில் இருந்தோம். மந்திகை ஆஸ்பத்திரியில் அண்ணனை அனுமதித்திருந்தார்கள். பிறகு அங்கும் பிரச்சினை. சாவகச்சேரிக்கு வந்தோம். அங்கேயும் தெரிந்த ஒருவரின் வீட்டில் ஒதுங்கினோம்...

பிரச்சினை எங்களை விடுவதாயில்லை. மட்டுவில் பகுதியிலும் செல்கள் விழுந்தன. நாங்கள் வன்னிக்கு வந்தோம். அண்ணர் குடும்பம் வன்னிக்கு வர மறுத்தது. அண்ணர் அரச உத்தியோகம். அவர் மறுத்துவிட்டார்.

சிலமாதங்களில் அண்ணர் இறந்துவிட்டதாக அறிந்தோம். அண்ணர் குடும்பத்தில் மூத்தவர். எங்களுக்காக பல கஷ்டங்களை அனுபவித்தவர்... ஆனால் அவருடைய சாவில் எங்களுக்கு பங்குகொள்ள முடியாமற்போய்விட்டது.

ஏ.ஒன்பது பாதை திறந்தவுடன் எங்களைத்தேடி முதல் வ... அண்ணனின் மூத்தவன் ப... த்தீபன்தான். தானாடாவிட்டாலும் தசையாடும் என்றதை மெய்ப்பித்தான்...

மாலைப்பொழுது மங்கிவிட்டது. மாமரக்காற்று உடலைவருடிக்கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு சிறுவர்கள் இருவரும் சேர்ந்து வீடு கலகலப்பாகியது. இனிய உறவுகளின் சங்கமமாய் சிரிப்புகளும் பேச்சுகளும் வலம் வந்தன.

வீட்டுக்குள் தொலைக்காட்சி ஒளிர்ந்தது. ஆனால்யாரும் அதைப்பொருட்படுத்துவதாக தெரியவில்லை. பார்த்தீபன் வெளிநாட்டுக்குப்போகவென்று புறப்பட்டு.... இடைநடுவில் திரும்பிவந்து... கொழும்பில் துன்பப்பட்டு...ஊர் வந்தகதையைச் சொல்லிக்கொண்டிருந்தான்...

மச்சாள் குசினிக்குள் ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தார்.

'முந்தியப் போல இல்லை... சமையல் இப்ப இஞ்ச வலு சுகம்..'என்றா மச்சாள். மச்சாளுக்கும் சக்கரைவியாதி ஆரம்பகட்டத்தில் இருப்பதாக மருத்துவர் கூறினாராம்.

'உதொரு வியாதியே இல்லமாமி... சாப்பாட்டில கட்டுப்பாடா இருந்தாச்சரி...' என்றான் பார்த்தீபன். அவன் சொல்வதும் சரிபோலத்தான் பட்டது எனக்கு.

பார்த்தீ பனின் கைமணிக்கூடு எட்டுமணி என்பதை நினைவூட்டியது. புளியடிப்பக்கமாய் நாய்கள் குரைத்தன...

மச்சாள் குசினிக்குள்ளிருந்து வந்தா.

'இஞ்ச... உந்த வெளிலைற்றை நூத்துப்போட்டு எல்லாரும் உள்ளவந்திருந்து கதையுங்கோ..' மச்சாளின் குரலில் பதட்டமிருப்பதுமாதிரி..ஒரு உணர்வு...

'ஏன் மச்சாள் பயமோ...? அவங்கள் வருவாங்களே...'

'ச்சீ...பயமெண்டில்லை.. எண்டாலும் ஏன் சோலியை... கன பேர் இருந்து அமளிப்பட...ஏதாலும் நினைக்கிறான்களோ...' வாங்கோ உள்ளுக்கு...'


மச்சாள் வெளிலைற்றை அணைத்தா.

'இந்த அம்மாவுக்கு எப்பவும் பயம்' பார்த்தீபன் சொல்லிக்கொண்டு உள்ளே வந்தான்.

'இஞ்சபிரச்சினையே இல்லை' என்று வாய்க் கொருதடவை சொல்லிக் கொண்டிருக்கும் இவர்களின் அடிமனங்களில் உறைந்துகிடக்கும் பிரச்சினைகளை என்னால் உணர்ந்து கொள்ளமுடிந்தது. எழுந்து உள்ளே போனபோது தொலைக்காட்சியில் அரைகுறை ஆடைகளுடன் குழுநடனமாடும் காட்சிஒன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது.

## குறுங்கதை

# ஆணிவேர்கள்



முகாமுக்கு வந்ததிலிருந்து சேரனின் நச்சரிப்பைத் தாங்க முடியவில்லை. தனக்குத் தானே புறுபுறுத்தபடி என்னைப் பேசிக் கொண்டிருந்தான்.

"என்ன மச்சான் இப்ப என்ன நடந்ததென்று புறுபுறுக்கிறாய்"

"ஓமோம் எனக் கொண்டும் நடக்கேல உனக்குத் தான் என்ன நடந்ததெண்டு தெரியாமல் கிடக்கு" ஆத்திரப்பட்டான் சேரன்.

"சரி சரி மச்சான் சும்மா பழஞ்சீலை கிழிஞ்ச மாதிரி புறுபுறுக்காமல் என்ன நடந்ததெண்டு கொஞ்சம் விளக்கமாய் சொல்லன்"

"என்னெண்டாலும் மச்சான் நீ அங்கை அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது"

'எங்கை'

"அங்கைதான் பாண்டியன் வீட்டை"

எனக்கு எல்லாமே விளங்கி விட்டது. அப்பொழுதுதான் நானும் அவனும் பாண்டியன் வீட்டை சென்று வந்தோம். பாண்டியனின் அம்மா பாண்டியனைப்பற்றிக் கேட்ட போது எனக்கொண்டும் தெரியாதென்று சொல்லிப் போட்டன். அதுதான் அவனுக்கு என்னில கோபம் போல.

"பாண்டியன்ர அம்மா எவ்வளவு கவலைப்பட்டுக் கேட்டவா. நீ உப்பிடி சொல்லியிருக்கக் கூடாது"

"எப்படி"

" அவனப்பற்றி ஒண்டும் தெரியாதென்றுதான்"

"அதுக்கிப்ப என்ன"

"ஏன் அவனைப்பற்றி உனக்கொண்டும் தெரியாதோ" கேட்டான் சேரன்.

"தெரியும்"

'அப்ப ஏன் ஒண்டும் தெரியாதென்று சொன்னனீ'

தான் ஒன்றும் பேசவில்லை.

"அவ எவ்வளவு கவலைப்பட்டுக் கேட்டவா. நீ சொல்லியிருக்கலாம் தானே"

"என்னத்தை சொல்லுறது"

"உனக்குத் தெரிஞ்சதைத்தான்"

நான் மௌனம் சாதித்தேன் சேரன் விடுவதாயில்லை தொடர்ந்தும் கேட்டான்.

பாண்டியனும் நீயும் ஒண்டாத்தானே ஊரில படிச்சனிங்கள்"

"ஓமோம்"

"இரண்டு பேரும் ஒண்டாத்தானே இயக்கத்துக்கு வந்தனிங்கள்"

"ஓமோம்"

"ஒண்டாத்தானே பயிற்சி எடுத்தீர்கள்"

"ஓமோம்"

"பிறகும் ஒண்டாத்தானே நிண்டனிங்கள்"

"ஓமோம்"

"அப்ப அவனைப்பற்றி உனக்குத் தெரியும் தானே"

"ஓமோம் தெரியும்"

"அப்ப ஏன் ஒண்டும் தெரியாதென்று சொன்னனி"

கேட்க வந்ததை கேட்டான் சேரன்.

நான் ஒன்றும் பேசவில்லை.

"பாண்டியன் இப்ப எங்க எண்டு உனக்குத் தெரியும் தானே" தொடர்ந்தான் சேரன்.

'தெரியும்'

'அப்ப ஏன் அவவுக்கு ஒண்டும் தெரியாதென்று சொன்னனி' மடக்கினான் சேரன்.

"..............."

"பாண்டியன் இப்ப எவ்வளவு காலமாக வீட்டை போகேல்ல எண்டு உனக்குத் தெரியும் தானே" தொடர்ந்தான் சேரன்.

"ஓமோம்"

"அப்ப அவனைப் பார்க்க அவன்ர அம்மா எவ்வளவு ஆசைப்படுவா எண்டுறதும் உனக்குத் தெரியும் தானே"

"ஓமோம்"

"என்ன எல்லாத்துக்கும் ஓ மெண்டுறாய்"

"தெரிஞ்சா ஓமெண்டு தானே சொல்லவேணும்"

"அப்ப அவ கேக்கேக்கை சொல்லியிருக்கலாம்தானே 'மீண்டும் மடக்கினான் சேரன்.

"என்னத்தைச் சொல்லுறது"

"என்னத்தை எண்டு என்னட்ட கேக்கிறாய் உனக்குத் தெரிஞ்சதை சொல்லியிருக்கலாம தானே" ஆத்திரப்பட்டான் சேரன். நான் மௌனம் சாதித்தேன்.

"அப்ப அவ கேக்கேக்க ஒண்டும் தெரியாதென்று சொல்லிப்போட்டு இப்ப இஞ்ச வந்து எல்லாம் தெரியுமெண்டிறாய்" பேசினான் சேரன்.

'எப்பிடி மச்சான் சொல்லுறது'

"எப்பிடியோ வாயால தான்" சேரனின் இடக்கு முடக்கான பதிலால் ஆத்திரப்பட்ட நான் இப்ப எதைச் சொல்லவில்லை என்று ஆத்திரப்படுகிறாய் என்றவாறு அவனுக்கு பதில் கூறத் தொடங்கினேன்.

அன்னையை, அன்னை மண்ணை அருந்தலைவனை, ஆருயிர் மக்களை, அதிகம் நேசித்தானே அந்த உணர்வுகளைச் சொல்வதா.

கள்ளமில்லா உள்ளம் கொண்ட அவன் செய்த சின்னஞ்சிறு குழப்படிகளைச் சொல்வதா அன்றி காயப்பட்ட என்னை காப்பாற்ற வந்து களத்திலே வீரவடுத்தாங்கினானே அந்த தோழமையை சொல்வதா?

கரும்புலியாக வேணுமென்று கடிதம் மேல் கடிதம் எழுதி அனுமதிபெற்று கடும் பயிற்சி எடுத்து கரும்புலி ஆனானே அந்த உணர்வுகளைச் சொல்வதா?

அவன் அதிகமாய் நேசித்த அருந்தலைவனுடன் ஒன்றாய் இருந்து சிரித்துக் கதைத்து உணவுண்டு ஒன்றாய் நின்று படம் பிடித்து விடைபெற்றுச் சென்றானே அதைச் சொல்வதா? இறுதி விடை பெறும் அந்த இறுதிக் கணத்திலும் எம் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு கவலைப் படாதே மச்சான் நான் இறந்தாலும் நாளை என் வரலாறு வாழும் என்று உறுதிபடக் கூறிச் சென்றானே அந்த வீரத்தைச் சொல்வதா? அல்லது எதிரி அவளவுக்குஅதிகமாக நம்பிக்கை கொண்ட அசைக்க முடியாத அவனது கோட்டைக்குள் புகுந்து எதிரியின் ஆணிவேரை ஆட்டம் காணவைத்து காவியமானானே அந்தக் கதையைச் சொல்வதா? 'இதில் எதைச்சொல்வது? எப்படிச் சொல்வது? நீயேசொல்"

கேள்விக்கணையாக வந்தஎனது பதிலால் எதுவும் சொல்ல முடியாமல் விக்கித்து நின்றான் சேரன்.

'இஞ்சபார் மச்சான் ஆணிவேர்கள் எப்பவும் வெளியில தெரியாது தெரியவும் கூடாது அப்படித் தெரிந்தால் அது மரத்துக்குத்தான் கூடாது. மரம் ஈடாட்டம் கண்டு பாறியே விழுந்துவிடும்'

எனது பதில் அவனுக்கு எதையோ புரிய வைத்திருக்க வேண்டும் அவனது முகம் அதை எனக்குக் காட்டியது.

**மா.தீபன்**

---

# உலக ஒழுங்கு அல்லது சிந்தனை பற்றியது



எதுவும் எப்படியுமான
உலகமாயிருக்கிறது.

இருந்து விட்டுப்போகட்டும்
என்கிறது மனது
அதற்கு சிந்திக்க
நேரமேது?

எனது, எனதான
எனக்கான, எனக்கேயான
என்பவற்றிற்கான
அங்கலாய்ப்புகளில் பொழுது
போவது காரணமாயிருக்கலாம்.

சிந்திப்புகள் யாவும்
குறுகிப் போனதாய் யார் சொன்னது?
அது பரந்து பறந்து போனது
யாருக்குத் தெரியும்?.

நான் உலகின் ஒரு
சிறு புள்ளி துணிக்கை
உலகின் வாழ்வில் - நான்
தங்கியிருப்பது இருக்க
ஒப்புக்கொள்ள மறுக்கும்
சிந்திக்க விரும்பாத மூளை
இருந்துதான் என்ன?.

அதைப்பற்றிக் கேட்க முடிந்தால்
நீயும் சிந்திக்கலாமல்லவா?.

முடிவாக
சிந்திப்பது என்பது

செயற்படுத்துவதற்காக என்றும்
அது உலகை உய்விக்கும் என்றும்,
முழு உலகிற்கும் நன்மை என்றும்,
அமையவேண்டுமாயின்
நான்,நீ எல்லோரும்
ஒருமித்துச் சிந்திப்பது பற்றி
முதலில் சிந்தித்து ஆய வேண்டும்.

சிந்தனையில் குறைபாடிருப்பதாகப்
பட்டுக்கொண்டிருக்க
சிந்திப்பதற்கே ஆளில்லை
என்றவாறான
நிலை மாறவேண்டும்.


உண்மையாக
சிந்திப்பதற்கே ஆளில்லை.

சிந்திப்பதுபற்றி
அதுவும் ஆரோக்கியமாக
சிந்திக்க முதலில்
ஆட்கள் வேண்டும்.

**கை.சரவணன்**




# பேராசை கூடாது



வைகுண்டபதி என்ற ஊரின் அருகே கன்னியார் குன்று என்ற சிறிய மலையில் பெரிய குகை ஒன்று இருந்தது. அந்தக் குகையில் பூதம் ஒன்று வசிப்பதாக ஊரில் பேசிக்கொண்டனர். ஆனால் பூதத்தை யாரும் பார்த்ததில்லை. இருந்தாலும் அந்தப் பக்கம் சென்றால் பூதம் பிடித்துவிழுங்கி விடும் எனப்பயந்து இருட்டிய பின் யாரும் செல்வதில்லை.

அந்த ஊரில் செல்வம், கேசவன் என்ற இரு நண்பர்கள் இருந்தனர். செல்வத்திடம் ஏராளமான ஆடுகள் உண்டு. அவன் பேராசைக்காரன். ஏழைகளிடம் மிகவும் குறைவான விலைக்கு ஆடுகளைவாங்கி அதிக விலைக்கு விற்பான். கேசவனிடம் ஒரே ஒரு ஆடுதான் இருந்தது. அவன் ஏழை என்றாலும் நல்லவன்.

கேசவனின் மனைவிக்குத் தீடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. தனது ஆட்டை எடுத்துக் கொண்டு பணம் தருமாறு செல்வத்திடம் கேட்டான். ஐநூறு ரூபாய் மதிப்புள்ள ஆட்டைவெறும் இருநூற்று ஐம்பது ரூபாய்க்குக்கேட்டான் செல்வம். மனம் நொந்து போன கேசவன் தனது ஆட்டை சந்தைக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்தான்.

சந்தையில் அவன் ஆட்டையாரும் வாங்கவில்லை. மனச் சோர்வுடன் வீட்டுக்கு மலை குகை வழியே திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது குகையின் உள்ளே இருந்து பயங்கர சத்தம் கேட்டது தீடீர்என,

“டேய்...என்னடா இந்த நேரத்தில் இங்கு நடமாட்டம். நீ யார்?” என்று ஒரு குரல் அதட்டியது.

கேசவனின் கை கால்கள் நடுங்கின. அவன் பயந்து குளறியபடியே “ஐயா நான் ஏழை. என் மனைவி உடல் நலம் சரியில்லை. இந்த ஆட்டைவிற்க வந்தேன். யாரும் வாங்கவில்லை. அதனால் திரும்பிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள்” என்று கெஞ்சினான்.

“சரி....சரி.... உன் ஆட்டை நானே விலைக்கு வாங்கிக்கொள்கின்றேன். என்ன விலை சொல்? என்றது குரல். “ஐநூறு தந்தால் ஆட்டை விற்று என் மனைவிக்கு வைத்தியம் செய்வேன்” என்று பயந்தபடி சொன்னான் செல்வம்.

“நாளை வந்து பணத்தைப் பெற்றுக்கொள்” என்றது அந்தக் குரல். பணம் எதுவும் கிடைக்காவிட்டாலும் உயிர் தப்பினால் போதும் என்று கேசவன் வீடு வந்து சேர்ந்தான்.

மறுநாள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு குகைக்குச் சென்றான். குகை வாசலில் ஒரு மஞ்சள் பையில் ஆயிரம் ரூபாய் இருந்தது. கேசவனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை சந்தோஷமாக வீடு வந்து தன்நண்பன் செல்வத்திடம் விபரம் சொன்னான்.

செல்வத்துக்கு பூதத் திடம் தனது ஆடுகளை விற்று இரட்டிப்பாகப் பணம் பெறஆசை வந்தது. தனது நூறு ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு குகைக்குச் சென்றான். கேசவனிடம் பேசிய குரல் செல்வத்திடமும் ஆடுகளை வாங்கிக் கொள்வதாகச் சொன்னது. ஆடுகளை அங்கு விட்டுச் செல்லும்படியும் மறுநாள் வந்தால் பணததைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறியது.

செல்வம் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான். மறுநாள் காலை குகைவாசலுக்குச் சென்றபோது அங்கு ஒரு கடிதம் இருந்தது. ‘பேராசை கொண்ட முட்டாளே! உனக்குச் சரியான பாடம் புகட்டிவிட்டேன். இந்தக்குகையில் இருந்த நான் பேயோ பூதமோ அல்ல. உன்னைப்போன்ற மனிதன்தான்! பேய் பூதம் என்று நன்றாக ஏமாந்தாய். நீ மற்றவர்களை ஏமாற்றி ஆடுகளைவாங்க எண்ணினாய். இப்போது உன்ஆடுகளை நான் ஓட்டிக்கொண்டு செல்கிறேன்’ என்று எழுதியிருந்தது.

அதைப் படித்த செல்வம் புரிந்து கொண்டு இனி, யாரையும் ஏமாற்றவோ, பேராசைப்படவோகூடாது என்று முடிவுசெய்தான்.

## வாரம் ஒரு குறள்



*நல்குரவு என்பது வறுமையைக் குறிக்கும். வறுமையானது ஒருவரால் எதுவுமே செய்ய முடியாது என்பவரிடமே சூழ்ந்து நிற்கிறது. அதாவது எச் செயல்களையும் செய்ய முடியாததாகும். இவ் வறுமை என்பது உள்ளவர்களிடத்தில் பலவாகிய துன்பங்கள் சென்று விடும். வறுமை உள்ளவர்களிடத்தில் இருக்கும் துன்பங்களாக அவனுடைய வாழ்வில் அடிப்படைத் தேவைகள் மற்றும் அவன் அடைய நினைக்கின்ற தேவைகள், மருத்துவம், உணவு, பொருள் இரப்பு, மற்றயவர்களிடம் குறை கேட்டல் எனப் பல துன்பங்கள் சென்று சூழ்ந்துவிடும். இதனையே ஔவையாரும் “கொடிது கொடிது வறுமை கொடிது அதனிலும் கொடிது இளமையில் வறுமை” என்ற அருள் வாக்கும் குறிப்பிடத்தக்கது. அதாவது வறுமையினைக் கொடியது எனவும் அதிலும் இளமையில் வறுமை வருவது மிகவும் கொடியது எனவும் கூறுகிறார். இதனையே வள்ளுவப் பெருந்தகையும்.*

*“நல்குரவு என்னும் இடும்பையுள் பல் குரைத்*
*துன்பங்கள் சென்று படும்”*

*என்ற குறளினை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 39

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம் | ஜெ | வ | கௌ | று | சி | ஜ |
| டோ | தீ | ஞ் | னா | ஆ | றா | ப் |
| ன் | ன் | ளே | மா | ல | அ | ம |
| ல | லீ | க | றி | நீ | பி | டி |
| ளோ | ரு | பா | ச | ய | ள் | ரீ |
| ம் | து | மூ | சி | ரோ | ளை | அ |
| தா | கூ | டு | ரோ | பு | இ | மோ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -37 இன் விடைகள்

01. மரவள்ளி
02. இராசவள்ளி
03. கரணை

01. தாமரை
02. செவ்வரத்தை

### சொற்சிலம்பம் - 37 இன் பரிசுக்குரியவர்

த.பிரியந்தன், 495/10D
ராணிமில் ஒழுங்கை,
இறம்பைக்குளம், வவுனியா.

### சொற்சிலம்பம் - 37 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.சிவலோஜினி, தரம்-8
868 ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

02. சு.பிரதீபன்,
D.8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

03. ப.இலக்கியா,
கிளி/மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி.

04. செ.திருபரஞ்சன்,
நவற்கிரி,
புத்தூர்.

05. உ.உதஜானுஜா,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

06. கு.தனுஷா,
மட்டுவில் மேற்கு,
பூநகரி.

01 நிறங்கள் மூன்று?
01) ........................................
02) ........................................
03) ........................................

02. பழங்கள் இரண்டு?
01) ........................................
02) ........................................

பெயர் :- ........................................
முகவரி :-........................................
........................................
........................................

*சொற்சிலம்பம் -39*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## சிந்திக்கச் சில

01) வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

02) கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள்.

03) அரை மணி நேரத்தை அற்பமாக கருதுவதைக் காட்டிலும் அந்த அரைமணி நேரத்திலும் மிக அற்புதமான காரியத்தை செய்து கொண்டிருப்பது மேல்.

04) அனுபவம் கண்டிப்பான ஆசான். பரீட்சையை முதலில் நடத்தி விட்டு பாடத்தை பிறகே சொல்லிக் கொடுக்கும்.

05) எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

**ந.றஜீவனா**

## கட்டெறும்பு


*கட்டெறும்பு மாமாவே*
*கண்டுவிட்டேன் ஓடாதீர்*
*வீட்டில் குடி இருந்தீர்*
*வீண் வம்பு பண்ணாதீர்*

*சுறுக் என்று எங்களை*
*சுகந்திரமாய் கடிக்கிறீர்*
*விரையும் ரயில் போலவே*
*வேகமாக மறைகிறீர்*

*படைகள் அதிகம்*
*இருந்திடும்*
*பலத்தில் வந்தா*
*கடிக்கிறீர்*
*உடனே மறைந்து*
*தப்புங்கள்*
*உதவ யாரும் இல்லையே.*

**இ.ஜீவாநந்தன்**

## நகைச்சுவை



“ஏன் எந் நேரமும் கண்ணாடி முன்பு நின்று கொண் டிருக்கிறாய்?”

“டாக்டர், உடம்பைப் பார்த்துக்கச் சொல்லியிருக்காரே!”

**கு. ரமேஸ்**

## கைவண்ணம்



இ.அனஸ்டிகா

சிறிய தியாகங்கள் மூலம் தான் நல்ல நடத்தைகளைப் பின்பற்ற முடியும். - எமர்சன்

# புரிதலும் தெளிதலும்

எல்லோரும் மனிதர்கள் தான். மக்களுக்கு எனச் சொல்லப்படும் பொதுச் சொத்துக்களின் பயன்கள் சரியான வகையில் மக்களைச் சென்றடைய வேண்டும்.

மக்களின் நலனுக்காக இயங்கும் பொது நிறுவனங்கள் அமைப்புக்கள் எல்லாம் இதில் தமது தனிப்பட்ட விருப்பங்களையும் வெறுப்புக்களையும் மக்கள் அனுபவிக்கும் படியாய் அழுத்துதல் கூடாது.

இதற்காக சில நிறுவனங்களில் கடமை புரியும் சில ஊழியர்கள் விடும் தவறுகளால் அந்த நிறுவனத்தின் செயற்பாடே அவ்வாறு தான் என்று தோற்றத்தை ஏற்படுத்துவதுண்டு ஆனால் அவ்வாறு எவரும் வரையறுத்து விடக் கூடாது.

ஆனால் அந்த ஒரு சில ஊழியர்களின் தவறுகளையும் சரியான வகையில் இனம் கண்டு திருத்த வேண்டிய பாரிய பொறுப்பு அந்தந்த நிறுவனங்களையே சாரும்.

இது ஒரு பெற்றோல் நிரம்பும் நிலையத்தில் நடந்த சம்பவம்.

அங்கு ஒருவருக்கு இரண்டு லீற்றர் பெற்றோல்தான் வழங்குவது என்பது நடைமுறையாகக் கையாளப்படுகிறது.

இந்த இரண்டு லீற்றர் பெற்றோலை பெற்றுக் கொள்ள முதல் அதற்கான சிட்டையைப்பெற்று அதன் பின்னர்தான் பெற்றோலை பெறவேண்டும் என்பது நடைமுறை.

இதன் போது இங்கு பெற்றோலை

## இப்படிச் செய்யலாமா?

நிரப்புவதற்கு நிற்பவர் ஒரு சீரியசாக கடமை புரிபவர் போலவும் கடமை தவறாதவர் போலவும் நடந்து கொள்வார்.

ஆனால் இப்படித்தான் ஒரு நாள் பெற்றோலை நிரப்புவதற்காக பெருமளவு மக்கள் அந்த பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் பணத்தை செலுத்தி சிட்டை பெற்றுக் காத்திருக்க அந்த நிரப்பு நிலையத்திற்கு வந்த ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை சிட்டை எதுவும் பெறாமலேயே நிரப்பும் நபரிடம் கொடுக்க அவர் அவருக்கு தேவையான அளவு பெற்றோலை நிரப்பினார்.

இது இந்த இரண்டு லீற்றர் என்ற கட்டுப்பாட்டுக்கு அப்பால் கடந்து சென்றது அதன் பின்னர் அவருக்கு வழங்கிய அளவு பெற்றோலுக்கு சிட்டை வழங்க அவர் சந்தோகமாக சிறசகை விரித்தார்.

இது ஏன் இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது என்றால் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பில் இருக்கும் ஒரு நிறுவனம் பெருமளவு மக்களுக்கு முன் இப்படி நடந்து கொள்வது மக்களை விசனத்துக்குள்ளாக்கியதுடன் கவலையடையவும் செய்தது.

இப்படியான சின்னச்சின்னத் தவறுகளை இந்த நிறுவனங்களுக்கு பொறுப்பானவர்கள் சுட்டிக்காட்டுவது அவசியம்.

இத்தகைய காரியங்கள்தான் பெரிதாக வளர்ந்து ஊழலையும் லஞ்சத்தையும் தோற்றுவிப்பதுண்டு.

— வேழினி

## தொடர் - 22

ஐந்து நிமிஷ ஓட்டத்தின்பின் வெள்ளை வெள்ளையாய் நாலைந்துவான்கள் ஒரேயிடத்தில் நிற்பது தொலைவிலிருந்தே தெரிந்தது. அங்கே போனால், அந்த வான்களுக்கு எதிரில் ஒரு சிறு வெட்டையில், ஒரு ஆணும் மூன்றுபெண்ணுமாக நான்கு சிங்கங்கள், ஒரு காட்டெருமையின் பாரிய உடலைப் பங்குபோட்டுக் கொண்டிருந்தன. வான்களுக்கும் இந்த சிங்கங்களுக்குமிடையில் இருபதடிகூடஇராது. ஆனால், இடையில் அரைவாசித்தூரத்தில் வேறிரண்டு பெண்சிங்கங்கள், உண்ட களைப்பிலோ என்னவோ, உருண்டுபுரண்டு தினவெடுத்துக்கொண்டிருந்தன.

தம்பாட்டில் திரியும் மிருகங்களைத்தேடி இந்த




வெளியெல்லாம் வானில் பயணிகளுடன் அலையும் சாரதிகள் இப்படித்தான் ஆளுக்காள் உதவிக்கொள்கிறார்கள். ஒருவர் விசேஷமாக எதையாவது கண்டுவிட்டால், உடனே அந்தப் பிரதேசத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் ஏனைய சகாக்களுக்குத் தகவல் கொடுக்கிறார். ஐந்து பத்து நிமிஷத்திற்குள்ளாகவே எல்லா வாகனங்களும் அந்தக்குறிப்பிட்ட இடத்திற்கு வந்து விடுகின்றன. எந்த அடையாளக் குறிப்பும் சொல்லமுடியாத இந்தப்பெருவெளியில் எப்படித்தான் இடத்தைக் கண்டு பிடிக்கிறார்களோ என்று எனக்குள் அதிசயமாய் இருந்தது. வந்த விஷயத்தைப் பார்த்து முடித்ததும் எல்லா வான்களும் பிரிந்து தன்தன் வழிபார்த்து மறையும். எப்போதாவது ஒன்றையொன்று குறுக்கிடும் அல்லது தாண்டிப்போகும்.

ஒரே வெளியாய்த்தானிருந்தாலும், பாதைகளில்லாத இடத்தில் வாகனங்கள் போகக்கூடாது என்று கடுமையான கட்டுப்பாடு. சற்றுப் பொறுத்து எங்கோ ஓரிடத்தில் 'சீற்றா' ஒன்றிருப்பதாகச் செய்தி வந்தது. அங்கு நாங்கள் போனபோதும் வேறு வான்கள் ஏற்கெனவே வந்து நின்றிருந்தன. அவற்றில் ஒன்று கொஞ்சம் முன்னால் நின்றது -மாலை வெய்யிலின் மஞ்சள் படர்ந்திருந்த ஒரு பாறையையே எல்லா வானிலிருந்தும் எல்லோரும் பார்த்துக்கொண்டு ஆளுக்காள் எதையோ காட்டிக் கொண்டுமிருந்தார்கள். எங்களுக்கு எதுவுமே தெரிவதாயில்லை. பின்னால் இன்னுமொரு வாகனம் வருகிற சத்தம் கேட்டது. "வேறொரு வானாயிருக்கும்" என்று எவருந்திருப்பியதாயில்லை. ஆனால், வந்தது ஒரு 'ட்ரக்' சீருடை தரித்த வனத்துறைக்காவலர்! முன்னால் நின்ற வான், வழியை மீறிப் போனதற்காக வழக்குப் பதிவு செய்துகொண்டு போனார்கள்! விலங்குகளை வேட்டையாடுவது, பிடிப்பது எல்லாம் எண்ணியும் பார்க்க முடியாத விஷயங்கள்,என்று தெரிந்தது.

இந்த அமளியில் சீற்றா எங்கே போனதோ, தெரியவில்லை. புறப்பட்டோம். சற்றுத்தூரம் போனதுமே, "இங்கே அது வந்திருக்கலாம்..." என்று வானைமீண்டும் நிறுத்தினார். அயூப். இப்போது நாங்கள் மட்டுந்தான். அவர்காட்டிய திசையில் ஒரு தனி ஸௌசேஜ் மரம். அதன் கீழ் என்று சொன்னார். ஆனால், அந்த மரத்தின்மேலே, பின்னால் மாலை நேரத்து ஆபிரிக்கவானம் அற்புதமான நிறங்களைக் காட்டிக் கொண்டிருந்தது. எனது சகாக்களிருவரும் கமெராவும் கையுமாய்த் தயாராக நின்றார்கள். இந்தச் 'சீற்றா'என்றபெயர் தமிழில் சிறுத்தை என்பதிலிருந்து வந்திருக்க வேண்டுமென்றுபட்டது வீட்டிற்குப் போனதும் அகராதியை மறக்காமல் பார்க்க வேண்டுமென்று நினைத்துக்கொண் டேன். இன்னுந்தான் பார்க்கவில்லை: இவ்வளவு நாளும் அந்த நினைவேயில்லை: இன்று இதை அவசரமாக எழுதிக்கொண்டிருக்கிற இப்போது, நேரமில்லை!


இருந்தாற்போல, எங்கிருந்தென்றில்லாமல் இன்னொரு வான் வந்து பின்னால் நின்றது. சற்றுமுன்கூட நின்றவற்றில் ஒன்றாய்த் தெரியவில்லை. "இலங்கையிலிருந்தா யானை பார்க்க வந்திருக்கிறீர்கள், இங்கே?" - அந்த வானின் திறந்திருந்த கூரைவழியாக எட்டிப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார் ஒரு இளைஞர். பொதுநிறத்துக்கும் சற்றுக் கூடுதல். அடர்ந்த மீசை புத்திக்கூர்மை தெரியும் சிரிக்கிறகண்கள் -முன்பின் கண்டதாயில்லை. அந்தவானுக்குள் குழந்தைகள்உட்பட வேறுஆட்களும் இருப்பது தெரிந்தது.

"இல்லை, சிங்கம்...!", பதிலுக்குச் சிரித்தபடி கேட்டேன்,

"...நீங்களும் இலங்கைதானா?"

"இல்லை: இந்தியா, மஹாராஷ்ட்ராவிலிருந்து", என்றவர்

"ஓகே: இரவு சாப்பாட்டுக் குப்பின் சந்திப்போம்" கை அசைத்த






படி வந்த வேகத்திலேயே விடை பெற்றார். கண்ணாடிக்குள்ளால் குழந்தைகளும் கை காட்டினார்கள்.

மீண்டும் வானும் வெளியுமாக நாங்கள் மட்டும். சிவப்பும் கத்தரிப்பூ நீலமுமாய்ச் சூழ்ந்திருந்த வானம் இப்போது கறுக்கத் தொடங்கியிருந்தது. ஆறேமுக்கால்!

"பிறகு பார்க்கலாம்.." அலுத்துப்போய்ப் புறப்பட்டோம். காற்றின் இரைச்சலுடன் கலந்துவந்த பெயர்தெரியாப்பறவைகளின் குரல்கள். மிதப்பதே போல் மெல்லச் சென்று கொண்டிருந்த வான் சட்டென்று நின்றது.

"அதோ..." மகிழ்ச்சியுடன் காட்டினார் அயூப். வழிநடுவில் நட்டநடுப்பாதையின் குறுக்கே படுத்திருந்தது ஒரு பெரிய ஆண்சிங்கம்! நிறுத்திய வானை மெல்ல மெல்ல அதைநோக்கிச் செலுத்திய மனிதரிடம் கோபமும், உள்ளே பயமுமாய்க்கிளர்ந்தன!

"என்ன இது? திரும்புவோம்..." மூவரும் ஒரே குரலிற் சொன்னோம். அயூப்சிரித்தார். "பயப்பட ஒன்றுமில்லை, உங்கள் கமெராக்களை எடுத்துக்கொள்ளுங்கள்..." மெல்ல நகர்ந்த வாகனம், அலட்சியமாய்ப் படுத்திருந்த அந்த மிருகத்திலிருந்து பத்துப்பன்னிரண்டடி தொலைவில் நின்றது. என்ஜினை வேறுநிறுத்திவிட்டார் அயூப். அதற்கு ஒரேபாய்ச்சல் போதும்: ஆனால் அருகில் வந்து நிற்கிற இந்தவெள்ளை மிருகம் ஒரு பொருட்டாகவே படவில்லைப் போலும் அதற்கு: பார்வையைக்கூடத்திருப்பாமல் படுத்திருந்தது! இப்படியான சந்திப்புகள் அந்தச் சிங்கங்களுக்கும் இந்தச் சாரதிகளுக்கும் வலு பழக்கமான விஷயங்கள்தான் என்பதை இந்த நெருக்கமும் நடவடிக்கைகளும் எடுத்துக்காட்டின.

பயந்தெளிந்து, கமெராவுங் கையுமாய்க் கூரைக்குமேலே தலைகளை நீட்டினோம். நல்லமைம்மல்: ஃப்ளாஷ் இல்லாமல் சரிவராது என்று தோன்றியது.

"பாவிக்கலாமா? பயமில்லையா?" உள்ளே குனிந்து குசுகுசுத்தோம். "ஓ! கிடையாது!" என்று விட்டார் அயூப்.

"அவை சாப்பிடுகிறபோது தான் கொஞ்சம் பயம்"

இப்போது யோசிக்கிறபோது,ஃப்ளாஷ் இல்லாமலே, 400 அல்லது 600படச்சுருளோடு அந்த வெளிச்சத்தில் வடிவாக எடுத்திருக்கலாமென்று படுகிறது. ஏதோ, அப்போது தெரிந்தது அவ்வளவு!

அந்தச் சிறு மின்னல்களைக் கண்டோ என்னவோ, சிங்கம் தலையைமட்டுந்திருப்பி எங்களைப் பார்த்தது. எம்.ஜி.எம் சினிமாக்களின் தொடக்கத்தில் வருமே, அதேமாதிரி, அதே கம்பீரம்! கர்ஜனை மட்டுந்தானில்லை! அப்போது என் கமெராவின் ஃப்ளாஷ் அதன் கண்ணிற்பட்டு மின்னியதில் ஒரு பெருந்திருப்தியுங்கூடவே ஒரு எச்சரிக்கை உணர்வும் என்னுள் படர்ந்தன. இந்தப் படத்தைப் பதிப்பிப்பதற்காக நான் கொண்டுபோய்க்கொடுக்கப்போகிற ஸ்ருடியோக்காரர், இந்த அற்புதமான 'ஷொட்'டில் மேலதிக பிரதிகளை எடுத்து வைக்காமலிருக்க என்ன செய்யலாம் என்ற சிந்தனை என்னை ஆட்கொண்டது!

சிங்கம், இப்போது, என்ன நினைத்ததோ, எழுந்தது, மீண்டும் ஒரு தடவை, வானுக்குமேலால்தலையை நீட்டிக்கொண்டிருக்கிற மனிதப் பிறவிகளை அலட்சியமாகப்பார்த்தது. 'ஆறுதலாகப்படுத்திருக்கக்கூட விடமாட்டீர்கள்!' என்று சொல்கிறபார்வை. அப்படியே திரும்பி, அந்த ஆளுயரப்புற்பரப்பில் புகுந்து மெல்ல மறைந்தது. புல்லின் அசைவிலிருந்து அது போனபாதை கொஞ்சத்தூரம வரை தெரிந்தது. பிறகு அதுவுமில்லை.

"அதிரஷ்டக்காரர்கள் தான்" என்றபடி புறப்பட்டார் அயூப்.

(தொடரும்)

# அன்பு

அன்பில் துன்பம் காண்பவன் அறிவில்லாதவன்
அன்பில் இன்பம் காண்பவன் அறிவில் ஆதவன்!

உடலில் ஊடுருவி உடலை உறைய வைத்து
உடலை இயக்கும் ஆன்மாவும் அன்பு தான்
கடல் கடந்த நாட்டில் அனுவைத் துளைத்து
இமயம் சென்று உன் உடல் புகுந்து
உன் உயிர் காக்கும் காற்றும் அன்புதான்!

சிவன் சக்தியோடு இணைந்த வடிவம் அன்பு தான்
அன்பு உலகில் அழியாச் சொத்து ~அது
ஆதியில் கண்டெடுத்த அற்புத முத்து
வங்கக் கடல் ஆழம் வல்லவர்கள் கண்டதுண்டு
அன்புக் கடல் ஆழம் கண்டதில்லை யாரும்
இது தத்துவமல்ல, ஜதார்த்தம்!

பஞ்ச பாண்டவர் ஐவரும் அன்பு கொண்டு
வாழ்ந்ததால் காவியம் உரைத்தது அவர்களை
இவ்வுலகை காக்கும் கிருஸ்ணனும் அவர்களில்
அன்பு கொண்டதால் அகிலம் அவரைத்
துதித்தது, அவர் பாதம் பணிந்தது!

விண் மீன்கள் பூத்திருக்கும் விண்ணுலகம் அழிவதில்லை
அது போல் அன்பு மலர் பூத்திருக்கும் அன்பு
நெஞ்சம் அழிவதில்லை. அன்பு என்றும்
அழிவதில்லை. அது கடலில் வீசும் அலைகள்
போன்றது. அன்பு கொண்ட நெஞ்சம்
ஊற்றெடுக்கும் அருவி. அன்பில்லா நெஞ்சம்
வற்றிவிடும் குட்டை!

பைந்தமிழ் தொட்ட பாரதி ! திருக்குறள் மொழிந்த
வள்ளுவர்! அகிம்சை பேர் வழி கண்ட காந்தி !
ராமாயணம் எழுதிய கம்பர் முதல்~ இன்றைய
எம்மினத்தின் உணர்ச்சிக் கவிஞர் வரை
அன்பே உயிர்காக்கும் சக்தியென உரைத்தனர்!
"அன்பே சிவம்" அதையே வாழ்த்துவோம்!

பண்டைக் காலம் தொட்டு அன்பு கல் மேல்
எழுத்தானது மட்டுமன்றி குறையாத பண்புடைய
அமுத சுரபி. பக்தி முத்தி பரவசம் ஆக வேண்டும்.
என்றும் அன்பு முத்தி ஏழைக் குடிசை கூட
மாளிகை ஆக வேண்டும்.

அ.சோமேஸ்ராஜா

## என் அன்புத் தாய்க்காக

வாழ்க்கை எனும் செடியிற்கு
அன்பு எனும் நீர்வேண்டும்!
பண்பு எனும் பசளைவேண்டும்!
பாசம் எனும் பார்வைவேண்டும்!
இத்தனையும் இருந்துவிட்டால்
செழிப்புடனே வாழ்க்கைச்
செடிவளரும்!

அன்பெனும் நீர் ஊற்றி
பண்பெனும் பசளையிட்டு
பாசமுடன் எனை வளர்த்தாள்
என் அன்புத்தாய்!

அவளிற்காக நான்
என்ன செய்தேன்
எனக்காக அவள் தனையுருக்கி
போற்றி என்னை வளர்த்தாளே
என் அன்புக்காய்!

எத்தனைதான் செய்திடினும்
ஈடாகுமா அவள் அன்பிற்காய்!

ச.கவி

## வெல்லமுடியாத மரணம்

எல்லோருக்குமாகப்
படைக்கப்பட்டவற்றில்
எல்லோருக்கும் கிடைப்பது
சாவொன்றுதான்
பிறந்தவர்களுக்குக்
கொடுக்கும் சன்மானம்
எவருக்கும் பாரபட்சம் காட்டாது
எண்ண அலைகளுக்குள்
பிடிமானமற்ற அதிசயம்
எவரும் தேடாதபோதும்
தானாக வந்து சேர்வது
எவரெவர்க்கு எப்பெப்பவோ
அவ்வப்போதோ சம்பவித்துவிடுகிறது
மூப்பு, இளமை, குஞ்சு,குருமன் என்ற
பேதங்களைப் பார்ப்பதில்லை
எல்லோருக்காகவும் நிச்சயிக்கப்பட்டது
எவருமே போட்டியிடமுடியாது
போட்டியிட்டாலும் வெல்ல முடியாதது
சாவொன்றுதான்.

ந.விதுரா

### நட்பு

இன்பத்தில் மட்டுமின்றி
துன்பத்திலும்
தோள் கொடுத்து
இன்பமாக்கும்
உலகுவாழ் உயிரினங்களின்
உயரிய சங்கமம்.

### கல்வி

அறியாமை என்னும் இருளை
மனிதனுள் இருந்து அகற்றி
மனிதனை மனிதனாக்கும்
உயரிய அழிவற்ற செல்வம்.

### அன்னை

உலக உயிரினங்களின்
ஆத்மா இறைவன் படைப்பில்
இணையில்லா அதிசயம்
இன்பத்திலும் துன்பத்திலும்
எனக்காக கரைபவள்
என் அன்னை.

செ.கௌதமன்

### நிலவு

வான் வெளியில் பவனி வரும்
வான்மேக உலக அழகி இவள்!

### இயற்கை

இறைவனின்
படைப்பில்
நனி சிறந்த
அத்தியாயம்!

### நட்சத்திரங்கள்

வான்வெளியில்
கண்சிமிட்டும்
சிக்கன விளக்குகள்!

ச.ஜீபத்

# ஊக்கமாத்திரை

எமது வாழ்விலே நாம் முன்னேறவேண்டும் என்று அடிக்கடி சிந்தித்திருப்போம். ஆனால் எந்த முறையில் எவ்வாறு முன்னேறவேண்டும் என்பதை பற்றி சிந்தித்து செயற்படுகிறோமா என்பதுதான் ஒரு கேள்வியாக உள்ளது.

எதற்கும் நாம் சிந்திப்பதுடன் மட்டும் நின்று விடுவதால்தான் அடுத்த கட்டவளர்ச்சியை எட்ட முடியாமல் உள்ளோம். எம் ஒவ்வொருவருடைய உள்முக நம்பிக்கைகளையும் தேர்வுசெய்வது நாமேதான். நம்பிக்கைகளே எமக்கு வாய்ப்பை அளிக்கிறது. வாய்ப்புக்களை தவறவிடுவதாலும். அதனை சரியாகப் பயன்படுத்தாமையாலும்தான் எமது முன்னேற்றம் தடைப்படுகிறது. நாம் யாராக இருக்கவிரும்பு



## வாழ்க்கையில் முன்னேறுங்கள்

கிறோமோ அதுவாகவே இருக்கமுயற்சி செய்ய வேண்டும். எதிர்மறையான சிந்தனைகள் உங்களை முன்னேறவிடாது தகர்த்துவிடும். எப்போதும் நல்லவற்றை சிந்தியுங்கள். உங்கள் எண்ணங்களின் தலைவராக நீங்களே இருங்கள் கடந்தகாலத்தில் நீங்கள் வெற்றிபெற்ற சம்பவங்களை எண்ணிப்பாருங்கள். அவற்றால்தானே நீங்கள் முன்னேறியுள்ளீர்கள் என்று தோன்றவில்லையா? மனித வாழ்க்கைமுறைக்குள் நமது சிந்தனைகளே காரணிகளாக அமைகின்றன. நம்முடைய வாழ்வில் நாம் ஒன்றைப்பற்றி நம்பிக்கை கொள்ளவும் மேலும் விளைவுகளைப்பெறவும் மேலும் மனநிறைவு கொள்ளவும் நமது சிந்தனைகளை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். அப்போது எமது மனம் எப்படிச்செயல்படுகிறது என்பதை புரிந்து கொள்ளலாம். நமது மனமே விரும்பியோ விரும்பாமலோ எதையும் செய்யத்தூண்டுகிறது நம்முடைய பலங்களையும் பலவீனத்தையும் பொறுத்தே நாம் இதனைத் தேர்வு செய்கிறோம். நாம் ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகாண எந்தவகையான செயலைச்செய்கிறோம்.? இதற்கு நமது மனதில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளைப் பொறுத்தும் தீர்வு அமைகிறது. நாம் எதைப் பற்றி அதிகம் சிந்திக்கிறோமோ அதுதான் நமது மூளையில் பல சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும் உருவாக்கிறது. எங்களுடைய முன் அனுபவங்களை வைத்துத் தான் எமது நம்பிக்கைகள் தோற்றம் பெறுகிறது. எமது கடந்தகால அனுபவத்தை பரிசீலனை செய்யும் போது எமது நம்பிக்கைகள் மாறிக் கொண்டே போகிறது இவற்றோடு தொடர்ந்து செல்வதால் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

ஈழவிழி

## குறுக்கெழுத்துப்போட்டி - 74

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | |
| | 09 | | | | | 14 |
| | | | 18 | | | |
| | | 24 | | | | |
| | 30 | | | 33 | | |
| 36 | | 38 | | | | |
| | | | | | 48 | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. மீன்பாடும் தேன்நாடு (இறுதி எழுத்தை இழந்துள்ளது.)
09. மோதிரம்.
18. இந்தியா.
24. மகன் (மாறியுள்ளது.)
30. தாய்.
33. வருவாய் (குழம்பியுள்ளது.)
36. தினசரிப் பத்திரிகை ஒன்று.

### மேலிருந்து கீழ்

01. வாசனை உள்ள மலர்.
09. அம்பு.
14. தாமரை.
36. தொடக்கம் (தலைகீழாக உள்ளது.)
38. பழம்.
48. மலர்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.72 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அரவம்
06. ஈகை
10. உபாயம்
15. கடகம்
20. சிலை
24. பருப்பு
32. தொடக்கம்
43. பாதை

**மேலிருந்து கீழ்**

01. அங்கம்
09. கடவுள்
17. கபடம்
32. தொன்மை
35. கனி
36. பாதி
40. பரி

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.74
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.72 இன் பரிசுக்குரியவர்
க.பத்மசிறி
இல.32, இரண்டாம்
குறுக்குத்தெரு,
வவுனியா.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.72 இன்,
பாராட்டுக்குரியவர்கள்.

01. தி.மகேஸ்வரன்
வருவாய்ப்பகுதி
புளியங்குளம்.
02. கு.யாழினி
வேணாவில்
புதுக்குடியிருப்பு.
03. கி.கிருபாலினி
நெத்தலியாறு
தருமபுரம்.
04. பா.தெய்வேந்திரன்
கற்கோவளம்
பருத்தித்துறை.
05. ப.மனோஜினி
திருநகர்
கிளிநொச்சி..
06. சி.ஜன்சி
அறிவுவளர்ச்சி நிலையம்
முழங்காவில்.

சூழ்ந்து அவதானித்துப்பார்த்தால் முன்னெப்போதையும்விட இப்பொழுதுதான் அதிகமதிகமாக இளைஞர்கள் பொறுப்பற்றதனமாகத் திரிகிறார்கள் என்பது தெரியும்.

ஒரு தொகுதி இளையோர் (இளவயதுடையோரும் இருபாலாரும்) போராட்டத்தில், பொதுமைத்தன்மையில் தம்மை ஈடுபடுத்தி தங்களின் வாழ்வை தியாகம் செய்கிறார்கள்.

மறுதொகுதியினர் கட்டற்ற தனமாக, வீணே, பொறுப்பற்றுத் திரிகிறார்கள்.

ஒரு சமூகத்தில்: சமகாலத்தில் இப்படியொரு நிலைமையேற்பட்டிருப்பது உண்மையில் எவருக்கும் கவலையளிப்பதுதான்.

இப்படி இளையோரில் ஒரு பகுதியினர் வெளியே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதாகக் காட்டிக்கொண்டு உள்ளே தளரவிட்டு இளையோரை சிதைக்கின்ற இரட்டை அணுகுமுறை இது.

மறுபுறம் வணிக நோக்குடன் இயங்குகின்ற மீடியாக்கள். வணிகக் கலாச்சாரம் வாழ்வை சிதிலமாக்கிவிடுகிறது. தமிழில் பெருகிவரும் மீடியாக்கள் பெரும்பாலும் சிதையும் வாழ்வை மீட்டெடுப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் சிதைப்பதாகவே இருக்கின்றன.

'விடுதலை' என்ற உணர்வோட்டத்தோடும், அறிவார்ந்த செயற்களத்திலும் இயங்குகின்ற மீடியாக்கள் வணிகமயமான மீடியாக்களோடு கடுமையாகப்போட்டி போடவேண்டியேயிருக்கின்றன.

# இளையவர்களுக்கு: புதிய வாசல் வேண்டும்



மிகச்சிறப்பானது. அதுவே தேவையானது. ஆனால் மாற்றுமீடியா என்றுவரும் விடுதலை விரோதப்போக்கும் சரியானதல்ல. அது இளைய தலைமுறையைச் செயலற்றதாக்கி விடுகிறது. தவிர்க்கமுடியாமல் யதார்த்த வாழ்விலிருந்து தூக்கி வெளியே எறிந்துவிடுகிறது. அத்தோடு அந்நியத்தன்மையை உருவாக்கி சமூகத்திலிருந்தும், சூழலிலிருந்தும் அவர்களைத் துண்டாடிவிடுகிறது.

எனவே மீடியாக்களால் சுற்றி வளைக்கப்படும் இளையோர் அதைத்தேர்வதிலும் அதிலிருந்து மீள்வதிலும் காட்டப்படும் வழிமுறைகளைப் பின்பற்றவேண்டியது

எப்போதும் வணிக மயமான மீடியாக்களுக்கும் கவர்ச்சி நுகர்ச்சியாளரை - குறிப்பாக அனுபவப் பரப்பின் சீர்மைபற்றி அதிகம் தெரியாத இளையோரை முழுதாக ஈர்த்துவிடுகிறது, தம்வசமாக்கிவிடுகிறது.

அடுத்தது, சமூக உறவில், குடும்ப உறவில் ஏற்பட்டிருக்கும் சிதைவுகளும் அந்நியமும் இளையோரை பாதித்துள்ளதையும் கவனிக்க வேண்டும்.

வணிகமயமான மீடியாக்கள் தம் லாபத்தையே குறியாகக்கொண்டு இயங்குகின்றன. ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாக எழுதப்படாத உடன்படிக்கைகளில் இவை கூட்டுச்சேர்ந்திருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் சினிமா பற்றிய செய்திகளையும் அதன் படங்களையும் வர்ணங்களில் பிரசுரிக்கும் மீடியாக்கள் சினிமாவுக்கு இலவசமாக விளம்பரம் செய்கின்றன. தமிழில் இது மிகமிக நுட்பமாக நடக்கிறது. வரப்போகும் சினிமா பற்றிய எதிர்பார்ப்பை உருவாக்கி விடுகின்றன இவை. ஆனால் இப்படி அதிகமான பரபரப்பை ஏற்படுத்தி அறிமுகப்படுத்தும் அந்தச்சினிமா, சினிமாவுக்கான தகுதிகளில் பாதியைக்கூடத் தொட்டிருக்காது. பதிலாக வெறுமனே குப்பைத்தனமான மசாலாவாகத்தானிருக்கும் அது. ஆனால் அந்தச் சினிமாவை அறிமுகப்படுத்துவதனூடாக தமது விற்பனையைப் பெருக்கிவிடுகின்றன பத்திரிகைகள்.

**வெளிவாசல்பாலன்**

வானொலிகள் தொலைக்காட்சிகள் கூட இதற்கு விலக்கல்ல. வரவிருக்கும் சினிமாச் செய்திகளைச் சொல்வதிலிருந்து அவற்றின் பாடல்கள் வரையில் இவை ஒலி ஒளிபரப்புச் செய்கின்றன.

சில மீடியாக்கள் சினிமாவை மையமாகவைத்தே உயிரியக்கம் கொள்கின்றன.

பொறுப்பற்றதனமாக நடந்து கொள்ளும் மீடியாக்களால் அதிகமாகச் சீரழியும் போக்கு வளர்ந்து இளைய தலைமுறையிடம் பெருகியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

மாற்றுமீடியாக்கள் எவ்வளவுதான் சீரியஸாக இயங்கினாலும் அதை எப்படித்தான் அறிமுகப்படுத்தினாலும் அதன்பக்கம் திரும்புகிற இளையோர்கள் குறைவு.

ஆனால் மாற்றுமீடியாக்களிலுள்ள பகிர்தலின் வாழ்வு குறித்த நெறிமுறைகளும், புதிய கண்ணோட்டங்களும் விடுதலையுணர்வும் சமூகக் கரிசனையும் யதார்த்தத்தை உணரவைப்பதில் அவை வகிக்கும் பங்கும், பாங்கும்

யெல்லாம் இளையோரை நிறைய ஆற்றுப்படுத்தின. அதாவது, இளையோரின் மனப்பாங்கை உருவாக்குவதிலிருந்து இவர்கள் தேர்வுசெய்யும் வாசிப்பு, பார்த்தல்,கேட்டல் விடயங்களிலான தேர்வுகள், நடை, உடை இயல்புகள் எனப் பலவற்றிலும் மேற்சொன்ன உறவு வட்டம் உதவியது.

மற்றது, சமூகமட்டத்திலான கரிசனை வலையம் இருந்தது. ஊருக்குள் - அயலில் ஒருவருக்கொருவர் அக்கறையாக இருந்தார்கள். ஒருவரோடு ஒருவர் அறிமுகமாகியிருந்தார்கள்.

ஒருவருடைய பிள்ளையை இன்னொருவர் அறிந்திருந்தார். இப்படியான அறிமுகம் அந்த இளைய தலைமுறையை ஏனையவர்கள் கவனிக்கவும் அறிவுறுத்தவும், நெறிப்படுத்தவும் உதவியது.

இன்றைய வாழ்க்கைமுறையில் எல்லாம் உடைந்துபோய்விட்டன. உறவுகளுக்கு நேரமில்லை. பல உறவினர்கள் தொலைதூரங்களுக்கு தொழில்தேடி, பொருள்தேடி, வாழ்க்கையைத் தேடிப்போய்விட்டார்கள். பிள்ளையோரிடம் பெற்றோர் ஓரிடம் என்று புலம்பெயர்ந்து - கண்டம் விட்டுக் கண்டம்பெயர்ந்து போய்விட்டார்கள். உறவுகள் கூடுவதே அரிதாகிவிட்டது. யாரை யார் கவனிக்க முடிகிறது? அப்படித்தான் கவனித்தாலும் நமக்கேன் 'வீண்வம்பு' என்ற பற்றற்ற தன்மை, தலையிடாத்தன்மை அந்நிய நிலைப்பாடு மேலோங்கிவிட்டது.

சமூகத்திலும் சனசமூகநிலையங்கள், பொதுநிறுவனங்களின் பங்கேற்புக்குறைவு, நாடகமன்றங்கள், நட்பண்பைவிரிக்கும் ஏனைய மையங்கள் அரிதாகிவிட்டன. திருவிழாஇல்லை. அதோனோடிணைந்த நல்லுரைகள் இல்லை. குறைபாடுகள், விமர்சனங்கள் இருந்ததாலும் இவையெல்லாம் இளையோரின் பொழுதை நல்லமுறையில் ஒழுங்குபடுத்தியிருந்தன. பொதுவாகச் சொன்னால் அறம்சார்ந்த பார்வையை இவை இளையோரின் மத்தியில் உருவாக்கியிருந்தன.

அத்துடன் இளையோரும் இந்தக் காரியங்களுடன் ஏதோவகையிலெல்லாம் தொடர்புபட்டிருந்தனர். அதனூடாகப் பெற்ற அனுபவங்கள் வாழ்க்கைபற்றிய தரிசனத்தை நோக்கிநிலையை, யதார்த்தத்தை அவர்களுக்கு வழங்கியிருந்தன.



சீரழிந்து போவதற்கு பல காரணங்களுண்டு. அவற்றில் முக்கியமான சிலவற்றையேனும் நாங்கள் கண்டறியவேணும். சிலமாற்றங்களை யாவது அவர்களிடையே கொண்டுவருவதற்கு இது அவசியம். ஏனென்றால் நாளைய சமுதாயத்தின் இயங்குசக்திகள் அவர்களல்லவா? அவர்கள் எங்கள் புதல்வரல்லவா.

பொதுவாகச் சொன்னால் இயல்பு வாழ்க்கை சிதைந்துபோனது. இதற்கு ஒரு காரணம். இயல்பு வாழ்க்கையில் ஒரு சீரிருக்கும். வாழ்வின் அடிப்படையான தொழில் துறைகள், உறவுப்பின்னல்கள் எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கும் பாதுகாப்பும் நகர்வும் இருக்கும்.

இயல்புநிலை குலையும்போது இதெல்லாமே தலைகீழாகிவிடும். ஒடுக்குமுறையென்பது இயல்பைச் சிதைத்தல்தான். சிதைந்திருக்கும் ஒழுங்கைச் சீர்படுத்தி ஒரு ஒழுங்கில் இயங்குதிறனுக்குக் கொண்டுவரவே போராட்டம் நடக்கிறது.

ஆக சிதைந்த ஒழுங்கில் இயல்பற்ற தனத்தின் விருத்தியென்பது அதிகம் பாதிப்பைத் தருவது இளையோருக்கும் சிறுவர்களுக்கும் தான்.

கல்வி தொடக்கம் எதிர்கால வாழ்வின் தொடக்கத்திலிருக்கும் தொழில் முயற்சிகள், பிறஈடுபாடுகள் எல்லாவற்றிலும் சிறுவர்களும் இளையோரும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

போராட்டம் விடுதலையின் புள்ளியைத் தொடும்வரையில் நெருக்கடிகளிருக்கும்: பாதிப்புகளிருக்கும். ஆனால் எல்லாவற்றையும் கடந்தே போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கும் அப்படித்தான் எங்களின் மண்ணிலும் அது விடுதலையை நோக்கி நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒடுக்குமுறை செய்யும் தரப்பு (அரசு) இளையோரைச் சிதைப்பதிலேயே அதிகம் கவனஞ்செலுத்துகிறது. இதனை இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள இளையோரின் நடத்தைகளிலிருந்து நன்றாக விளங்கிக் கொள்ளலாம். போதைப்பொருள்பாவனையிலிருந்து. நீலப்படங்கள் பார்த்தல் குழுவாக, அணியாக சேர்ந்து வம்புகளிலும், சோலிகளிலும் ஈடுபடுதல், என நீண்டு சீரழிவுக் கலாச்சாரத்தின் சகதிவரையில் இளையோர் சிதைந்திருக்கிறார்கள்.

ஒருபுறம் அரசு இப்படி இவர்கள் சிதைவதற்கான ஏதுக்களை இரகசியமாகச் செய்கிறது. இவ்வாறு சிதைவுக்கான இரகசியமாக ஒடுக்குமுறையாளர் இயங்குவது என்பது உலகெங்குமுள்ள பொது நடைமுறைச் சட்டம் ஒழுங்கை தளர விடுதல் இதில் முக்கியமானது தவிர்க்கமுடியாத அவசியம். இதுபற்றி சகலரும் இன்னும் விரிவாகச் சிந்திக்கவேண்டும்.

இளையோரின் நடத்தைகளை - மனப்பாங்குதொடக்கம் நடை, உடைபாவனை வரையில் அதிகமாக மீடியாக்களைப் பின்பற்றும் இளையோருக்கு ஒரு புதியவாசலும் வெளியும் தேவை என்பதை மறுக்கமுடியுமா?

மற்றது, சிதைந்திருக்கும் நமது உறவு வட்டத்தினாலும் இன்றைய இளையோரின் அந்தரிப்பு நிலையையும் இங்கே பார்க்கலாம்.

முன்னர் இளவயதுடையவர்களை ஆற்றுப்படுத்த சமூகமட்டத்தில் நல்லதொரு அமைப்புவலை இருந்தது.

பெற்றோருக்கு போதியநேரமிருந்தது: பிள்ளைகளுடன் பொழுதைப் பகிரவும் அவர்களோடு உறவாடவும் அவர்களை அவதானிக்கவும் இளையோருடன் மூத்ததலைமுறையான பாட்டன் பாட்டிக்கிடையிலான உறவாடல் நிகழ்ந்தது. இது கணிசமான அளவுக்கு பிள்ளைகளை ஆற்றுப்படுத்தியது. மூத்தோரின் வாழ்க்கை அனுபவத்தை இளையோர் பகிர்ந்து கொள்ளும் உறவுத்தளமாக அது இருந்தது.

அடுத்தது ஏனைய உறவினர் வட்டம் சித்தப்பா, சித்தி,மாமா,மாமி, பெரியப்பா, பெரியம்மா, அத்தை, அன்ரி என்று சூழவிருந்த உறவுவட்டம் இளையோருடன் பழகியதும், அதற்கூடாக இருதரப்பும் இணைந்திருந்ததும், இங்கே கவனிக்கவேண்டியது. தலைகளுக்கிடையேயான பிணைப்பும் பகிர்தலும் உறவாடலும் நிகழ்வதற்கு இது வாய்ப்பானது. இவை,

இன்றோ இவையெல்லாம் வழக்கொழிந்துபோனபின் வேறேதோ மாதிரியெல்லாம் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. தவிர்க்க முடியாததும் கூட. ஒரு வளர்ச்சிநிலையில் அந்தமாற்றம் நிகழவேண்டும். வளர்ச்சிதான் உண்மையில் மாற்றமும், மற்றது சிதைவே. இன்றைய இளையோரின் போக்கில் வளர்ச்சிக்குப் பதில் சிதைவைத்தான் காணமுடியும். இதுதான் எல்லோரிடையேயும் இன்றேற்பட்டுள்ள கவலை.

ஒருபக்கத் தியாகமும் விரிந்த நலன் குறித்த ஈடுபாட்டோடும் ஒருதரப்பு இளையோர்கள் போராளிகளாகவும், அதனோடிணைந்த செயற்பாட்டாளர்களாகவும்,


மறுபக்கத்தில் சுயநலமும் பொறுப்பற்றதனமும் சீரழிவும் பிறருக்குத் தொல்லையுமான போக்கி லுள்ள இளையோருமாக எங்கள் சமூகம்.

ஒன்றுடன் ஒன்று முரண்படுகிற, விலகுகிற பொருந்திப்போகாத அவலநிலையை இன்றும் மடியில் வைத்திருக்கத்தான் வேண்டுமா?

முதல் மீடியாக்கள் பொறுப்பாளிகளாக வேண்டும். தொடர்ந்து ஒவ்வொருவரும். ஆமாம் அனைவரும்.

# பதினெட்டாம் ஆண்டு நினைவலைகள்

## 12 - 06 - 2004 (சனிக்கிழமை)



அன்னையிடம் 04 - 04 - 1960 பிரபா அண்ணனிடம் 28 - 10 - 1983 மாவீரரிடம் 12 - 06 - 1986

# லெப். அர்ச்சுனா (ஆர்.பி.ஜி)

# சதாசிவம் - தமிழரசுவரன்

சொந்தப்புத்தியைப் பாவிப்போம் சகோதரமே
சோம்பேறியாய் வாழ்ந்திடவோ சகோதரமே
பந்தமென்பது தமிழ் மண்ணிலிருக்கட்டும்
பாசமென்பது பாசறையிற் படியட்டும்.
நொந்த மனிதரென்றால் தமிழினந்தான் - மேலும்
நோகவிடுவது முறையோ நெஞ்சில்லை.
மந்திகள் விளையாடும் எங்கள் மணலாறும் தமதாமே
மாந்தைத் திருவூரும் தங்கள் நிலமாமே.

தென்திசைத் தமிழீழம் தங்கள் நாடாம் - அங்கே
தேன்சொரியும் வாகரை தாம் வாழ்ந்த ஊராமே.
தித்திமிதோம் போட்டு ஆடுகின்றார் திருமலையைத் தமக்காக்க.
தீரத்தைக் காட்ட வேண்டும் திமிரடக்க.
வந்தேறு குடிகளாம் நாம் வந்தேறுகுடிகள் சொல்லுகின்றார்
வாலை நறுக்கவேண்டும் வாயடக்க.

எந்தக் காலத்திலும் எமக்கு எதுவுமில்லையாம்
ஏமாளியாய் வாழ்வோமென்று நினைப்பாக்கும்.
முந்தி நாம் பரம்பரையாய் ஆண்ட பூமியெல்லாம்
மூட்டிய பகையுடனே ஆங்கிலேயர் - அயலவரிடம்
கொடுத்துப் போனதினால்.
சந்துபொந்தெல்லாம் சாத்வீகப் போர்புரிந்தோம்-
தமிழீழமதில்
சாந்த சொருபன் தந்தைசெல்வா அந்தநேரம் -
தந்த வழியதுவே.
கொந்தராத்துக் காரரெல்லாம் வந்துபோகினம்
கோவணத்தையும் கொண்டுபோவினம் கவனம் சகோதரமே.

எச்சரிக்கை

வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சினால்
வேங்கைகள் பெருந்தலைவர் - சும்மாவிருப்பரோ
அறிந்துகொள் அயலவரே.

சி.கா.சதாசிவம்,
46, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

4561

# பிளாஸ்ரிக் பாவனை மனிதனுக்குக் கேடுவிளைவிக்கின்றதா?

மனிதனின் அன்றாட தேவையோடு பிளாஸ்ரிக் பாவனை பின்னிப் பிணைந்துள்ளது. பிளாஸ்ரிக் பாவனையானது காலையில் எழுந்தவுடன் பற்தூரிகை, பற்பசைக்கவர், சவர்க் காரப் பெட்டி, சீப்பு, காலணி என்று பிலாஸ்ரிக்கில் தொடங்கி சிறிது சிறிதாக விஸ்வரூபமெடுத்து பாவனைக்கு வந்த பிளாஸ்ரிக் படுக்கையறைக் கட்டில் வரை ஒவ் வொருவருடனும் ஒட்டி உறவாடும் பொருளாக மாறியுள்ளது. பிளாஸ் ரிக் வண்ண வண்ண வடிவங்களில் கண்கவர் காட்சிப்பொருளாக இன்று அனைவரின் கவனத்தையும் ஈர்ந்துள்ளது.

பிளாஸ்ரிக் செய்வதற்கான மூலப்பொருள் இலகுவில் கிடைக்கக்கூடியவை. தாவரப் பெறுதிகளான "ரெசின்" களில் இருந்தும் பெற்றோலியப் பொருட்களில் இருந்துமே பெரும்பாலான பிளாஸ்ரிக் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பிளாஸ்ரிக் இலேசானது, தண்ணீரில் கரையாதது துருப் பிடிக்காது எல்லா வற்றிற்கும் மேலாக மக்கிப்போகாதது இத்தனை அம்சங்களும் பொருந்தியதுதான் பிளாஸ்ரிக். இப்போ மரங்களினால் ஆன பொருட்கள், உலோகங்களாலான பொருட்கள் எல்லாம் பியாஸ்ரிக்கைக் கண்டவுடன் மங்கி மறைந்து போகும் நிலையில் தேடுவாரற்று வீட்டுக் கோடிகளில் முடங்கிக் கிடக்கின்றன பிளாஸ்ரிக் உலகையாளும் அளவுக்கு மேலோங்கி நிற்கிறது.

மண்ணோடு மண்ணாக மக்கும் தன்மை இல்லாத பிளாஸ்ரிக்தான் இன்று சூழலை மாசுபடுத்தும் எதிரிகளில் ஒன்றாக உள் ளது. பிளாஸ்ரிக் அல்லாத ஏனைய பாவனைப் பொருட்களெல்லாம் மக்கி மண்ணோடு மண்ணாக அழிந்து விடும் ஆனால் பிளாஸ்ரிக் மட்டும் எந்தக்காலத்திலும் அழியாத வரம் பெற்று தலை நிமிர்ந்து நிற்கின்றது.

உக்கிச் சிதையாமல் மண்ணின் மேலும் கீழும் காலம் காலமாகக் கிடக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளால் பூமி சொல்லோனாத் துயரத்தை அனுபவித்து வருகின்றது.

பிளாஸ்ரிக் கழிவுகள் மழை நீரை மண்ணினுள் உட்புக விடாது தடுக்கிறது. தண்ணீரை மட்டுமல்ல காற்றைக் கூட உட்புக விடாது தடுக்கிறது. காற்றில்லாத சூழலில் நிலத்தின் கீழுள்ள நுண்ணங்கிகளின் பெருக்கம் குறைவடைகிறது இதனால் உயிர்மச் சிதைவின்றி பொருட்களின் சுழற்சி தடைப்பட்டுப் போய்விடுகிறது. இது தாவரங்களின் வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கின்றது.

பிளாஸ்ரிக் மண்ணில் புதையுண்டு கிடப்பதால் விதைகளை மூடி அவற்றை முளை கொள்ள விடாது தடுக்கிறது. மண்ணின் படிமானத்தை தளர்த்துவதால் மண்சரிவு ஏற்பட வாய்ப்பாயுள்ளது.

எமது விவசாய எதிரி பாத்தீனியம்களைபோல், காற்றில் பறந்து பரவும் இலேசான பொலித்தீன்பைகள் கழிவுநீர் வாய்க் கால்களில் அடைப்பு ஏற்படுவதால் கழிவு நீர் தேங்கி நின்று நுளம்புகள் நோய்க் காவிகள் பரவுவதும் அன்றாடம் நடக்கின்ற சம்பவம்.

பிளாஸ்ரிக்கின் கோரதாண்டவம் தரையில் மட்டுமல்ல கடலிலும் நீண்டு செல்கின்றது. மனிதனால் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் கடலில் வீசும் திடக கழிவுகளில் பிளாஸ்ரிக்தான் முதலிடம் வகிக்கிறது. இதில் வியக்கத்தக்க விடயம் என்னவென்றால் கடலின் ஒவ்வொரு சதுரமைல் பரப்பிலும் சுமார் 46 ஆயிரம் பிளாஸ்ரிக் கழிவுகள் மிதப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவை டீ.டீ.சி. போன்ற கிருமிநாசினிகளை ஈர்த்து நஞ்சாக மாற்றி வருகின்றன.

நஞ்சேறிய இந்தப் பிளாஸ்ரிக் கழிவுகளால் ஆண்டு தோறும் சுமார் ஒரு மில்லியன் கடற்பறவைகளும், 1லட்சம் கடல் பாலூட்டி விலங்குகளும் எண்ணிலடங்காத மீன்வகைகளும் பலியாகி வருகின்றன. பிளாஸ்ரிக் பைகளை கடலில் வீசுவதால் அவற்றை உணவென நினைத்து ஆமைகள் உணவாக உட்கொள்ளும் போது மூச்சுத்திணறி ஆமைகள் பெருமளவு இறக்கின்றன.

வங்கக்கடலில் பயணிக்கும் கப்பல்களில் இருந்தும் சூழவுள்ள நாடுகளில் இருந்தும் பிளாஸ்ரிக் கழிவுகள் இத்தீவுகளைச் சூழவுள்ள பவளப் பாறைகளை அடைந்து அவற்றை இறக்கச் செய்து வருகின்றது. இயற் கைப் பாதுகாப்பு அரண்களாக விளங்குகின்றபவளப் பாறைகளின் அளவு மிக மோசமாகவே அழிந்து வருகிறது.

எமது சுற்றுச்சூழலில் காணப்படுகின்ற பிளாஸ்ரிக் பொலித்தீன்களை எரித்து அகற்றுவது என்பதும் இலேசான ஒன்றல்ல. பிளாஸ்ரிக் பாவனையின் போது சிறிது சிறிதாக எமக்கு நஞ்சூட்டிய பிளாஸ்ரிக் எரிக்கும் போது முன்னரை விட அபாயகரமான அவதாரம் எடுக்கிறது. பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் "டையொக்சின்" என்ற நஞ்சு உருவாகிக் காற்றுடன் கலக்கிறது. "டையொக்சின்" என்ற நஞ்சு புற்று நோயை உண்டுபண்ணுகிறது. பிறக்கும் குழந்தைகள் அங்கவீனமாகின்றன. ஆண்களில் மலட்டுத் தன்மையை உண்டு பண்ணுகிறது. இன்னும் பலஅழகைக் காட்டி மயக்கி கண்கவர் காட்சிப் பொருளாகப் பவனி வருகின்ற பிளாஸ்ரிக் எமது ஆரோக்கிய வாழ்வின் எதிரி என்பதை யாவருமே அறிந்து செயற்படுவது நல்லது.

த.சிவலிங்கம்.

(சி-9609)

## பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

யூன் மாதம் 5ம் திகதி உலக சூழல் தினமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனம் செய்து கொண்டாடிவருகின்றது.

சுற்றுச் சூழல் பற்றி மக்களின் விழிப்புணர்வையும் நாடுகளின் அரசாங்கங்களின் ஈடுபாட்டையும், செயற்பாட்டையும் வேண்டியே மேற்படி தினம் சூழல் தினமாக வரையறுக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வருடமும் இந்தத் தினம் வந்தது வழமைபோலவே நாடுகளால் கொண்டாடப்பட்டது. வழமை போலவே அடுத்த வருடமும் வரும்.

சூழல் தொடர்பான அக்கறையும் விழிப்புணர்வும் தனியே சூழல் பாதுகாப்புத்தினத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட விடயமாகக் கருத முடியுமா?

இதன் அடிப்படையில்தான் இவ்வருடம் இந்த மாதத்தை சூழல் விழிப்புணர்வு மாதமாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப்பிரிவு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த விழிப்புணர்வு மாதத்தில் தமிழர் பிரதேசம் எங்கும் சுற்றுச் சூழல் தொடர்பான பாதிப்புக்களை இனம் காணவும் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை முதன்மைப்படுத்தி பிரச்சாரங்களை முன்னெடுக்கவும் பல வகையான வேலைத்திட்டங்களை சூழல் பாதுகாப்பு பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

மேற் குறித்த இக்காலப்பகுதியில் சுற்றுச் சூழலில் அக்கறையுள்ளவர்களின், குழுக்கள் அரச அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தோர் பாடசாலைமாணவர்கள், பொது மக்கள், ஊடகவியலாளர்கள் என சமூகத்தின் சகல தரப்பினரும் இணைந்து செயற்பட உள்ளனர்.

இவர்கள் சமூகத்தின் சகல மட்டத்து மக்களின் மத்தியில் சூழல் தொடர்பான விழிப்புணர்வை இவர்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

சூழல் பாதுகாப்புப் பிரிவு மேற்குறித்தவாறு திட்டமிட்டு நடவடிக்கைகளை வகுத்து தற்போது செயற்பாடு களை அமுல்படுத்தி வருகின்றது.

இந்த மண்ணின் மைந்தர்களாகிய நாமும் சுற்றுச் சூழல் தொடர்பாக அக்கறை கொள்ள வேண்டும், கொள்வோமாக?



# இலக்கியப் பகிர்வு

## நீலமாகிவரும் கடல்




முல்லை யேசுதாசன் என்கின்ற பல் துறை ஆற்றல் வாய்ந்த படைப்பாளியின் சிறுகதைத் தொகுப்பு "நீலமாகி வரும் கடல்" ஒளிவீச்சும் ஒளிப்பேழையும் இன்னும் பல விவரணச்சித்திரங்கள் குறும்படங்கள் முழு நீளப் படங்களை வெளியிட்டுவரும் நிதர்சன நிறுவனம் வெளியிட்டுள்ள நூல் .

தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு மூத்த கலைஞனின் திறமையினை வெளிக் கொண்டுவர நிதர்சனம் ஈடுபாட்டுடன் முயற்சித் துள்ளது. இந்தப்பணி தொடரும் என நம்பலாம்.

"நீலமாகிவரும் கடல்" என்னும் இந்தச் சிறுகதைத் தொகுப்பு எம் மண்ணில் வெளியாகியுள்ள முற்றிலும் வித்தியாசமான நூல். காரணம் சிறுகதைகளின் களம் கடல் ஆகும். கடலும் கடல் சார்ந்த நிகழ்வுகளையும் படம் பிடித்துக்காட்டும் இந்தத் தொகுப்பு, அது காரணமாகவே வித்தியாசப்படுகிறது.

எமது எழுத்தாளர்களின் சிறு கதைகளில் கணிசமானவை மேம் போக்காகவே கதைக்களங்களைச் சொல்லுகின்றன அதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம் தாங்கள் எழுதும் களத்தினை சரியாகப் புரிந்துகொள்ளாமை , அறிந்து கொள்ளாமை, விளங்கிக்கொள்ளாமை என்பன அவற்றில் மிக முக்கியமானவை.

மிக நுட்பமாக தம் வாழ்வனுபவங்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துக்காட்ட அந்தக்களங்களில் மொழிப் பிரயோகங்களை உயிர்ப்புடன் எழுதிக்காட்ட எல்லோராலும் முடிவதில்லை.

உள்ளடக்க ரீதியாக சிறுகதைகளில் தோற்றுவிட்டாலும் உருவ ரீதியாக இவ்வகைப் படைப்பாளிகள் வெற்றி பெற்று விடுவார்கள்.

உருவ ரீதியாக வெற்றிபெறுதல் சிறுகதைகளில் வரும் களம் அது தொடர்பான விபரிப்பு கதாமாந்தரின் செயற்பாடுகள் களப்பிரதேச மொழிப்பிரயோகம் போன்றவற்றால் உருவாக் கப்படுகின்றன.

அந்த வகையில் முல்லை யேசுதாசன் கதைகள் சிறப்பாக அமைந்துள்ளன.

முல்லையேசுதாசன் இயல்பாகவே ஒரு கடலோடி, கடலில் நுட்பங்களை இயல்காகப் புரிந்து கொண்டவர்.

கடலையே வாழ்க்கையாகக் கொண்டவர் அவரது அறிதலும் புரிதலும் கடலும் கடல்சார்ந்த விடயங்களும்தான் அதன் காரணமாக அவர் எழுத்தில் கடல்சார்ந்த வாழ்க்கை முழுமையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் காரணமாகவே உருவரீதியாக சிறுகதைகளில் அவர் வெற்றி பெற்றுள்ளார். அவர் இயல்பாக ஒரு வாழ்க்கைப் போராளி



என்றே சொல்லலாம். நாளாந்த வாழ்க்கையில் கடலோடு எவ்வாறு போராடினாரோ அவ்வாறே தமிழ் மண் விடுதலையை என்கிற கொள்கையினை தெரிந்தெடுத்து அதன் வழிநின்று போராடிவருகின்ற ஒரு விடுதலை விரும்பி இதன் வழியில். அவர் சிறுகதைகள் உள்ளடக்க ரீதியாகவும் சிறப்பாக அமைகின்றன.

"நீலமாகிவரும் கடல்" சிறுகதைத் தொகுப்பில் மொத்தம்12 கதைகள் உள்ளன அதில் மூன்று கதைகள் தமிழகத்து அகதி வாழ்க்கையைப் பற்றி கூறுகின்றன. அது கூட கடலைநம்பி வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதால் எழுந்த அவலத்தை வெளிக்காட்டுகின்றது.

மொத்தக்கதைகளுமே கடலோடு சம்பந்தப்படுவதில் சிறுகதைத் தொகுப்புக்கான பெயர் கூட குறியீட்டுத்தன்மை வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது.

தொகுப்புக்கான தலைப்பாகிய "நீலமாகிவரும் கடல்" என்னும் தலைப்பில் ஒரு சிறுகதைகூட வெளியாகாமல் இவ்வாறு குறியீட்டுத்தன்மையுடன் சுட்டிக்காட்டப் படுகின்றது.

கடல் நீல நிறம் என்பது பொதுவான இயல்பு. அப்படியானால் நீலமாகிவரும் கடல் என்னும் தலைப்பின் அர்த்தம் தான் என்ன?

தமிழ் மக்களில் அதுவும் கடல் சார்ந்த தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் குறிப்பாக சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்கள் நிறைந்த காலத்தில் கடலின் நிறம் என்னவாக இருந்தது? என்பது தொடர்பாகவும் யோசிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் கடல், கடல்சார்ந்த மக்களாலும் அவர்களைக் காத்துக் கொள்ளப் போராடி தம் உயிர்களை ஈந்த போராளிகளின் உதிரத்தாலும் சிவப்பு நிறமாக மாறியிருந்தன.

எனினும் கடல் முழுமையாக விடுதலைப் போராளிகளின் கட்டுப்பாட்டில் வந்த காரணத்தாலும், ஏனைய புறச்சூழலாலும் இப்போது மீண்டும் நீலமாகி வருகின்றது என்பதையே இத் தொகுப்பின் தலைப்புக் காட்டுகின்றது.

சிறுகதைத் தொகுப்பு உருவ உள்ளடக்க ரீதியாக நன்றாக அமைந்தது போலவே சிறுகதைத் தொகுப்பின் வடிவமைப்பு தொடர்பிலும் சிறப்பாக அமைந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள ஓவியங்கள் பொருத்தமாக அமைந்து தொகுப்புக்கு மேலும் கனதியைத்தருகின்றது.

எந்தக்கவிஞனும் அல்லது கலைஞனும் தனக்குள்ளே சிறந்த ஆற்றலைப் பெற்றிருக்கின்ற போதும் அவற்றை வெளிக் கொண்டுவரும் வரையில் அவை குடத்து விளக்குகளே ஆயினும் அந்தவேளையிலும் அவர்கள் அனுபவமானது கொஞ்ச நஞ்சமல்ல சாமி அண்ணனும் (முல்லையேசுதாசன்) அந்த வகையைச் சார்ந்தவரே.

"இவரின் சிறுகதைகள் ஒவ்வொன்றும் படிக்கின்றவர்கள் மனங்களில் ஒருவிதமான காட்சியோட்டத்தை தோன்றச் செய்யும் ஏனெனில் அவர் அவற்றை ஒரு இயக்குனராகவும் படைப்பாளியாகவும் இருந்து படைத்ததினால் ஏற்பட்டவை என்று சொல்லலாம்."

என நிதர்சனப் பொறுப்பாளர் சி.சேரலாதன் பதிப்புரையில் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

"பழகிய கடலும் கரையும் மனிதர்களும், முல்லை யேசுதாசன் கதைகளில் முன் மிதந்து வருகின்றன: வருகின்றார்கள். கடலோடும் வாழ்வும் கரை நடந்த நாட்களும் யேசுதாசனின் மொழிதலில் புது முகம் கொள்கின்றன" என நூலின் இறுதிப் பகுதியில் சொல்வது பொருத்தமானதே.

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**




### தாய்மை....

ஒரு காலத்தில் அமெரிக்காவில் புகழ் பெற்ற சனாதிபதியாக இருந்த ட்ரூமன் என்பவர் சனாதிபதியானதும் அவர் தாயிடம் ஒருவர் கூறினார்.

"உங்கள் மகனைக் குறித்து நீங்கள் அதிகளவில் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்."

அதற்கு அந்தத் தாய் கூறிய பதில்:-

''உண்மைதான்... அதே வேளை வயலில் உழுது பாடுபடும் என் இரண்டாவது மகன் குறித்தும் அதே அளவு நான் பெருமைப்படுகிறேன்.....

### உணர்வின் வலி

புகழ் பெற்ற ஆங்கில மகாகவி மில்டன் பார்வையற்றவர். அவர் மனைவியோ அழகி. அதை விட அகங்காரம் கொண்டவள்.

மில்டனை கடுஞ் சொற்களால் திட்டுபவள், மில்டனின் நண்பர் ஒருவர் அவர் மனைவியைப் பற்றி அவரிடம் கூறுகையில்:-

'உமது மனைவி அன்றலர்ந்த ரோஜாப் பூப் போன்றவள்' என்றார்.

அதற்கு மில்டன்:-

"ரோஜாவின் அழகை ரசிக்கும் பேறற்ற குருடன் நான் ஆனால் அதன் முட்கள் குத்தும் வலியை தினமும் உணர்கிறேன்...என்றாராம்."

### அவரவர் பார்வை

* அநேக மனிதர்கள் எதிலும் தோல்வியடைவதேயில்லை ஏனென்றால் அவர்கள் எதையும் செய்ய முயல்வதே இல்லை.

-நோர்மன் மார்க் இவான்

* எங்கே மக்கள் சுதந்திரத்திற்காகப் போராடுகிறார்களோ அங்கே அவர்களுடன் சேர்ந்து நானும் போராடுவேன்.

-கவிஞர் பைரன்

* மனதை இரண்டு சக்திகள் ஆட்டிப்படைக்கின்றன. ஒன்று நல்ல புத்தியையும் மற்றது தீய புத்தியையும் வழங்குகின்றது.

* இந்த இரண்டுக்கும் அன்றாடம் நடக்கும் போராட்டம் தான் வாழ்க்கை.

பெர்னாட்ஷா

### தத்துவ ஞானம்

மரணதண்டனை விதிக்கப்பட்ட சாக்ரட்டீசிடம் அவரது சீடன் கிரீட்டோ கேட்டார்.

"உங்களை எப்படி அடக்கம் செய்வது?'' உடனே சாக்ரட்டீஸ் சொன்னார்.

"அதற்கு நீ உண்மையான என்னைக் கண்டுபிடித்தாக வேண்டுமே.!''

பின் தொடர்ந்தார்.

'என் உடலைப் புதைப்பதைப் பற்றித்தானே கேட்கிறாய்... அப்படியானால் வழக்கம் போல் செய்...!

### மின்னல்

வானம் நடத்தும் வானவேடிக்கை
புது மழை விழாவில் பூத்த மத்தாப்பு
முந்து நூல் உதறல்
முகில் துகில் கிழிசல்
காரரக்கனில் கோணல் சிரிப்பு.
நீலச் சகதியில் நெழியும் வெண்புழு
மேகச் சாம்பலில் மின்னும் வெண்
தணல்
உரைகல்லில் மின்னும் வெள்ளி
இரேகை
வினாடியில் வற்றும் வெளிச்ச ஆறு
விண் தோட்டத்தின் வெள்ளிக்கொடிகள்
மழைச் செய்தி கூறும்
சைகை விளக்கு
கருமுகில் இமைகளின் கண்
சிமிட்டல்கள் நீரில் பிறக்கும் நெருப்பு,
நம் இயற்கை
கிறுக்கிடும் சுருக்கெழுத்திதுவே.

அப்துல் ரகுமான்

**பொறுக்கி**

### படித்ததில் பிடித்தது

## நான் வாழப்போகும் காலம்வரை

நினைவுகள் எனக்குள் உள்ளவரை...
காண என் கண்கள் உள்ளவரை...
பிடிப்பதற்கென கைகள் உள்ளவரை...
நடப்பதற்கென் கால்கள் உள்ளவரை...

அந்த நாள் வரைக்கும்
எல்லா நாட்களோடும் சேர்ந்து
உன் பெயரைத் தாங்குவேன்
அந்த நாள் வரைக்கும்
வானத்துத் தாரகைகள் அனைத்தோடும்
உன்னை நோக்குவேன்
அவர்களுடைய
கொடுவெறி விலங்குகளிடம்
நீ என்னை அழைத்துச் சென்றாலும்
அவதானமற்று
நீ சொன்ன உன்மைகளுக்காய்
நேற்றுகள் மீது பழி சொன்னபடி
சுமையாய்க் கனக்கும் அன்பை
கொடுப்பதற்காய்
ஒரு வழி தேடிக்கொள்வேன்.

ஏனென்றால்
நான் வாழ்க்கையின் மீதுதான்
சத்தியம் செய்கிறேன்
நீ வாழும்வரை
நானும் வாழ்வேன்
இரவைப் பகலாய் ஆக்கியபடி
அதனது பாதை மீது
பகட்டாரவாரத்தோடு நீ
படுத்திருக்கச்செய்யும்படி
அவளை நிர்ப்பந்தித்தபடி
உன்னுடைய முழுமையை
சூரியன் பெறும்வரை
அதன் விளிம்புகளைச்
சுற்றிக்கொண்டிருப்பேன்...
நான் வாழும் காலம்வரை.

ஆங்கிலத்தில்:- மாஸிஸி குணேனே
தமிழில்:- வின்சென்ற் புளோறன்ஸ்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்துக்குள் வந்த கொச்சியார் சுதேசிகளால் தாக்கப்பட்டனர். பிடித்துக்கட்டிவைக்கப்பட்டனர். கட்டி வைக்கப்பட்டவர்களை மீட்க கொச்சியார் பலாலி, வசாவிளான் கிராமங்களின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.

கத்திகள், கோடரிகள், மண்வெட்டிப்பிடிகள், அலவாங்குகள், தீப்பந்தங்கள், ஆயுதங்களாகத் தயாராகின. தீடீரெனச் சத்தமிட்டவாறு கொச்சியார் வசாவிளான் சந்திப் பகுதிக்கிராமங்கள் மீது 1943 புரட்டாதி மூன்றாம்திகதி பிற்பகல் தாக்குதலைத் தொடுத்தனர். பலர் தாக்கப்பட்டன. அதிகவீடுகள் எரிக்கப்பட்டன. கந்தன்முத்தன் என்ற தமிழ்ச் சுதேசி கொச்சியாரால் அடித்துக்கொல்லப்பட்டார். பலாலி விமானத்தளத்தின் தோற்றத்தோடு தொடங்கிய தமிழர் கொலை இன்றுவரை தொடர்கிறது. தோலகட்டி ஆச்சிரம பாதிரியார் அருட்திருதோமஸ் அடிகளின் தலையீட்டால் சண்டை நிறுத்தப்பட்டது. எனினும், தமிழ் சுதேசிகளின் மீதான தாக்குதல், வீடெரிப்பு, முதலியவற்றுக்கு இதுவே முதற்சம்பவமாக அமைந்து இன்றும் தொடர்கின்றது.

## விமான விபத்து

ஓடு பாதை வேலை முற்றுப்பெற்று விமானத்தளம் இயங்கத் தொடங்கியது. இப்பாதையில் விமானங்கள் இறங்கி ஏறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஸ்கை மாஸ்டர் (Sky Master) என்னும் நான்கு இயந்திர விமானம் இயந்திரக் கோளாறு ஒன்றினால் குரும்பசிட்டிப் பகுதியில் விழுந்து சிதறி எரிந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்டபனை மரங்கள் ஒரே தடவையில் முறிந்தன. விமானத்தில் இருந்த பத்துப் பேர்கருகி இறந்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் நடைபெற்ற ஒரு துர்க்குறி என மக்கள் கருதினர்.

இரைச்சலும் இடப்பெயர்ச்சியும் விமானங்களின்பேரிரைச்சல் மக்களைப் பயங்கொள்ள வைத்தது. வாழ்க்கையிலே கேட்டிராத இச்சத்தத்தால் மக்கள் பீதி கொண்டனர். சிலருக்கு மனநோய் கூடப் பிடித்ததாக அப்பகுதி மக்கள் கூறுவர் . நான்கு இயந்திர விமான விபத்தை அடுத்து பலாலி, குரும்பசிட்டி, கட்டுவன்,மயிலிட்டி, வளலாய் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தனர். தோட்ட நிலங்கள் வெறுமனே விடப்பட்டன. பயங்கரச்சத்தம் கேட்காத இடத்துக்கு மக்கள் ஓடினர்.

எப்போதாவது தங்களின் தலையின் மேல் விமானம் விழுந்து விடுமோ என்ற பீதி அவர்களுக்கு ஏற்பட்டது. என்றுமே இப்பகுதியைவிட்டு இடம்பெயராத மக்கள் இன்று ‘ஷெல்’ வீச்சுக்குப் பயந்து ஓடுவது போல் அன்றும் ஓடினர். மக்கள் இடம்பெயர்வதால் அப்பகுதிகள் சூனியப்பிரதேசமாகியது.

ஆகாயவிமானத்தால் ஆபத்தில்லை.


மக்களுக்கு விளக்கமளிக்கும் பொறுப்பும் - மீளக்குடியமர்த்தும் பொறுப்பும் கிராமத் தலைமைக்காரர் திரு. அம்பலவாணர் (விதானை) இடம் கொடுக்கப்பட்டது.

ஊரெங்கும் ‘பறை’ ஒலிக்கப்பட்டது. விமானம் ஆபத்தற்றதென்று விளக்கப்பட்டது.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர் அதற்கான ஊக்கு விப்புக்களும் வழங்கப்பட்டன. விமானப் பேரொலிக்கு மக்கள் பழகலாயினர்.

நாளடைவில் மக்கள் திரும்பவும் அவ்விடங்களுக்கு வந்து சேர்ந்தனர்.

இவ்விமானத்தளமே மக்களை இடம்பெயரச்செய்வதில் பிள்ளையார் சுழி ஆனது.



ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரர் கோவில்

வருடாந்த மகோற்சவம்

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஈச்சரங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈசுபரர் கோவில் மகோற்சவம் இம்மாதம் 17-06-2004 வியாழக்கிழமை கொடியேற்ற திருவிழாவுடன் ஆரம்பமாகி பதினாறு நாட்கள் திருவிழா நடைபெறும். இதில் முக்கிய திருவிழாவாக

29.06.2004 வேட்டைத்திருவிழாவும்
30.06.2004 பெரியசாப்பறம்
01.07.2004 தேர்த்திருவிழா
02.07.2004 தீர்த்த பூங்காவனத்துடன் நிறைவேறவுள்ளது. இக் கோவிலின்

வேட்டைத்திருவிழா மிக மிக பிரசித்தி வாய்ந்ததொன்றாகும். இதில் ஏராளமான பொதுமக்கள் நேர்த்திக்கடனாக வேடராக வேஷமிட்டு வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

முகாமைத்துவ சபை

(சி:9125)

# ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

## சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

### போட்டிக்கான இறுதித்திகதி யூன் 25 வரைநீடிப்பு.

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவித்திருந்தது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்குமாறும் அது வேண்டியிருந்தது.

இதற்கமைவாக ஏராளமான படைப்பாளிகள் குறுநாவல் போட்டியின் முடிவுத்திகதியை நீடிக்குமாறு வேண்டியதற்கிணங்க எதிர்வரும் யுன் 25 வரை குறுநாவலை அனுப்பிவைக்கவேண்டிய கால எல்லையை நீடித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்ட தாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர் வெள்ளிநாதம்,
ஈழநாதம், கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –72



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –72

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –71



செ.கௌதமன்
533/11 யூனிற்
தருமபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

சோதனைகள் பல தாண்டி சாதனைகள் படைத்திட்ட
புலிவீரர் வீரத்தை உலகிற்கு வெளிக்காட்ட
வண்ண இளம்பிஞ்சிவன் வருகிறான்
புகைப்படக் கருவியுடன்.

### பாராட்டுக்குரிய வரிகள்

ஈழம் வென்றெடுக்கும் வரலாற்றை
ஊசி முனையிலும் உட்புகுந்து
உண்மை வெளிப்பட ஊடகத்துறையில்
ஊற்றெடுப்பாய் தமிழ் மகனே.

சு.யஸ்ரின்
யாழ்ப்பாணம்.

சின்னப்பிஞ்சே! உந்தன் கைகளில் புகைப்படக் கருவியா?
காலத்தின் கோலத்தை நிதர்சனமாக்கிட நினைத்தாயோ?
சின்ன வயதில் சாதனைபடைத்திட புறப்பட்டாயோ?
உந்தன் முயற்சிக்கு எந்தன் வாழ்த்துக்கள்.

க.மதிவதனன்
மல்லாவி.

அன்று வடக்கில் நிமலராஜன்
இன்றோ கிழக்கில் நடேசன்
நானும் அவர்களின் வழியில்
கையிலே புகைப்படக் கருவியுடன்.

சி.கலைமகள்
சாவகச்சேரி.

ஒரு நடேசன் வீழ்ந்தால் - ஆயிரம்
நடேசன்கள் எழுவார்களல்லவா? சிறுவனே!
வருங்கால பத்திரிகையாளர்களில் நானும்
ஒருவன் என்று பறைசாற்றுகின்றாயோ?

ம.கலைநிலா
முல்லைத்தீவு.

ஓ! வீரத் தமிழ்க் குழந்தாய் - உனக்கு
நுட்பத்தின் துணிவரை தொட்டுவிட ஆசையோ?
பொறு பொறு புதுயுகம் படைப்போம் - அங்கு
உன் ஆசையை அரங்கேற்றுவோம்.

கே.ஹரிசெல்வகுமார்.
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகயம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

நாம் எப்போது பணிவது என்பது இயலாது ஆனால் பணிவோடு பேசலாம் இல்லையா. - வால்டேர்


நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து உங்களுக்கு தருபவர்கள்!
SH
சிவா கோல்ட் ஹவுஸ்
இல:- 56, தர்மலிங்கம் வீதி, வவுனியா. T.P:- 024 - 2223034
(சி-9904)

அழகிய பூங்கனிச்சோலைகளின் மத்தியில்
யாழ் நகரில்...

மிலேனியம்


உல்லாசப்பயணிகள் விடுதி
உங்களை அழைக்கின்றது.
நவீன வசதிகளுடன்
கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்
உங்கள் தொடர்புகளுக்கு:
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி,
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 2810 (சி-9905)

வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்த
DAIDO


சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
இல. 496,496/1
நாயகி கட்டடம்,
யாழ்சாலை பரந்தன்,
கிளிநொச்சி.
(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
(சி-9906)


மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்
குமரகுரு

உங்கள்
இன்றைய
தெரிவுக்கு...

புடைவை அழகுப்பொருள் வாணிபம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.
யாழ்சாலை, கிளிநொச்சி
(சி-9907)
SM Graphics


EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்


யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/3, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூன் மாதம் 11 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.